பெண்கள், ஆண் மக்கள், பொன்னிலும் வெள்ளியிலுமான பொருட்குவியல்கள், அடையாளமிடப்பட்ட (உயர்ந்த) குதிரைகள், (ஆடு மாடு ஒட்டகை போன்ற) கால்நடைகள், சாகுபடி நிலங்கள் ஆகியவற்றின் மீதுள்ள இச்சை மனிதர்களுக்கு அழகாக்கப்பட்டிருக்கிறது, இவை(யெல்லாம் நிலையற்ற) உலக வாழ்வின் சுகப்பொருட்களாகும். அல்லாஹ்விடத்திலே அழகான தங்குமிடமுண்டு. ***(அல்குர் ஆன் 3 : 14 )***

# வைகறை வெளிச்சம்


மே 2010 - ஜமாஅத்துல் ஆகிர் 1431

**Volume : 3 Issue 4**

ஆசிரியர்
**மு. குலாம்முஹம்மது**

துணை ஆசிரியர்
**கே.எம். இல்யாஸ் ரியாஜி**

இணை ஆசிரியர்
**எம். முஜிபுர்ரஹ்மான் உமரி**

தனி இதழ் ரூ. 10/-

**ஆண்டுச் சந்தா**
உள்நாடு ரூ.140/-
வெளிநாடு ரூ. 1000/-

பணவிடை மூலம் சந்தா செலுத்துவோர்
**வைகறை வெளிச்சம்**
என்ற பெயரிலேயே அனுப்ப
வேண்டுகிறோம்.

விளம்பரங்களுக்கு : 9444239594

**VAIGARAI VELICHAM**
235, Peters Road, Royapettah,
Chennai - 600 014.
**Phone: 044-45566909 Mob: 9444239594**
E-mail: darultrust@yahoo.com
Website : www.darulislam.in



All disputes arising out of any publication in this monthly will come under the jurisdication of Chennai courts. Private circulation to promote the Original Issue.


கவர் ஸ்டோரி



பக்கம் 34

**26/11 மும்பைத் தாக்குதல் – அஜ்மல் கேசாப் தீர்ப்பும்/பொதுநல வழக்கும்**


1. தரீக்குல் குர்ஆன் 4
2. நபிமொழி விளக்கம் 10
3. நாம் பிரிந்துவிட வேண்டாம் 14
4. 60 வயதுக்கு பிறகு 16
5. டெல்லி சிறப்பு படையின் தீவிரவாதம் 19
6. நீதிக்கான உயிர்தியாகம் - ஷாஹித் ஆஸ்மி 24
7. தலைநகர் டெல்லியில் - ஜாதி ஒழிந்தது 26
8. உயிரின் பயணம் 32
9. 26/11 மும்பைத் தாக்குதல் - அஜ்மல் கேசாப் தீர்ப்பும்/பொதுநல வழக்கும் 34
10. கம்ப்யூட்டர் கல்வி 42
11. கர்கரேயை கொலை செய்தது யார்? 49
12. கஷ்மீர் : புதைக்கப்பட்ட பள்ளத்தாக்கு 53
13. இஸ்லாத்தின் பக்கம் மக்களை அழைக்கும் இலட்சிய ஓட்டத்தில் தங்களைத் தந்த மழவர்கள் 60
14. பெய்ரூத்திலிருந்து ஜெருசலம் வரை 62

# சட்டங்கள் மனசாட்சியைத் தட்டி எழுப்புமா?

தமிழகம் / நாமக்கல் மாவட்டம் திருச்செங்கோடு வட்டம் சூரியம் பாளையம் கிராமம் இந்தப் பகுதியைச் சார்ந்தவர் சாமி நாதன். கடந்த ஏப்ரல் மாதம் இவர் மீது இரு வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

ஒன்ற சிவில் வழக்கு மற்றொன்று கிரிமினல் வழக்கு இவர் செய்த குற்றம் என்ன?

எழுபத்து ஏழுவயது நிரம்பிய முதியவரான தன்னுடைய தந்தையைத் தாக்கி வீட்டை விட்டு வெளியேற்றியிருக்கிறார் சாமிநாதன்.

வயது முதிர்ந்த காலத்தில் வாழ்வின் விளிம்பில் நிற்கும் தந்தையை சரியாகப் பராமரிக்கவில்லை கவனிக்கவில்லை என்பதற்காக பெற்றோர் முதியோர் பொருளுதவி நலச்சட்டத்தின் கீழ் வழக்கும் தந்தையைத் தாக்கியதற்காக கிரிமினல் வழக்கும் பதிவு செய்யப்பட்டுள்ளன. 2010 ஏப்ரல் 22 அன்று முக்கிய நாளிதழ்களில் இது செய்தியாகியுள்ளது.

சாமி நாதனின் தந்தை மாணிக்கம் பதினைந்து தறிகளுக்குச் சொந்தக் காரர் இவற்றில் பத்து தறிகளை மகனிடம் கொடுத்து விட்டு ஐந்து தறிகளை அவரே கவனித்து வந்திருக்கிறார்.

தந்தையிடமிருந்து பெற வேண்டியதைப் பெற்றுக் கொண்டு அவருக்குத் தர வேண்டியதைத் தர மறுத்திருக்கிறார் மகன் சாமிநாதன். சுயமாய் உழைத்திட தெம்பும் திராணியும் இருக்கின்ற முதியவர்களின் நிலையே இப்படியிருக்கிறதென்றால் நோயாடு நித்தம் நித்தம் போராடிக் கொண்டிருக்கும் முதியோரின் நிலை....?

பெற்றெடுத்துப் பேணிப்பாதுகாத்து வளர்த்த பிள்ளைகளாலேயே பெற்றோர்கள் கைவிடப்படுவதும் விரட்டியடிக்கப்படுவதும் உணவு உடை உறையுள் உள்ளிட்ட வாழ்வாதாரத் தேவைகளுக்குக் கூட வழியில்லாமல் வக்கற்று வீதியில் திரியும் நிலைக்கு அவர்கள் தள்ளப்படுவதும் எதைச் சொல்லியும் நியாயப் படுத்திட முடியாத கூடாத பெரும் அநீதி.

இந்த அநீதியைக்களைந்திடும் முயற்சியின் ஒரு பகுதியாக பிள்ளைகளால் கைவிடப்படும் பெற்றோர் தமது அடிப்படைத் தேவைகளுக்கான பொருளாதார உதவிகளைப் பெற்றிட வழிகாண்பதற்காக கடந்த 2007 ம் ஆண்டு நடுவண் அரசு புதியதோர் சட்டத்தை இயற்றியுள்ளது பெற்றோர் மற்றும் முதியோர் பொருளுதவி நலச் சட்டம் 2007 என்பது அச்சட்டத்தின் பெயர்.

இச்சட்டத்தின் பலன்கள் உரியவர்களைச் சென்றடைந்திட ஏதுவாக சில விதிகளை அச்சட்டத்தின் கீழ் 2009 ஆண்டு அரசு இணைத்துள்ளது. சாமிநாதன் மீது இந்த சட்டத்தின் கீழ் தான் சிவில் வழக்கு பதிவாகியுள்ளது.

நம்முடைய நாட்டில் முதியோருக்கென பல்வேறு சலுகைகள் வழங்கப்பட்டு வருகின்றன. ரயில் பயணக் கட்டணம் தொடங்கி வங்கி சேமிப்புக்கணக்கின் மூலம் வரும் வட்டி வரை இந்த சலுகைகள் தொடர்கின்றன. முதியோர் நலன் சார்ந்த திட்டங்களையும் சட்டங்களையும் அரசு கொண்டு வரும் போது அவற்றுக்கு சிறு அளவில் கூட எதிர்ப்புகள் எந்த மூலையிலிருந்தும் வருவதில்லை. காரணம் அவற்றை எதிர்ப்பது மனிதாபிமானத்துக்கே எதிரானது என்று மக்கள் கருதுவதுதான் அது சரியானதும் கூட.

வீட்டிற்கு வெளியே பிறரால் அரசு அலுவலகங்களால் மதிக்கப்படும் முதியோர் வீட்டிற்குள்ளே தம் பிள்ளைகளால் அவமானத்துக்கும் இழிவுக்கும் ஆளாக நேர்ந்திடும் அவலம் ஒழிந்திட சட்டங்கள் மட்டுமே போதுமா? நம்முடைய பெற்றோரை மதிப்பதும் கவனிப்பதும் நமது கடமை என்ற எண்ணத்தை நம்பிக்கையை பிள்ளைகளிடம் விதைத்திடும் வேலையைச் சட்டங்கள் செய்திடுமா? இங்குள்ள எந்தச் சட்டங்கள் மனிதனின் மனசாட்சியை தட்டி எழுப்பி வேலைவாங்கியிருக்கின்றன?

குற்றங்கள் நடந்து முடிந்த பின்னர் குற்றவாளியைத் தண்டிக்க பலஹீனமான சட்டங்களை மனிதன் வகுத்து வைத்துள்ளான். குற்றங்களே நிகழ்ந்திடாமல் தடுத்திடும் வலிமை மனிதச் சட்டங்களுக்கு இல்லை.

பேரன்பாளன் அல்லாஹ் பெற்றோரின் நலன்கள் குறித்துக் கூறிடும் வரிகள் ஆழமானவை பெற்றோருக்கு எதிரான சிந்தனையைக் கூடத் தடுத்திடும் வலிமையுள்ளவை.

அல்லாஹ் கூறுகிறான் :—

அவனைத் தவிர வேறு எவரையும் எதையும் வணங்கக் கூடாது என்றும் பெற்றோருக்கு நன்மை செய்திட வேண்டும் என்றும் உம்முடைய இறைவன் விதித்துள்ளான். அவ்விருவரில் ஒருவரோ அல்லது அவ்விருவருமோ நிச்சயமாக உம்மிடத்தில் முதுமையடைந்து விட்டால் அவர்களை சீ (உஃப்) என்று கூட சொல்ல வேண்டாம் அவ்விருவரையும் விரட்ட வேண்டாம். அவ்விருவரிடமும் கனிவான பேச்சையே பேசவேண்டும்.

இன்னும் இரக்கம் கொண்டு பணிவு எனும் இறக்கையை அவ்விருவருக்காகவும் நீர் தாழ்த்துவீராக மேலும் என் இறைவா! நான் சிறு பிள்ளையாக இருந்த போது என்னை (ப்பரிவோடு) அவ்விருவரும் வளர்த்தது போல நீ அவ்விருவருக்கும் கிருபை செய்வாயாக! என்று கூறிப்பிராத்திப்பீராக! (17 : 23,24)

இறை வணக்கத்துக்கு அடுத்த படி நிலையில் பெற்றோர் நலன் பேணுவதையே கூறியுள்ள அல்லாஹ்,

சொல்லால் வதைக்காதே!

செயலால் விரட்டாதே!

மரியாதையாகப் பேசு!

பணிந்து நட!

என்றெல்லாம் கட்டளையிடும் இறைவன் இப்படியெல்லாம் நீ அவர்களின் நலனின் அக்கறை கொண்டு செயல்பட்டால் கூட அது நிறைவான போதுமான மரியாதை அல்ல.

இறைவனிடம் அவர்களுக்காகப் பிரார்த்தனை செய்து பொற்றோருக்கு முழு நலனும் கிடைத்திட நீ பாடுபட ண்டும் என்கிறான்.

பின்னர் அடுத்த வசனத்தில் எப்படி எச்சரிக்கிறான் பாருங்கள்!

உங்களின் உள்ளங்களிலுள்ளவை பெற்றோர் மீதான மரியாதை) பற்றி உங்களின் இறைவன் நன்கறிவான். நீங்கள் நல்லவர்களாக இருந்தால்.... (சரி) ஏனெனில் அவன் மன்னிப்புக் கோருவோரை மன்னிக்கிறான் (17 : 25)

அண்ணல் நபி (ஸல்) கூறினார்கள் யாரேனுமொரு இளைஞன் யாரேனுமொரு முதியவருக்கு அவரின் வயதுக்காக மரியாதை செலுத்தினால் இவன் முதுமையடையும் போது இவனுக்கு மரியாதை தந்திடும் (இளைஞர்களை) நபர்களை அல்லாஹ் ஏற்படுத்துவான்.

எல்லா முதியோரும் யாரோ ஒரு இளைஞனின் பெற்றோர்தான்.

இதர முதியவர்களை மதிப்பவர்களே அல்லாஹ்விடம் மதிப்பைப் பெற்றிடுவார்கள் எனும் போது தம் பெற்றோரை கண்ணியமாக கவுரமாக நடத்துவது எவ்வளவு பெரிய வாய்ப்பு!

அண்ணல் நபி (ஸல்) ''ஒருவன் மூக்குடைந்து மண்ணில் வீழ்ந்து விட்டான்'' என்று மூன்று தடவை கூறிய போது தோழர்கள் அவன் யார் என்று கேட்டனர் நபி (ஸல்) கூறினார்கள் தம் பெற்றோரில் இருவரோ ஒருவரோ முதுமையிலிருக்க (அவர்களுக்கு பணி விடை செய்து அதன் மூலம் சுவனம் செல்ல முடியாதவன் (அறிவிப்பாளர் : அபூஹுரைரா (ரழி) நூல் : முஸ்லிம்

அழுத்தமான இறைநம்பிக்கை, அதனடிப்படையில் ஒரு உபதேசம், அதை ஏற்று வாழும் சமுதாயம் இவ்வாறான அமைப்பில் தான் இது போன்ற அநீதிகள் அகலும். எனவே சமூகத்தின் மனசாட்சியைச் செப்பனிடுவோம் சட்டங்கள் இயற்றிடும் முன்னர்.

இதிலும் இஸ்லாம் முன்னுதாரணமாய் இலங்குகிறது. இதை ஏற்பதில் எந்தத் தடையும் யாருக்கும் எங்குமில்லை. இதை ஏற்றால் இது போன்ற சட்டங்களுக்கும் வேலையில்லை.

# தரீக்குல் குர்ஆன் – 28

வசனம் : 37

**பின்னர் ஆதம் தன் இறைவனிடமிருந்து சில சொற்களைப் பெற்றுக்கொண்டு (அவற்றைக் கூறி இறைவனிடம் மன்னிப்பு வேண்டினார்.) எனவே இறைவன் அவரை மன்னித்தான். நிச்சயமாக அவன் தான் மிக்க மன்னிப்பவன் நிகரற்ற அன்பாளன்.**

ஆதம் நபி சொர்க்கத்தில் செய்த தவறுக்காக அவரை அல்லாஹ் கீழிறக்கினான். பூமியில் குறிப்பிட்ட காலம் வரை தங்கிட வாய்ப்பளித்தான். இங்கே மனித குலத்தின் எதிரியான ஷைத்தானுடன் மோதி கொண்டேயிருக்க வேண்டியதி2ருக்கும் என்றும் கூறியிருந்தான் என்பதை முந்தைய வசனத்தில் கண்டோம்.

அல்லாஹ்வின் கட்டளையை ஏற்று பூமிக்கு வந்த ஆதம் (அலை) தாம் செய்த குற்றத்தை எண்ணி வருந்தினார்கள். அதற்காக பாவ மன்னிப்புக் கோரிட விரும்பினார்கள். எப்படி மன்னிப்புக் கேட்டால் அல்லாஹ் நம்மை மன்னிப்பான் என்று கூடத் தெரியவில்லை அவர்களுக்கு.

பேரன்பாளன் அல்லாஹ் எப்படி மன்னிப்புக் கேட்க வேண்டும் என்று ஆதம் நபிக்குக் கற்றுக் கொடுத்தான். அதன்படி அல்லாஹ்விடம் மன்னிப்புக் கேட்டார்கள். அவன் அவர்களை மன்னித்தான்.

## என்ன சொற்கள் ?

பாவ மன்னிப்புத் தேடுவதற்குப் பயன்படுத்திட வேண்டிய சொற்கள் என அல்லாஹ் ஆதம் நபிக்குக் கற்றுத் தந்த சொற்கள் எவை என்று பல கருத்துக்கள் உள்ளன.

இப்னு அப்பாஸ்(ரழி) ஹசன் ஸயீத்பின் ஜுபைர் ளஹ்ஹாக் (ரஹ் – அலைஹிம்) ஆகியோர் கூறுகின்றனர். 7 : 23 வது வசனத்தில் இடம் பெற்றுள்ள ரப்பனா ழலம்னா அன்ஃபுஸனா வஇன்லம் தங்ஃபிர் லனா வதர்ஹம்னா லன கூனன்ன மினல் ஹாசிரீன் என்ற சொற்கள் தான்.

பொருள் : – எங்கள் இறைவா! நாங்கள் எங்களுக்கே அநீதி இழைத்துவிட்டோம். நீ எங்களை மன்னித்து எங்களுக்கு இரக்கம் காட்டாவிட்டால் நாங்கள் நஷ்டமடைந்தவர்களாகி விடுவோம்.



இந்த சொற்றொடர்களைக் கூறி இருவரும் மன்னிப்புக் கேட்டனர். அல்லாஹ் மன்னித்தான்.

(நூல் : குர்த்துபி)

முஜாஹித் (ரஹ்) கூறினார்கள் :

பொருள் : – இறைவா! உன்னைத் தவிர வேறு இறைவன் இல்லை. உன்னைப் புகழ்ந்து துதிக்கிறேன். இறைவா! எனக்கே நான் அநீதி இழைத்து விட்டேன். எனவே என்னை நீ மன்னிப்பாயாக! நீயே மன்னிப்பவர்களில் மிகச் சிறந்தவன்.

இறைவா! உன்னைத் தவிர வேறு இறைவன் இல்லை உன்னைப் புகழ்ந்து துதிக்கிறேன். இறைவா! எனக்கே நான் அநீதி இழைத்துவிட்டேன். எனக்கு கருணை காட்டுவாயாக கருணை மிக்கவர்களில் நீயே மிகச் சிறந்தவன்.

இறைவா! உன்னைத் தவிர வேறு இறைவன் இல்லை உன்னைப் புகழ்ந்து துதிக்கிறேன். இறைவா! எனக்கே நான் அநீதி இழைத்துவிட்டேன். என் பாவங்களை மன்னிப்பாயாக நீயே மிக்க மன்னிப்பவன் நிகரற்ற அன்பாளன்.

இந்த சொற்களைத் தான் அல்லாஹ்விடமிருந்து பெற்றுக் கொண்டு ஆதம் நபி பாவமன்னிப்பு வேண்டினார்கள். அவர்களின் பாவங்கள் மன்னிக்கப்பட்டன. (நூல் : இப்னு கதீர்)

பாவம் செய்து விட்ட ஒருவர் எந்த வார்த்தையைக் கூறி பாவமன்னிப்புக் கேட்க வேண்டும் என்று மூத்த அறிஞரிடம் கேட்கப்பட்ட போது அவர் கூறினார் :–

ரப்பனா ழலம்னா அன்ஃ புஸனா இன்லம் தங்ஃபிர் லனா வதர்ஹம்னா லனகூனன்ன மினல் ஹாசிரீன் எங்கள் இறைவா எங்களுக்கே நாங்கள் அநீதி இழைத்து விட்டோம்.

நீ எங்களை மன்னித்து எங்களுக்கு இரக்கம் காட்டாவிட்டால் நாங்கள் நஷ்டமடைந்தவர்களாகி விடுவோம் ( 7 : 23) என்று நம்முடைய பெற்றோர்கள் (ஆதம் ஹவ்வா அலைஹிமா) மன்னிப்புக் கோரினார்கள்.

ரப்பி இன்னீழலம்த்து நஃப்சீ ஃபங்ஃபிர்லீ என் இறைவா! எனக்கே நான் அநீதி இழைத்து விட்டேன். எனவே என்னை மன்னிப்பாயாக என்று (28 : 16) மூஸா நபி மன்னிப்புக் கேட்டார்கள்.

லாயிலாஹ இல்லா அன்த்த சுப்ஹானக்க இன்னீ குன்த்து மினழ் ழாலிமீன் உன்னைத் தவிர வேறு இறைவன் இல்லை நீ தூயவன். நான் அநியாயக்காரர்களில் ஒருவனாகி விட்டேன் (21 : 87) என்று யூனுஸ் நபி மன்னிப்புக் கேட்டார்கள் (நூல் : குர்த்துபீ)

## மன்னித்தான் :-

குற்றமிழைத்த அடியார்கள் மனம் வருந்தி மன்னிப்புக் கேட்டால் அல்லாஹ் அவர்களை மன்னிப்பான். இதை வலியுறுத்தும் இன்னும் சில வசனங்கள் :–

நிச்சயமாக அல்லாஹ் தன் அடியார்களிடமிருந்து வரும் பாவமன்னிப்பை ஏற்கிறான். (அவர்களின்) தர்மங்களை அங்கீகரிக்கிறான் என்பதை அவர்கள் அறிய வில்லையா? நிச்சயமாக அல்லாஹ் மிக்க மன்னிப்பவன். நிகரற்ற அன்பாளன். (9: 104)

யாரேனும் ஒரு தீமையைச் செய்துவிட்டு அல்லது தனக்கே அநீதி செய்து விட்டு பின்னர் (மனம் வருந்தி) அல்லாஹ்விடம் மன்னிப்புக்கு கோரினால் அவர் அல்லாஹ்வை மன்னிப்பவனாகவும் நிகரற்ற அன்பாளனாகவும் பெற்றுக் கொள்வார். (4 : 110)

பாவமன்னிப்புக் கோரி இறை நம்பிக்கை கொண்டு நற்செயல்கள் செய்வோரின் பாவங்களை அல்லாஹ் நன்மைகளாக மாற்றி விடுவான். அல்லாஹ் மிக்க மன்னிப்பவன். நிகரற்ற அன்பாளன். ( 25 : 71)

### அவரை மன்னித்தான் :

ஃபதாப அலைஹி அவரை மன்னித்தான் என்று அல்லாஹ் கூறியுள்ளான்.

நீரும் உம் மனைவியும் சுவனத்தில் குடியிருங்கள் நீங்களிருவரும் விரும்பியதை விரும்பிய படி உண்ணுங்கள் இருவரும் இம்மரத்தை நெருங்காதீர்கள். நெருங்கினால் நீங்களிருவரும் அநீதி இழைத்தவர்களாவீர்கள். அவ்விருவரையும் ஷைத்தான் சருக வைத்தான் அவ்விருவரையும் உயர்ந்த நிலையிலிருந்து வெளியேற்றினான் என்று கடந்த வசனங்களில் ஆதம் ஹவ்வா இருவரையுமே அல்லாஹ் கூறியிருந்தான்.

ஆனால் மன்னிப்பு பற்றிய இவ்வசனத்தில் ஆதம் மன்னிப்புக் கேட்டார். இறைவன் அவரை மன்னித்தான் என்று ஆதம் நபியை மட்டுமே கூறுகிறான் இது ஏன்?

## பதில் :

இதற்கு பல கோணங்களில் பதில் கூறப்பட்டுள்ளது. அவற்றுள் ஒன்று

பெண் கண்ணியமானவள். அவளின் குற்றம் மறைக்கப்பட வேண்டும் எனவே பாவமான விஷயங்களில் அவளின் பெயரை அல்லாஹ் கூறவில்லை.

ஆதம் தம் இறைவனுக்கு மாறு புரிந்தார். அதனால் வழிபிசகினார் (20 : 121) என்று தான் அல்லாஹ் கூறியுள்ளான் (நூல் : குர்த்துபீ)

தடுக்கப்பட்ட மரத்தின் கனியை இருவரும் சாப்பிட்டனர் இதுதான் நடந்த குற்றம். இந்தக் குற்றத்துக்கு ஷைத்தானே காரணம் என்று கூறும் வசனத்தில் (2:36) இருவரையும் ஷைத்தான் சருக வைத்தான் என்று கூறியுள்ள அல்லாஹ், நடந்த குற்றத்துக்கு மனிதனைக் காரணமாக்கும் போது ஆதம் மாறுபுரிந்தார் ( 26 : 121) என்கிறான். ஆணை மட்டும் கூறிவிட்டு நடந்த பாவத்தில் பெண்ணுக்குரிய பங்கை மறைத்து விட்டான்.

பெண்ணுக்கு அல்லாஹ் தரும் கண்ணியத்துக்கு இது ஒரு சான்று.

## தவ்வாப் :

இது அல்லாஹ்வின் அழகிய திருப்பெயர்களுள் (அல் அஸ்மாவுல் ஹஸ்னா) ஒன்று மிக்க மன்னிப்பவன் என்பது இதன் பொருள். தவ்பா பாவமீட்சி என்பது இதன் வேர்ச் சொல்.

தாப மன்னிப்புக் கேட்டான் மன்னித்தான் ஆகிய இரு பொருளையும் கொண்டது இதனுடைய Pastense கடந்த கால வினைச்சொல்.

ஆனால் ஒரு சிறு வித்தியாசம் தாப இலைஹி என்றால் அவனிடம் மன்னிக் கோரினான் என்று பொருள்.

தாப அலைஹி என்றால் அவனை மன்னித்தான் என்று பொருள்.

முந்தைய சொல் மனிதனுக்கும் இரண்டாவது சொல் அல்லாஹ்வுக்கும் பொருந்தக் கூடியது. மாற்றிப்புரிந்து கொண்டால் பெரும் பிழையாகி விடும்.

மேலும் இவ்வசனத்தில் இன்னஹுவத் தவ்வாஹுர் ரஹீம் என்று கூறியுள்ளான் நிச்சயமாக அவன்தான் மிக்க மன்னிப்பவன் நிகரற்ற அன்பாளன் என்பது இதன் பொருள்.

இவ்வாக்கியத்தில் இஸ்லாத்தின் மிகப்பெரிய அடிப்படையொன்று கூறப்பட்டுள்ளது. இதர மதங்களில் இல்லாத தனிச்சிறப்பு அது.

என்னவென்றால், அல்லாஹ் ஒருவனுக்கு மட்டுமே மனிதனின் பாவங்களை மன்னிக்கும் வலிமையும் ஆற்றலும் உண்டு. தனக்கு இழைக்கப்பட்ட அநீதிகளை மன்னித்திடும் உரிமை மனிதனுக்கு உண்டு.

ஆனால் மார்க்கத்தின் கட்டளைகளை மீறிய குற்றத்துக்காகவும் மனித உரிமைகளோடு தொடர்பில்லாத குற்றங்களுக்காகவும் மனிதன் அல்லாஹ்விடம் தான் மன்னிப்புக் கேட்க வேண்டும். அந்தக் குற்றங்களை மன்னிக்கும் ஆற்றல் அல்லாஹ்வுக்கு மட்டுமே உண்டு.

அல்லாஹ்வின் சார்பில் வேறுயாரும் அக்குற்றங்களுக்கான மன்னிப்பை வழங்க முடியாது. அத்தகைய தகுதியை எவருக்கும் அல்லாஹ் வழங்கவில்லை.

மடாலயங்களில் இருக்கும் மதகுருமார்கள், பாதிரிகள், அருள் தந்தைகள் என எவரும் இறைவன் சார்பில் இந்த வேலையைச் செய்ய முடியாது. இது இஸ்லாத்தின் தனிச் சிறப்பு. கிறிஸ்தவ மதம் கடவுளின் சார்பில் மன்னிக்கும் தகுதியை மத குருமார்களுக்கு வழங்கியுள்ளது.

இது ஒரு அநீதி. ஏனென்றால் எந்த மனிதனும் தான் செய்த பாவத்தை தன்னைப் படைத்த இறைவனிடம் தான் மனம் திறந்து கூறுவான்.

எத்தனை திரைகளுக்கு அப்பால் இருந்தாலும் இன்னொரு மனிதனிடம் தன் குற்றங்களை முழுமையாகச் சொல்லிடத் தயங்குவான் அப்படியே கூறினாலும் மனந்திருந்தி வாழ்ந்திட விரும்பும் ஒரு குற்றவாளியின் முன்னால் உண்மையான மன உணர்வுகளை கவலைகளை இறைவனால் மட்டுமே அறிந்திட முடியும்.

எனவே அந்த மனிதனை அவனுடைய இறைவனோடு நேரடியாக உரையாட விடுவது தான் நியாயமான செயல்.

அம் மனிதனுக்கும் இறைவனுக்குமிடையே இன்னொருவன் வந்து உட்கார்ந்து கொள்வது நியாயமல்ல. நீ இறைக்கட்டளைகளை மீறியதற்குக் கூட என்னிடம் தான் மன்னிப்புக் கேட்க வேண்டும் என்று அவரிடம் இன்னொரு மனிதன் கூறுவதும் குறுக்கே நிற்பதும் குற்றமன்றி வேறல்ல.

இந்த அநீதிக்கு இஸ்லாத்தில் இடமில்லை. ஏனெனில் இங்கே புரோகிதமில்லை.

**ரஹீம் : -**

நிகரற்ற அன்பாளன் என்பது இதன் பொருள். பாவங்களை மன்னிப்பவன் (தவ்வாப் கஃபூர்) என்று கூறும் இடங்களில் நிகரற்ற அன்பாளன் எனும் சொல்லும் சேர்ந்தே பல இடங்களில் திருக்குர்ஆனில் காணப்படுகிறது. இங்கே (2 : 37)யும் இவ்வாறு கூறியுள்ளான் அல்லாஹ்.

இதன் பொருள் : செய்த பாவங்களை எண்ணி மனம் வருந்தி நீங்கள் மன்னிப்புக் கேட்டு விட்டதால் நான் உங்களை மன்னிக்க வேண்டும் என்பது என் மீது கடமையல்ல. நான் விரும்பினால் மன்னிக்காமல் உங்களை தண்டிக்க முடியும்.

அல்லாஹ் கூறுகிறான் வானங்களிலும் பூமியிலும் உள்ளவையெல்லாம் அல்லாஹ்வுக்கே உரியவை. தான் நாடியவர்களுக்கு மன்னிப்பு வழங்குகிறான் தான் நாடியோரைத் தண்டிக்கிறான் அல்லாஹ் மிக்க மன்னிப்பவன் நிகரற்ற அன்பாளன் ( 3 : 129)

எனவே நான் உங்களை மன்னிப்பது உங்கள் மீது இரக்கப்பட்டுத் தான். ஏனெனில் நான் நிகரற்ற அன்பாளன்.

## தவ்பா என்றால் என்ன?

தவ்பா என்ற சொல்லுக்கு திரும்புதல், மீளுதல் என்று பொருள் பாவங்களை கைவிட்டு மனந்திருந்தும் ஒருவர் இகழ்ச்சிக்குரிய நிலையிலிருந்து புகழ்ச்சிக்குரிய நிலைக்குத் திரும்புகிறார். அல்லாஹ்வை விட்டு வெகு தூரத்திலிருந்தவர் அவனின் நெருக்கத்தை நோக்கித் திரும்புகிறார்.

மனிதன் செய்யும் பாவங்கள் இருவகை யுண்டு [1]அல்லாஹ்வுக்கும் அடியானுக்கும் மத்தியிலுள்ள உறவில் மனிதன் வரம்பு மீறுவது [2]மனித உரிமை மீறல்கள்.

முதல்வகைப் பாவங்கள் மன்னிக்கப்பட வேண்டுமானால் அதற்கு மூன்று நிபந்தனைகள் உள்ளன.

1. உடனடியாக அந்தப் பாவத்தை விட்டொழிக்க வேண்டும்

2. அதை செய்ததை எண்ணிவருந்த வேண்டும்.

3. இனி ஒரு போதும் அந்தப் பாவத்தைச் செய்ய மாட்டேன் என்று உறுதியெடுத்துக் கொள்ள வேண்டும்.

இந்த மூன்றில் ஒரு நிபந்தனையை மீறினாலும் அந்தப் பாவ மீட்சி முழுமை பெறாது. நிறை வேறாது.

மனித உரிமைகள் மன்னிக்கப்பட வேண்டுமானால் மேற்கூறப்பட்ட மூன்று நிபந்தனைகளுடன் நான்காவது ஒரு நிபந்தனையும் உண்டு. பாதிக்கப்பட்ட மனிதன் மன்னிக்க வேண்டும்.

ஒருவரின் செல்வத்தை மற்றொருவர் அநியாயமாகப் பறித்திருந்தால் அப்பொருளை அவரிடம் திருப்பித் தர வேண்டும்.

அவரைப்பற்றி அவதூறு பேசியிருந்தால் அவரிடம் மன்னிப்புக் கேட்க வேண்டும் அல்லது அவதூறு

பேசியதற்கான தண்டனையை 80 கசையடியைப் பெற்றிட முன்வர வேண்டும்.

அவரைப் பற்றிப்புறம் பேசியிருந்தால் அவரிடம் சென்று அந்தப் பாவத்திலிருந்து தம்மை விடுவித்திடும் படி கோர வேண்டும்.

செய்த பாவம் சிறியதோ பெரியதோ எல்லாப்பாவங்களை விட்டும் தவ்பா கேட்டு மீள்வது அவசியமான கடமை. காலம் கடத்தக் கூடாது.

ஒருவர் கடந்த காலங்களில் செய்த பாவங்களை இனி ஒரு போதும் செய்யப் போவதில்லை என்று உறுதி எடுத்துக் கொண்டார். அல்லாஹ்விடம் மன்னிப்பும் கேட்டார் அது மனித உரிமை மீறல் என்பதால் பாதிக்கப்பட்டவரிடமும் மன்னிப்புக் கேட்டார்) ஆனால் அந்தப் பாவத்தை நினைத்து இன்னும் கிளுகிளுப்பு அடைகிறார். வருந்தவில்லை என்றால் அவரது தவ்பா நிறைவு பெறாது.

செய்த பாவத்தை எண்ணி வருந்தினார் மன்னிப்பும் கேட்டார். ஆனால் இனியொரு வாய்ப்புக் கிடைத்தால் அந்தப் பாவத்தை செய்திட அவர் மனம் விரும்புகிறது என்றால் அதுவும் நிறைவேறாத பாவ மீட்சியே.

சுருங்கச் சொன்னால் மேல் கூறப்பட்ட நிபந்தனைகளுக்குட்பட்டதே அழகான பாவமீட்சி. இத்தகைய பாவ மீட்சியையே அல்லாஹ் விரும்புகிறான்.

ஓரிறை நம்பிக்கை கொண்டோரே! (தவ்பத்தன் நசூஹா) கலப்பற்ற தூய பாவ மீட்சியை அல்லாஹ்விடம் பெற்றுக்கொள்ளுங்கள் (66:8)

எல்லாப் பாவங்களையும் தான் விரும்பினால் அல்லாஹ் மன்னிக்கிறான் எனினும் அதற்கென ஒரு கால அவகாசத்தை வைத்துள்ளான். இது மூன்று வகை

1 ஒரு தனி மனிதனுக்கான தவ்பாவின் அவகாசம் அவனின் உயிர் தொண்டைக் குழியை அடையும் வரை.

அல்லாஹ் கூறுகிறான் : யார் பாவங்களைச் செய்து கொண்டேயிருந்து முடிவில் அவர்களை மரணம் நெருங்கிய போது நிச்சயமாக நான் இப்போது பாவமன்னிப்புத் தேடுகிறேன் என்று கூறுகிறார்களோ அவர்களுக்கும் இறைவனை மறுத்த நிலையிலேயே மரணிப்பவருக்கும் பாவமன்னிப்பு இல்லை இவர்களுக்கு துன்புறுத்தும் தண்டனையை நாம் தயாரித்து வைத்துள்ளோம். (4 : 18)

நபி (ஸல்) கூறினார்கள்: மரண வேளையில் தொண்டைக்குழியை உயிர் அடையும் வரை ஒரு அடியானின் தவ்பாவை அல்லாஹ் ஏற்றுக் கொள்வான் (அறிவிப்பாளர் : அப்துல்லாஹ் பின் உமர் (ரழி) நூல் : திர்மிதி)

2. பாவத்தில் மூழ்கித் திளைக்கும் சமுதாயம் அதற்குரிய தண்டனையைக் காணும் முன்னரே தவ்பா செய்து விட வேண்டும் தண்டனையின் அடையாளங்களைக் கண்ட பின் வேண்டும் தவ்பா ஏற்கப்படாது.

அல்லாஹ் கூறுகிறான் : நம்முடைய வேதனையைக் கண்ட போது அவர்கள் கொண்ட நம்பிக்கை அவர்களுக்குப் பலனளிக்க வில்லை. இது அல்லாஹ்வின் வழி. அவனுடைய அடியார்களிடத்தில் இந்த வழிமுறையே நடந்துள்ளது. அந்நேரத்தில் காஃபிர்கள் நஷ்டத்தையே அடைந்தார்கள் ( 40 : 85)

3. மொத்த மனித சமுதாயத்தினுடைய தவ்பாவின் இறுதிக்கட்டம் சூரியன் மேற்குத் திசையில் உதிக்கும் வரை.

நபி (ஸல்) கூறினார்கள் சூரியன் மேற்குத் திசையில் உதிக்கும் முன்னர் ஒருவர் தவ்பா செய்தால் அல்லாஹ் அதை ஏற்றுக் கொள்வான் (அறிவிப்பாளர் அபூஹுரைரா (ரழி) நூல் : முஸ்லிம்)

அல்லாஹ் கூறுகிறான் : உம்முடைய இறைவனின் சில சான்றுகள் வரும் அந்நாளில் கொள்ளும் நம்பிக்கை எந்த பலனையும் அவர்களுக்கு தராது (6:158)

இன்ஷா அல்லாஹ்

தொடரும்


**இறைவனின் அழகிய வழி காட்டுதல் அனைவருக்கும்**

மனிதன் இந்த உலகில் எப்படி வாழ்ந்திட வேண்டும்?

இந்த வினாவிற்கான முழுமையான விடையே திருக்குர்ஆன்

இதனை அறிந்திட வேண்டியது நமது கடமை.

அறிந்திட விரும்புவோர் இலவசமாக திருக்குர்ஆன்
தமிழ் மொழி பெயர்ப்பை பெற்றிட கீழ்காணும் முகவரிக்கு எழுதுங்கள்!

**தாருல் இஸ்லாம் பவுண்டேஷன் டிரஸ்ட்**

235, பீட்டர்ஸ் சாலை, இராயப்பேட்டை, சென்னை – 600 014

**குறிப்பு :**

**இந்த இலவச விநியோகம் முஸ்லிம்களுக்கில்லை.**

# மேட்டுப் பாளையத்தில்

# கர்கரேயைக் கொலை செய்தது யார் ? நிகழ்ச்சி !




இந்தியாவில் குண்டு வெடிப்புகளைத் தொடர்ந்து நடத்திக் கொண்டிருந்தன இந்துத்துவ தீவிரவாத அமைப்புகள். ஆனால் பழியை முஸ்லிம்கள் மீது போட்டன.

இந்துத்துவ தீவிரவாத அமைப்புகளின் தேசத்துரோகத்தை மனித இனத்திற்கெதிரான கொடூர குற்றங்களை தெளிவாக்கினார் கர்கரே! அதோடு இந்தக் குண்டு வெடிப்புகளுக்கும் மத்திய உளவுத் துறைக்கும் தொடர்பிருப்பதையும் கண்டெடுத்தார் கர்கரே! இதில் பிரபல அரசியல்வாதிகளும் சிக்கிக் கொள்ளவிருந்தார்கள்.

அனைத்துக் குற்றவாளிகளையும் ஒன்றாய்க் காப்பாற்றிட கர்கரேயைக் கொலை செய்து விடுவது என முடிவு செய்தார்கள் இந்த உண்மைகளையெல்லாம் உள்ளடக்கிய நூல் கர்கரேயைக் கொலை செய்து யார்? என்ற நூல்.

இந்த உண்மைகளை தமிழ் கூறும் நல்லுள்ளங்களுக்கு அறியத் தரும் அரும்பணியை வேர்கள் வெளியீட்டகமும் தாருல்இஸ்லாம் ஃபவுண்டேஷன் டிரஸ்டும் செய்து வருகின்றது.

தமிழ் மொழியாக்கத்தின் முதல் வெளியீடு மதுரையில் நடைபெற்றது. நூலாசிரியர் முஷ்ரிஃப் அவர்கள் முன்வந்து நூலை மதுரையில் வெளியிட்டார்கள்.

தொடர்ந்து திருச்சி, நாகர்கோவில், விழுப்புரம் ஆகிய இடங்களில் நூல் அறிமுக நிகழ்ச்சி நடைபெற்றது.

இந்த வரிசையில் 25.4.2010 இல் மேட்டுப்பாளையத்தில் நூல் அறிமுகம் நடைபெற்றது.

மேட்டுப் பாளையத்தின் மையப்பகுதியில் அமைந்த ராணி மஹாலில் இந்த நூல் அறிமுகம் நடைபெற்றது. நிகழ்ச்சி சரியாக அறிவித்தபடி 7 மணிக்குத் தொடங்கப்பெற்றது. முகீல் அவர்கள் கிராஅத் ஓத மேட்டுப்பாளையம் சலீம் அனைவரையும் வரவேற்றார்கள்.

டி.எம். உமர்ஃபாரூக் அவர்கள் ஒடுக்கு முறை களம் அதற்கெதிரான போராட்டங்களும் என்ற தலைப்பில் உரை நிகழ்த்தினார்கள்.

தொடர்ந்து இலக்கியச்சுடர் மு.குலாம் முஹம்மத் அவர்கள் நூலை அறிமுகப்படுத்தினார்கள். நூல் அறிமுகத்தைத் தொடர்ந்து நூலை மு. குலாம் முஹம்மது வெளியிட வழக்கறிஞர் பழனிச்சாமி அவர்கள் பெற்றுக் கொண்டு உரையாற்றினார்கள்.

சகோதரர் குலாம் முஹம்மத் அவர்கள் தலைமையில் மனித நீதி பாசறை பீடுநடை போட்ட போது மேட்டுப்பாளையம் பகுதியில் ஏற்பட்ட சிக்கல்களின் போது அவற்றை எதிர்கொண்டார் பாசிச எதிர்ப்பாளர் நீதிக்காக போராடுவோர் என்ற வகையில் பழனிச்சாமி அவர்கள். அவர் நூலைப் பெற்றுக் கொண்டு உரையாற்றியது மிகவும் பொருத்தமாக அமைந்தது.

ரூபாய் 150/– விலையுள்ள நூல் ரூபாய் 100/–க்கு அரங்கத்தில் விற்பனை செய்யப்பட்டது.

# கர்கரேயைக் கொலை செய்தது யார்? நிகழ்ச்சி

**விழுப்புரத்தில், 11.4.2010 இல் இந்த நிகழ்ச்சி நடைபெற்றது.**

நிகழ்ச்சியில் செஞ்சி இமாம் சித்தீக் முஹம்மத் பாக்கவி அவர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள்.

நிகழ்ச்சியில் வரலாற்றுக் திரிவுகள் என்ற தலைப்பில் அஹ்மத் ரியாஸ் முக்தார் அவர்கள் உரையாற்றினார்கள்.

"கர்கரேயைக் கொலை செய்தது யார்" என்ற தலைப்பில் மு. குலாம் முஹம்மத் அவர்கள் உரையற்றினார்கள்.

நிகழ்ச்சியை ஹைதர் அலீ அவர்கள் தாருல் இஸ்லாம் சார்பில் ஏற்பாடு செய்திருந்தார்கள்.

இவ்வாறு கர்கரேயைக் கொலை செய்தது யார்? என்ற நிகழ்ச்சி தமிழகத்தில் வலம் வந்து கொண்டிருக்கின்றது.

– ந.நி.

# நாகர்கோவிலில்.

கர்ரேயைக் கொலை செய்தது யார்? நூல் அறிமுக நிகழ்ச்சி

கார்கரேயைக் கொலை செய்தது யார்? என்ற நூல் தமிழகத்தைப் பொறுத்தவரை ஒரு பெரும் இயக்கமாக மாறிவருகின்றது.

ஆமாம் இந்தியாவில் நடைபெற்ற பல்வேறு குண்டு வெடிப்புகளை நடத்தியது இந்து தீவிரவாத அமைப்பு அபிநவ்பாரத். இந்த அமைப்புதான் கர்ரேயையும் கொலை செய்தது. அதற்கு மத்திய உளவுத்துறை தேவையான அடிப்படைகளை அமைத்துத் தந்தது என்ற உண்மைகள் தமிழகமெங்கும் பரப்பப்பட்டு வருகின்றன.

இந்த நிகழ்ச்சி நாகர்கோவிலில், 9.4.2010 அன்று வ.ஊ.சி அரங்கில் நடைபெற்றது நிகழ்ச்சியில் குமரி மாவட்ட திராவிடக் கழகத் தலைவர் சங்கர நாராயணன் தலைமை தாங்கினார். நிகழ்ச்சியில் வேர்கள் வெளியீட்டகத்தின் தாளாளரும், தாருல் இஸ்லாம் பவுண்டேஷன் டிரஸ்டின் தலைவருமான இலக்கியச் சுடர் மு. குலாம் முஹம்மத் அவர்கள் கர்கரேயைக் கொலை செய்தவர்கள் யார் என்பதை விளக்கிப் பேசினார்.

நூலை வேர்கள் பதிப்பகம் வெளியிட தி.க. தலைவர்கள் சங்கர நாராயணன் பெற்றுக் கொண்டார்.

நூல் விற்பனை சிறப்பாக அமைந்தது முஹம்மத் அலீஜின்னா குமரி மாவட்ட தாருஸ் இஸ்லாம் பவுண்டேஷன் தலைவர் நிகழ்ச்சிக்கு தலைமை தாங்கினார். நிகழ்ச்சி அமைப்பு தாருல் இஸ்லாம் பவுண்டேஷன் டிரஸ்ட் ந.நிளளள

# அல்லாஹ் எப்போது மகிழ்ச்சி அடைகிறான்?

அண்ணல் நபி (ஸல்) கூறினார்கள் அல்லாஹ்வின் அடியார்களில் ஒருவர் அவனிடம் (தவ்பா) பாவ மன்னிப்புக் கேட்கும் போது அதற்காக அல்லாஹ் மிக்க மகிழ்ச்சியடைகிறான்.

உங்களில் ஒருவர் ஒரு திறந்த வெளியில் தனது வாகனத்துடனிருந்தார். திடீரென அது அவரை விட்டுத் தப்பிச் சென்று விட்டது. அதில் தான் அவருடைய உணவும் பானமும் இருந்தது.

(அங்கு மிங்கும் தேடிப்பார்த்து ஓய்ந்தார்) தனது வாகனம் திரும்பக் கிடைக்குமென அவர் நம்பவில்லை. நம்பிக்கையிழந்த நிலையில் ஒரு மரத்தடிக்கு வந்து அதன் நிழலில் படுத்துவிட்டார்.

தூக்கத்திலிருந்து விழித் தெழுந்து பார்த்தபோது) திடீரென அவரது வாகனம் அவருக்கருகில் நின்று கொண்டிருந்தது. உடனே அவர் அதன் கடிவாளத்தைப்பிடித்துக் கொண்டார்.

அப்போது ஏற்பட்ட கடுமையான மகிழ்ச்சியில் இறைவா! நீ என் அடிமை நான் உன் இறைவன் என்று கூறிவிட்டார். அளவற்ற மகிழ்ச்சியில் தவறுதலாகக் கூறிவிட்டார்.

இந்த மனிதர் இப்போது அடையும் மகிழ்ச்சியை விட அதிகமாக ஒரு அடியான் அல்லாஹ்விடம் பாவமன்னிப்புக் கேட்கும் போது அல்லாஹ் மகிழ்ச்சி அடைகிறான்

(அறிவிப்பாளர் : அனஸ் (ரலி)
நூல் முஸ்லிம்

தவ்பா என்பது அல்லாஹ் தன்னுடைய அடியார்களுக்கு வழங்கும் பாவமன்னிப்பு (இது குறித்த மேலதிக விபரங்களுக்கு இம்மாத தரீக்குல் குர்ஆன் காண்க)

இதற்காக அல்லாஹ் ஏன் மகிழ்ச்சி அடைகிறான்? மன்னிப்புக் கிடைத்தால் அதற்காக மனிதன் தான் மகிழ்ச்சி அடைவான். மனிதனும் கூட மன்னிப்புக் கிடைத்த பின்னர் தான் மகிழ்ச்சி அடைவான்.

ஆனால் அல்லாஹ்வோ அவனிடம் மனிதன் மன்னிப்புக் கேட்கும் போதே மகிழ்ச்சி அடைகிறான். அதுவும் சாதாரண மகிழ்ச்சியல்ல. பெருமகிழ்ச்சி அடைகிறான்.

இது ஏன்? எதனால்?

இந்தக் கேள்விக்கு விடை காணும் முன்னர் இன்னொரு விபரத்தையும் நாம் அறிந்தால் நல்லது.

தவ்பா என்றால் திரும்புதல் என்று பொருள் ஷரீஅத்தின் சொல் வழக்குப்படி அல்லாஹ்வை நோக்கித்திரும்புவதற்கே தவ்பா என்று கூறப்படுகிறது. இவ்வாறு அல்லாஹ்வை நோக்கி திரும்புவோர் மூன்று வகையுண்டு.

1. இந்தப் பாவச் சுமைகளோடு அல்லாஹ்வை சந்தித்தால் அவன் நம்மை தண்டிப்பானே என்று பயந்து திருந்தி வாழ்ந்திட முயற்சிப்பதால் மன்னிப்புக் கேட்கலாம். இவர் “தாயிப்” பாவ மீட்சி பெற்றவராவார்.

2. இறைவன் விரும்பாத காரியத்தை செய்துவிட்டால் மறுமை நாளில் எந்த முகத்தோடு அல்லாஹ்வை சந்திப்பேன் என்று வெட்கப்பட்டு வாழ்பவர்.

இவர் “முனீப்” அல்லாஹ் நோக்கி முகம் திருப்பிய வராவார்.

3. அல்லாஹ்வின் கம்பீரத்தைப் பெருமைப்படுத்துவதற்காக இதர செயல்பாடுகளை ஏறெடுத்தும் பார்க்காமல் வாழ்பவர்.

இவர்கள் “அவ்வாப்” இறைவனை நோக்கியவராவார்.

(நூல் : தலீலுல் ஃபாலிஹீன், ஷரஹ் ரியாளுஸ்ஸாலிஹீன்)

ஒரு அடியான் பாவமன்னிப்புக் கேட்க்கும் போதே அல்லாஹ் ஏன் மகிழ்ச்சி அடைகிறான் என்ற கேள்விக்கு இப்போது கிடை காண்போம்.

அடியார்கள் மீது அல்லாஹ் வைத்துள்ள அளவற்ற அன்பின் அடையாளம் அது! அவன் அளவற்ற அருளாளன். நிகரற்ற அன்பாளன்.

பூமியில் மனிதனுக்கு எல்லா வாய்ப்பு வசதிகளையும் வழங்கி இது ஹலால் இது ஹராம் என்று சட்டங்களையும் போட்டான். சட்டங்களை எடுத்துக் கூறி மனித சமுதாயத்தை வழி நடத்திட நபிமார்களையும் அனுப்பிவைத்தான்.

இவற்றைத் தாண்டி ஒருவன் குற்றமிழைத்துவிட்டால் அவனை தண்டித்தே தீருவேன் என்று கூறாமல் தவறை உணர்ந்து மன்னிப்புக் கேட்டால் மன்னிப்பேன் என்கிறான் அல்லாஹ்.

இதுவும் அல்லாஹ்வுடைய அன்பின் வெளிப்பாடு தான்.

அல்லாஹ்வுடைய நேர்வழியை மறந்து ஷைத்தானுடைய தீய வழியைத் தேர்ந்தெடுத்து அதிலே சுகங் கண்டு வாழும் மனிதன் ஷைத்தானைப் போலவே அல்லாஹ்விடமிருந்து விலகிச் செல்கிறான். அவனது அருளைப் பெற்றிடும் தகுதியை இழக்கிறான்.

பாவங்களின் விளைவுகளையும் அதன் தண்டனைகளையும் அறியாமல் இப்படி அநியாயமாக நரகத்தை நோக்கி விரைகின்றானே இவன் திருந்த மாட்டானா? என்று அல்லாஹ் இவன் மீது கவலைப்படுகிறான். இதற்குக்காரணம் அல்லாஹ் இம்மனிதன் மீது கொண்டுள்ள அன்பே.

இவ்வாறாக பாவப்புதைச் சேற்றில் மூழ்கி அழிந்து கொண்டிருந்தவன் திடீரென தவ்பா செய்திட முன்வருகிறான்.

தண்டனைக்குப் பயந்தோ...

இறைவனைச் சந்திக்க வெட்கப்பட்டோ...

இறைவனின் கண்ணியத்தை மதித்தோ...

காரணம் எதுவாகவுமிருக்கட்டும்

இனி அம்மனிதன் பாவங்களே செய்யப்போவதில்லை அதற்குக் காரணம் அல்லாஹ்

உலக இழிவுக்கோ அவச்சொல்லுக்கோ அஞ்சி அல்ல. ஒரு வேளைதிடீரென இவன் திருந்துவதால் கூட உலகம் இவனை பழிக்கலாம் சக நண்பர்கள் பெரிய "பக்திப்பழம்" "துறவி" என்றும் எகத்தாளம் செய்யக் கூடும்.

எனினும் இவன் திருந்தினான். அதற்குக் காரணம் அல்லாஹ்.

இது நடந்துவிடாதா என்று நீண்ட நாள் ஏங்கிகாத்துக்கிடந்த ஒரு காரியம் நடந்து விட்டால் அதனால் ஏற்படும் மகிழ்ச்சியை விவரிக்க உலகின் எந்த மொழியிலும் வார்த்தைகள் இல்லை.

ஆனந்தமாக இருக்கும் போது கண்ணீர் வருகிறது. அந்த ஆனந்தம் அளவு கடந்து விட்டதைக் கண்ணீர் சொல்கிறது. மிகுதியான மகிழ்ச்சியில் நாக்கு தடுமாறி வார்த்தைகள் தவறாக வருகின்றன. அந்த உளறல் உச்சபட்ச மகிழ்ச்சியின் அடையாளம். இந்த ஆனந்தம் சந்தோஷம் இவற்றை விட அதிகமாக அல்லாஹ் பேரானந்த மடைகிறான் ஒரு அடியான் அல்லாஹ்வுக்காக பாவங்களைக் கைவிட்டு அல்லாஹ்வை நோக்கித்திரும்பும் போது.

ஷைத்தானின் மாயவலையில் சிக்கி சீரழியக்காத்திருத்தவன், எப்போது திருந்துவான் என்று எதிர்பார்க்கப்பட்டவன், திருந்தினான். எனவே அல்லாஹ் அடையும் மகிழ்ச்சிக்கு அளவே இல்லை.

இதே கருத்தை வேறொரு உதாரணத்துடன் பெருமானார் (ஸல்) கூறினார்கள்.

நீண்ட நாட்களாக குழந்தையில்லா மலிருந்த மலடன் ஒரு குழந்தைக்குத் தந்தையாகும் போது அடையும் மகிழ்ச்சியைவிட வெகுநாட்களாகத் தேடியும் கிடைக்காத தொலைந்த பொருளைக் கண்டு பிடித்தவன் அடையும் மகிழ்ச்சியை விட, கடும் தாகத்திலிருந்தவன் தண்ணீரைக் கண்டவுடன் அடையும் மகிழ்ச்சியை விட தன்னுடைய அடியான் தவ்பா செய்யும் போது அல்லாஹ் மிக அதிகமாக மகிழ்ச்சி அடைகிறான். (அறிவிப்பாளர் : அபூஹுரைரா (ரழி) நூல் : இப்னு அஸாகிர்)

பாவங்களைச் செய்வதால் கிடைக்கும் அற்பசுகத்தில் மகிழ்ச்சியடையும் நாம் நம்மைப்படைத்துப் பரிபாலிக்கும் அல்லாஹ்வுக்கு எப்போது மகிழ்ச்சியைத் தரப் போகிறோம்?

அல்லாஹ் கூறுகிறான் ஓரிறை நம்பிக்கையாளர்களே! அல்லாஹ்விடம் தூய தவ்பாவைச் செய்யுங்கள் (அப்படிச் செய்தால்) உங்கள் இறைவன் உங்களின் பாவங்களை உங்களை விட்டுப் போக்குவான் சுவனச் சோலைகளில் உங்களை நுழைய வைப்பான். அவற்றின் கீழே நதிகள் ஓடிக்கொண்டிருக்கும் (66:8)

மன்னிக்க அவன் தயார்! மன்னிப்புக் கேட்க நாம் தயாரா?

– இல்யாஸ் ரியாஜி


வெளிவந்த இரண்டே வாரங்களில் முதல் பதிப்பின் பிரதிகள் விற்று தீர்ந்த

தற்போது பரபரப்பான விற்பனையில் உள்ள தமிழில்,,,,

**கர்கரேயை கொலை செய்தது யார்?**

இரண்டாம் பதிப்பு.

வாங்கி விட்டீர்களா?

தொடர்புக்கு

**வேர்கள் வெளியீட்டகம்**

044-45566909

பிஸ்மில்லாஹிர் ரஹ்மானிர் ரஹீம்

சர்வீஸ்
விமான டிக்கெட்
விசிட் விசா
குவைத், புருனை,
ஸ்டாம்பிங்
டூர் பேக்கேஜ்

பயண உலகில் சிறந்த வழிகாட்டி

# ஏரோ வைடு டிராவல்ஸ்

சவுதி விசா வைத்திருப்பவர்கள் கவனத்திற்கு

SAUDI WAKALA CARD
بطاقة الوكالة السعودية

رسنا إنتر برائزز
المعترف لدى حكومة الهند وزارة الشؤون الخارجية
رقم التسجيل:أيه ٠٣١٠/موم/٣٠٠/٤ ٣/٤/٧٨٧٠/٢٠٠٦

* Saudi Arabian Consulate, Mumbai accept wakkalah from any Recruitments office.

## RASNA ENTERPRISES

GOVERNMENT OF INDIA,
MINISTRY OF LABOUR
REGD.CERTIFICATE NO.
A0310/MUM/PER/300/4 3/4/7870/2006

எங்கள் வக்கலாவில் சிறந்த முறையில் சர்வீஸ் செய்து அனுப்புகிறோம்!

தலைமை அலுவலகம் :

எண் 6, முதல் மாடி, சிந்தூர் பிளாஸா, 42, மாண்டியத் ரோடு, எழும்பூர், சென்னை-8.
தொலைபேசி : +91 44 42148723 / 42146552

## கிளைகள் :

மயிலாடுதுறை
3/43, வண்டிக்கார தெரு,
மயிலாடுதுறை-1.
தொலைபேசி : 04364-225780/225740
தொலைநகல் : 0091 4364 242100

கூத்தாநல்லூர் - லட்சுமாங்குடி
1, முதல் மாடி, எம்.ஜி.காம்ப்ளக்ஸ்,
திருவாரூர் மெயின்ரோடு.
தொலைபேசி : 04367-230341
இ.மெயில் : aerowidetravel@yahoo.com

பிஸ்மில்லா ஹிர் ரஹ்மானிர் ரஹீம்

**Since 1993**

# அல்ஹரமைன்
# ஹஜ் சர்வீஸ் (பி) லிட்

(இந்திய மற்றும் சவுதி அரசு அங்கீகாரம் பெற்றது)

**REGN NO. M/HAJ / REGN / PTO / TN - 6/36/2009**

## புனித ஹஜ் - 2010 மற்றும் உம்ரா அழைப்பு

- ஹரம் ஷரீஃபிற்கு மிக அருகே தங்கும் இடவசதி.
- தரமான தமிழக உணவு, தெளிவான வழிகாட்டுதல்.
- 17 ஆண்டுகள் அனுபவம் நிறைந்த திட்டமிட்ட பயண ஏற்பாடுகள்.

## ஹஜ் பயணத் தொகை ரூ.2,25,000/-

- ரஜப் மாதம் வரை மாதா மாதம் (15 நாட்கள்) உம்ரா பயண ஏற்பாடு

## உம்ரா பயணத் தொகை

**ரூ. 57,500/-** | **ரூ. 52,000/-** | **ரூ. 48,000/-**

உம்ரா பயணத் தொகையில் உள்ள வித்தியாசத்திற்கேற்ப தங்குமிடம் மாறுபடும்.

**மன நிறைவான ஹஜ் மற்றும் உம்ரா பயண ஏற்பாடுகளுக்கு அன்புடன் அழைக்கிறோம்.**

எமது புதிய தலைமையக முகவரி

**அல் ஹரமைன் ஹஜ் சர்வீஸ் (பி) லிட்**
எண்.10, (பழைய எண்.73)
தாதா முத்தியப்பன் தெரு, (பிராட்வே)
பிளாட் எண்.6, முதல் தளம்,
கொத்தவால் சாவடி காவல்நிலையம் எதிரில்
ஜார்ஜ் டவுன், சென்னை–600 001.
போன் : 044 – 25242323, 25242324

<u>கிளை</u>

9, முதல்மாடி, நஜீம் காம்ப்ளக்ஸ்,
28/5, டவுன் எக்ஸ்டன்ஸன், மயிலாடுதுறை – 609001.
நாகை (Dt) போன் : 04364 – 224221

Email : alharaminehaj@yahoo.com web : www.hajdetails.com / al-haramine


குறிப்பு : பயணக் கட்டணங்கள் ஏர்லைன்ஸ் மற்றும் எக்ஸ்சேன்ஞ்ச் விலையேற்ற அடிப்படையில் மாற்றத்திற்குரியது.

# அனாவசியமாக கேள்வி கேட்கக் கூடாது

அனஸ் (ரழி) அவர்கள் அறிவிக்கிறார்கள் நபித்தோழர்கள் நபியிடம் ஒருமுறை கேள்விகள் கேட்டார்கள். கேள்வி மேல் கேள்விகளைக் கேட்ட போது கோப மடைந்த பெருமானார் மிம்பரில் ஏறினார்கள். பின்னர் கூறினார்கள். இன்று நீங்கள் எதுபற்றி என்னிடம் கேட்டாலும் அதற்கு நான் விளக்கம் தராமலிருக்கப்போவதில்லை.

அறிவிப்பாளர் அனஸ் (ரழி) கூறினார்கள். நான் வலப்புறமும் இடப்புறமும் திரும்பிப் பார்த்தேன். எல்லோருமே தமது தலைமை தம் ஆடைகளால் மூடிக் கொண்டு அழுது கொண்டிருந்தனர். பின்னர் உமர் (ரலி) எழுந்து அல்லாஹ்வை நாங்கள் இறைவனாகவும் முஹம்மது நபி (ஸல்) அவர்களை இறைத்தூதராகவும் திருப்தியுடன் ஏற்றுக்கொண்டோம். குழப்பங்களை விட்டும் அல்லாஹ்விடம் பாதுகாவல் தேடுகிறோம் என்று கூறிநிலைமையை சீராக்கினார்கள். (நூல் புஹாரி, முஸ்லிம்)

இது ஒரு தெளிவான பாடம் இதற்குப் பின்னர் தேவையான கேள்விகளை மட்டுமே கேட்பவர்களாக நபித்தோழர்களை இது ஆக்கி விட்டது. தேவையானவற்றில் கூட அதிகமாகக் கேள்வி கேட்காதவர்களாகவும் ஆக்கிவிட்டது. நபியிடம் அவர்கள் கேட்ட கேள்விகள் பற்றி திருக்குர்ஆன் எடுத்துரைக்கும் விதத்திலிருந்து இது தெளிவாகின்றது. பதிமூன்று கேள்விகளை விட அதிகமாக அவர்கள் கேட்டிடவில்லை. அவற்றில் பெரும்பாலானவை அமல்கள் தொடர்பானவை.




அவர்களிடம் யாரேனும் கேள்வி கேட்டால் அதற்கு அவர்கள் அளித்தபதிலும் இப்படித் தானிருந்தது. நபி (ஸல்) அவர்கள் கூறிய படியே நபித் தோழர்கள் பதிலளித்தனர். தமது பதில்களால் யாரையும் சிரமப்படுத்தவில்லை எளிதாக்கினார்கள் விரட்டவில்லை நல்ல வார்த்தைகளையே கூறினார்கள்.

சட்டங்களை எளிதாகக் கூறுதல் பிரிவுச்சட்டங்களில் விட்டுக் கொடுக்கும் தன்மையுடன் நடந்து கொள்ளுதல், அவற்றில் ஆழமாகவும் நுட்பமாகவும் நுழைந்திடாமல் விலகி நிற்குதல் இவைதான் நபித் தோழர்களிடம் நிலவி வந்த பொதுவான கொள்கை எளிதிலிருந்து சிரமத்துக்கோ தாராளத்திலிருந்து நெருக்கடிக்கோ சென்று விட மாட்டார்கள். அது மார்க்கத்தில் தடைசெய்யப்பட்ட விஷயமும் கூட அல்லாஹ் கூறுகிறான் மார்க்கத்தில் உங்களுக்கு எந்தச் சிரமத்தையும் அல்லாஹ் வைக்கவில்லை. (22 : 78)


யூசுப்பின் மாஹிக் (ரஹ்) கூறுகின்றார் இறை நம்பிக்கையாளர்களின் அன்னையாம் ஆயிஷா (ரழி)வின் வீட்டில் நான் இருந்த போது ஈராக் நாட்டைச் சார்ந்த ஒருவர் வந்து (இறந்தவர்களைப் பொதியும்) கஃபன் ஆடைகளில் எது சிறந்தது? என்று கேட்டார் எப்படியிருந்தாலும் உமக்கு பாதகமில்லை (வைஹக் வமாயளூர்ருக்) என்று ஆயிஷா (ரழி) பதில் கூறினார்கள். அடுத்து அவர்கள் இறை நம்பிக்கையாளர்களின் அன்னையே உங்களின் திருக்குர்ஆன் பிரதியை என்னிடம் காட்டுங்கள் என்றார் ஏன்? எனக் கேட்டார்கள் ஆயிஷா (ரழி). அதற்கவர் திருக்குர்ஆன் முறையாகத் தொகுக்கப்படாமல் ஓதப்பட்டு வருகிறது. எனவே (உங்கள் பிரதியைப் பார்த்து அது போல்) தொகுத்து வைத்துக் கொள்ளலாம் என்பதற்காகவே கேட்டேன் என்றார். அதற்கு இதற்கு முன்னர் எப்படி ஓதிவந்தாயோ அது பாதகமானதல்ல என்று ஆயிஷா (ரழி) பதில் கூறினார்கள் (நூல் : புஹாரி)

பேரறிஞர் அல்ஹாபிழ் இப்னு ஹஜர் (ரஹ்) புஹாரியின் விரிவுரையான பத்ஹுல் பாரியில் கூறுகிறார். நபி (ஸல்) கூறினார்கள். வெண்ணிற ஆடைகளை அணியுங்கள் இறந்தவர்களுக்கு வெண்ணிறத் துணியை கஃபன் ஆடையாக்கிடுங்கள். ஏனெனில் அதுதான் தூய்மையானது. அழகானது (அறிவிப்பாளர் : ஸமுரா (ரழி) நூல் : திர்மிதி இதே ஹதீஸை இப்னு அப்பாஸ் (ரழி) அறிவித்துள்ளதாகவும் திர்மிதியில் காணப்படுகிறது.

அந்த ஈராக்வாசி இந்த ஹதீஸை அறிந்து அதை ஆயிஷா (ரழி)யிடம் உறுதி செய்திட வந்திருக்கலாம். ஆனால் இராக்வாசிகள் மட்டுமீறிய கேள்விகளைக் கேட்டதில் புகழ்பெற்றவர்கள் என்பதால் உமக்குபாதகமில்லை என்று பதிலளித்தார்கள். இதன் பொருள் : எந்த ஆடையில் மய்யித்தைப் பொதிந்தாலும் போதும் என்பதே.

ஹஜ் அல்லது உம்ராவுக்கான இஹ்ராமில் இருக்கும் நிலையில் கொசுவைக் கொன்று விட்டால் அதற்கு என்ன பரிகாரம்? என்று ஒருஇராக்வாசி இப்னு உமர் (ரழி)விடம் கேட்ட போது அவர்கள் தந்த பதில் பிரபலமானது இந்த இராக்வாசிகளைப்

பாருங்கள் நபியின் பேரரைக் கொன்றுவிட்டு கொசுவைக் கொன்றதற்கான பரிகாரத்தைக் கேட்கிறார்கள் என்று கூறினார்கள். (நூல் : பத்ஹுல் பாரீ)



பேரறிஞர் யூசுப் அல்கர்ளாவீ

அந்த இராக்வாசி அன்னை ஆயிஷா (ரழி)விடம் அவர்களின் திருக்குர்ஆன் பிரதியைக் கேட்டதற்குக் காரணம் அதிலுள்ள படியே தாமும் திருக்குர்ஆனைத்தொகுத்திடத் தான். அப்படியானால் அவரின் பிரதி உஸ்மான் (ரழி) காலத்தில் நிறைவடைந்த தொகுப்பு போல இருந்திருக்கவில்லை என்பது தெளிவாகிறது. ஒரு வேளை அது இப்னு மஸ்ஊத் (ரழி) வின் தொகுப்பைப் போலிருந்திருக்கலாம். அவர்களின் பிரதி உஸ்மான் (ரழி)வின் பிரதி போன்றதல்ல.

எந்த வகை தொகுப்பை வைத்து திருக்குர்ஆனை ஓதிவந்தாலும் அதில் குறையில்லை, தவறில்லை என்பதே ஆயிஷா (ரலி) வின் முடிவு. அதனால் தான் அந்த இராக்வாசியிடம் இதற்கு முன்னர் எப்படி ஓதிவந்தாயோ அது பாதகமான தல்ல என்று கூறினார்கள் (நூல் : ஃபத்ஹுல் பாரீ)

பேரறிஞர் திஹ்லவீ (ரஹ்) கூறியுள்ளார். மார்க்கத்தை விளங்குவதிலும் அதன்படி நடப்பதிலும் எளிதையும் இலகுவையும் பேணுவது அதில் மூழ்கி சிக்கல்களையும் சிரமங்களையும் ஏற்படுத்திக் கெள்ளாமல் தூரவிலகி நிற்பது இவைதான் நபி (ஸல்) காலத்திலும் நபித் தோழர்கள் காலத்திலும் இருந்து வந்த நிலை அதற்குப் பிறகு நிலைமை நேர் மாறாக மாறிவிட்டது.

நபி (ஸல்) ஒளுச் செய்வர்கள் அந்த முறையைத் தோழர்கள் காண்பார்கள். அதை அப்படியே பின்பற்றுவார்கள். இது ஒளுவின் ஃபர்ளு இது ஒழுக்கம் என்று எந்த விளக்கமும் அங்கே இருக்கவில்லை. நபி (ஸல்) அவர்கள் தொழுவார்கள். நபி (ஸல்) ஹஜ் செய்தார்கள். அதை நபித் தோழர்கள் கூர்ந்து கவனித்தார்கள். அது போலவே செய்தார்கள். பெருமானாரின் பெரும்பாலான செயல்கள் இப்படித்தான் இருந்தன. அவர்கள் ஒளுவின் ஃபர்ளு நான்கு என்றோ ஆறு என்றோ தெளிவாகக் குறிப்பிடவில்லை. ஒலுவில் வரிசை முறைப்படி உறுப்புக்களை ஒரு நபித்தோர் கழுவவில்லை என்பதைக் கற்பனை செய்யமுடியவில்லை. அப்படி நடந்திருந்தால் தானே அது சரியா? தவறா? என்று நபி கூறியிக்க முடியும். அல்லாஹ் நாடியவற்றில் தவிர இது நடக்கவில்லை இது போன்ற விஷயங்கள் பற்றி மிகக் குறைவாகவே நபித் தோழர்கள் கேள்வி கேட்டுள்ளனர்.

இப்னு அப்பாஸ் (ரழி) கூறினார்கள். நபித் தோழர்களை விடச் சிறந்த யாரையும் நான் கண்டதில்லை. நபி (ஸல்) அவர்கள் மரணிக்கும் வரை அவர்களிடம் பதிமூன்று விஷயங்களைத் தவிர வேறெதையும் பற்றி நபித் தோழர்கள் கேட்டதில்லை. புனித மாதங்களில் போரில் ஈடுபடுதல், பெண்களின் மாதவிலக்கு என்று பயனுள்ளவற்றை மட்டுமே கேட்டனர்.

இப்னு உமர் (ரழி) கூறினார்கள் நடக்காத ஒன்றைப்பற்றி (நடத்ததாகக் கூறி) கேள்வி கேட்காதே நடக்காததைப்பற்றி கேள்வி கேட்பவனை உமர் (ரழி) சபித்தார்கள்.

அறிஞர் அல்காசிம் (ரஹ்) கூறினார்கள் நீங்கள் சில கேள்விகளைக் கிளறிக் கிளறிக் கேட்கிறீர்கள். நாங்கள் அவ்வாறு (எங்கள் முன்னோர்களிடம்) கேட்டதில்லை எனக்குத் தெரியாதவற்றைக் கேட்கிறீர்கள் எங்களுக்கு அவை தெரிந்திருந்தால் அவற்றை உங்களிடம் கூறாமல் மறைப்பது எங்களுக்கு ஹலால் இல்லை.

உமர்பின் இஸ்ஹாக் (ரஹ்) கூறினார்கள் நான் சந்திக்க முடியாமல் போன ஸஹாபாக்களை விட நான் சந்தித்துள்ள ஸஹாபாக்களே அதிகம். மிகக் குறைவாகவே சிரமம் எடுத்துக்கொள்கின்ற எளிதான வழியில்வாழ்கின்றவர்களாக அவர்களை விட யாரையும் நான் கண்டதில்லை.

உபாதாபின் நுஸையில் கின்தீ (ரஹ்) விடம் தனக்குரிய பொறுப்பாளர் (guardian) இல்லாத சமுதாயத்தில் இறந்து விட்ட பெண்ணைப் பற்றி விசாரிக்கப்பட்டது அதற்கு அவர்கள் நான் ஒரு சமுதாயத்தைப் பார்த்துள்ளேன். அவர்கள் நபித் தோழர்கள் என்ற அந்த தலை முறை உங்களைப் போல நிலையை சிரமப்படுத்திக் கொள்ளவோ உங்களைப் போல (அவசியமற்ற) கேள்விகள் கேட்கவோ மாட்டார்கள் என்று பதிலளித்தார்கள்.

இந்த தகவலை இமாம் தாரீமி பதிவு செய்துள்ளார்கள்.

(நூல் : ஹுஜ்ஜத் துல்லாஹில் பாலிஹா)

தமிழில் இல்யாஸ் ரியாஜி

# ஆஃப்கான் பள்ளத்தாக்கை கைப்பற்றிய தாலிபான்கள்

அமெரிக்க படைகள் பின்வாங்கியதை அடுத்து கிழக்கு ஆ'ப்கானில் அமைந்திருக்கும் கொரங்கல் பள்ளத்தாக்கை வெற்றி கொண்டு விட்டதாக தலிபான்கள் அறிவித்துள்ளனர். படைகள் மறுநிலை படுத்துதல் நடவடிக்கையின் ஒரு பகுதியாக அமெரிக்கா தனது படைகளை திரும்பப் பெற்றுகொண்ட பின்னர் அல்ஜெசீரா அந்த பள்ளத்தாக்கை பார்வையிட்டது. அப்போது அந்த பகுதி தலிபானின் கட்டுப்பாட்டில் இருப்பதையும் அனைத்து முகாம்களுக்கும் போக்குவரத்து இருப்பதையும் கண்டது,

குனார் மாநிலத்தின் ராணுவதளத்தை தாக்குதல் நடத்தவும்மேற்கொண்டு இடங்களை கைப்பற்றவும் பயன்படுத்திக் கொள்ள எண்ணியிருப்பதாக தலிபான் போராளிகள் தெரிவித்தனர்,

அவர்கள் மேலும் தாங்கள் அமெரிக்க படையினால் விட்டுச் செல்லப்பட்ட டன் கணக்கிலான எரிபொருள் மற்றும் ஆயுதங்களையும் கைப்பற்றியிருப்பதாக உரிமை கோரினர்,

அங்கே ஏராளமான ஆயுதங்கள் விட்டுச் செல்லப்பட்டுள்ளது தானியங்கி துப்பாக்கிகள் ராக்கெட் குண்டுகள் மற்றும் ஏவுகணைகள் இவை இறைவன் நாடினால் அவர்களுக்கு எதிராக நாங்கள் பயன்படுத்துவோம் என உள்ளூர் தலிபான் தலைவர் அன்வர் தெரிவித்ததாக அல் ஜெசீராவின் கெய்ஸ் அஸிமி கூறுகிறார்,

இப்போது குப்பைக் கூழமாக காட்சியளிக்கும் இந்த பகுதியை உள்ளூர்வாசிகளும் வந்து கண்டு செல்கின்றனர்,

அந்நிய சக்திகள் வெளியேறி விட்டதால் நிலைமை கட்டுக்குள் வந்து விடும் என நம்புவதாக உள்ளூர்வாசி ஒருவர் கூறினார், எங்களுக்கு அமெரிக்கர்கள் தேவையில்லை ஜெர்மானியர்களோ மற்ற எந்த வெளிநாட்டவரோ தேவையில்லை அந்நியர்கள் தேவையில்லை எங்களுக்கு அமைதி வேண்டும் எங்களுக்கு தலிபான் மற்றும் இஸ்லாம் வேண்டும் எங்களுக்கு வேறு எதுவும் தேவையில்லை,

மரணத்தின் பள்ளத்தாக்கு என அமெரிக்க படையினரால் அடைமொழி கொடுக்கப்பட்ட கொரங்கள் பள்ளத்தாக்கு பெரும்பாலும் கடும் சண்டைகளமாக தான் காட்சியளிக்கும். கடந்த ஐந்தாண்டுகளில் குறைந்தது 42 அமெரிக்க துருப்புகளாவது கொல்லப்பட்டிருக்கும்,

பின்வாங்கியது சரியே

தலிபான் உரிமை கோரியதின் காரணமாக தாங்கள் எச்சரிக்கை எதுவும் செய்யப்படவில்லை என அமெரிக்க ராணுவம் தெரிவித்தது, நாங்கள் எங்களுடைய படைகளை மறுநிலைப்படுத்தும் போது. கிளர்ச்சி படைகள் அங்கு செல்வதற்கு அதிகமான வாய்ப்பு உள்ளது என்பது நாங்கள் அறிந்ததே என அமெரிக்க ராணுவ பேச்சாளர் கலோனல் வேய்ன் ஷாங்க்ஸ் கூறினார், ஆனால். எங்களுக்கு கிடைத்த தகவல்கள் மற்றும் நாங்கள் அடைய வேண்டிய குறிக்கோள்கள் ஆகியவற்றின் அடிப்படையிலும் அந்த முடிவு சரியானது தான் என இன்னும் நம்புகிறோம்,

எரிபொருளும் தங்குமிடங்களும் அந்த பகுதி மக்களுக்கு பயன்பட வேண்டுமென்ற நல்லெண்ணத்தில் விடப்பட்டது, அதே நேரம். முக்கிய தாக்குதல் நிலைகள் மற்றும் கண்காணிப்பு கோபுரங்கள் அழிக்கப்பட்டன, மேலும் ஆயுதங்களும் வெடிப்பொருட்களும் மாற்றப்பட்டு விட்டது அல்லது அழிக்கப்பட்டு விட்டது என அமெரிக்க அதிகாரிகள் கூறினர், நகர பகுதிகளில் கவனம் செலுத்தும் நோக்கில் அமெரிக்கா மற்றும் நேட்டோ படைகளின் தலைவர் ஜெனரல் ஸ்டான்லி மெக் கிரிஸ்டல் எடுத்த தீர்மானத்தை தொடர்ந்து துருப்புக்கள் அவ்விடத்தை காலி செய்தன,

அமெரிக்க படையின் கொரங்கல் பின்வாங்கல் வெற்றியுமல்ல தோல்வியுமல்ல மாறாக பழைய

உத்தியின் தொடர்ச்சி தான் என வாஷிங்டன் ஆசிரியரும் அமெரிக்க ராணுவ ஆய்வில் சிறந்தவருமான மார்க் பெர்ரி தெரிவிக்கிறார்,

இது சிறியதொரு யுத்தம் தான் என கூறினார்

நாங்கள் அங்கிருந்து வெளியேறி விட்டோம் என்பது உண்மை தான், எனினும். நாங்கள் அங்கு நிரந்தரமாக தங்கியிருக்கப்ப போவதில்லை, மேலும் அவர். தலிபான் மற்றும் அல் கொய்தாவை கூடுமானவரை முடக்கி ஆ'ப்கானிய அரசு சமூகத்தில் வேறூன்றுவதற்கு தேவையான உத்திகளை அமெரிக்க ராணுவம் கையாளும் என்றார்,

ஆனால் திருமறையில் அல்லாஹ் கூறுகிறான் :

அவர்கள் அல்லாஹ்வின் பிரகாசத்தைத் தம் வாய்களினால் (ஊதி) அணைளளத்துவிட நாடுகின்றனர், நிராகரிப்போர் வெறுத்தபோதிலும் அல்லாஹ்வோ தன்னுடைய பிரகாசத்தைப் பூர்த்தியாக ஆக்கிவைக்கக்கூடியவன் (61 : 8)

மனிதனால் இயற்றப்பட்ட சட்டங்கள் பயனற்று தோல்வியடையும் போது மனிதர்களையும் அகிலங்கள் அனைத்தையும் படைத்து பரிபக்குவப்படுத்தும் நாயனான அல்லாஹ் மனிதர்களுக்கென அளித்த சட்டம் அனைவராலும் ஏற்றுக் கொள்ளப்படும் என்பது திண்ணம்,

–முபஷ்ஷிர்

எதிரொலி


# ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும்

ஒழுக்கமில்லா கல்வி தேவையா? ஆசிரியர் பக்கம் பல அரிய விஷயங்களை அலசுகிறது கல்விச்சாலை சென்று கல்விகற்காத உம்மி நபி (ஸல்) அவர்கள் கல்வியைத் தேடுவது கட்டாய கடமை என்கிறார்கள் (நூல் : இப்னு மாஜா) கிருஸ்தவர்களின் பழைய புதிய ஏற்பாடு (TESTAMENTS) களில் கல்வி, சிந்தனை, ஆராய்ச்சி, சான்று, அறிவு, நுண்ணறிவு ஆகிய சொற்கள் எங்கும் காணக்கிடக்காத போதும், அதனை வேதமாகக் கொண்டவர்கள். அவைகளில் சிறந்து விளங்குகிறார்கள், ஆனால் ஒழுக்கத்தைப்பற்றி கண்டு கொள்வதில்லை. சிந்திக்க வேண்டும் என்பதை வலியுறுத்தும் குர்ஆனின் வசனங்கள் சுமார் 750 இருந்தும் நமது உடன் பிறப்புகள் சிந்திக்காமல் இருப்பது வேதனை அளிப்பதாக உள்ளது. கல்வி கற்பதிலும் ஆர்வம் காட்டாமல் திரை கடலோடி திரவியம் தேடுகிறார்கள்.

வாழும் தலைமுறைகளுக்கு அறிவினை சொத்தாகத் தந்து மருத்துவம், கணிதம், ரசாயனம், பௌதீகம், வானசாஸ்திமம், தர்க்க சாஸ்திரம் முதலிய பலதுறைகளை இன்றைய நவீன உலகுக்குத் தந்த முன்னோடிகளாக முஸ்லிம்கள் இருந்தும், இன்று நம்மவர்களே நம்பமுடியாத அளவுக்கு உண்மைகளை இருட்டடிப்பு செய்து முஸ்லிம்களை முட்டாளாக்க ஜியோனிச சக்திகளும், பாசிஸ சக்திகளும் முயலுகின்றன. அல்லாஹ்வின் திருப்தியை நாடிக் கற்றிட வேண்டிய கல்வியை உலகத்தின் செல்வங்களை சேர்ப்பதற்காக கற்பவன், சுவனத்தின் வாடையைக் கூட நுகர முடியாது – என்ற நபி (ஸல்) மொழியை நம்பிய முஸ்லிம்களால் உலக சமுதாயத்துக்கு விளைந்த நன்மைகளை பட்டியலிட முடியாது. இன்றைய இலவச கல்வியின் முன்னோடிகள் முஸ்லிம்கள் தான் என்ற உண்மையைக் கூட மறைக்க சதிகள் நடக்கின்றன. சமைப்பதற்கு பானையில் அரிசி களையும் போதே கல்விக்காக, மதரஸாவுக்காக, மக்தபுக்காக என்று ஒருபிடி அரிசியை தனிபாத்திரத்தில் எடுத்துப் போட்டு சேமித்து மாத முடிவில் கல்விசாலைக்கு கொடுக்கும் பழக்கம் பல பகுதிகளில் இருந்து வந்துள்ளது என்பது மறக்கடிக்கப்பட்ட உண்மை. காலங்காலமாக இந்த நடைமுறை எங்கள் பகுதியில் இருந்து வந்துள்ளது.

இறை திருப்தியை நாடி கற்க வேண்டிய கல்வியை நாம் பணம் சம்பாதிக்க என்று மாற்றிக் கொண்டதால் தான், கல்விச்சாலைகளும், கலாச்சாலைகளும் கல்விக்கு விலை பேசும் இடங்களாகி, வியாபாரமாகி வருகின்றன. வியாபார நோக்கத்தில் கற்பிக்கப்படும் கல்வியால் ஒழுக்கத்துக்கு வழியில்லை. அங்கு கற்பிக்கப்படும் கல்வியால் விழுப்பம் தரும் ஒழுக்கம் விடை பெற்று விடுகிறது அனைவருக்கும் கல்வி என்பது இஸ்லாமிய ஒழுக்க மாண்புகளின் அடிப்படையில் அமைந்தால் மட்டுமே மனித குலத்தின் மீது அக்கரையுள்ளவர்களைத் தந்திட முடியும். ஒழுக்கத்துக்கும் கல்விக்கும் சம்பந்தமில்லை என்று அமைந்தால், மேலை நாடுகளில் கலாச்சார சீரழிவுகள் நம்மையும் ஆக்கிரமிக்கும்.

M.A. ஹாஜி முஹம்மது நிரவி




## முதுமையிலும் எய்ட்ஸ் வருமா?

முதுமையிலும் எய்ட்ஸ் வரலாம். அதற்கு மிக முக்கியக் காரணமாக இருப்பது ரத்த மாற்றுமுறை. இதய பைபாஸ் அறுவைச் சிகிச்சை, புற்றுநோய்க்கான அறுவைச் சிகிச்சை மற்றும் விபத்துகளில் சிக்கி அதிக ரத்தப் போக்கு காரணமாக, உடலில் ரத்தம் ஏற்றும் அவசர நிலைகளில், ரத்தம் ஏற்றப்படும் போது தவறுதலாக எய்ட்ஸ் கிருமிகள் உடலுக்குள் புகுந்துவிட நேரலாம்.

மேலும், சுத்தம் செய்யப்படாத கத்தி, ஊசி, பிளேடு மற்றும் தோலில் பயன்படுத்தக்கூடிய வேறு சில பொருள்களாலும் எய்ட்ஸ் கிருமிகள் உடலில் புகுவதறகு வாய்ப்பு உண்டு. மிக முக்கியமாக, பாதுகாப்பற்ற உடலுறவின் மூலம் எய்ட்ஸ் பரவலாம். பேரா எய்ட்ஸ் நோய்க்கிருமி, உடலுக்குள் புகுந்து தன் வேலையைக் காட்ட பத்து ஆண்டுகளுக்கு மேல் ஆகிவிடும். அதனால், இன்றைய நடுத்தர வயது எய்ட்ஸ் நோயாளிகள், நாளை முதியோர் எய்ட்ஸ் நோயாளியாக வாய்ப்பு உண்டு.

## எய்ட்ஸ் நோயின் அறிகுறிகள் என்ன?

முதன்முதலாக, 1984–ம் ஆண்டுதான் ஹெச்.ஐ.வி. என்ற வைரஸ் கிருமியால் எய்ட்ஸ் நோய வருகிறது என்று கண்டுபிடிக்கப்பட்டது. எலீசா (Elisa) என்ற ரத்தப் பரிசோதனை மூலம் இதை உறுதிசெய்ய முடியும்.

நோயின் அறிகுறிகள் ஒவ்வொரு நிலைக்குத் தகுந்தவாறு முற்றிலும் மாறுபட்டுக் காணப்படும். ஆரம்ப நிலையில் எந்தவித அறிகுறியும் இல்லாமல் இருக்கலாம். அதே நோய் முற்றிய காலத்தில் உயிருக்கே ஆபத்தை விளைவிக்கக் கூடியதாகவும் இருக்கலாம்.

எய்ட்ஸ் நோயால் பாதிக்கப்பட்டவர், முதல் 3 முதல் 6 வாரங்களுக்கு உடல் சோர்வாகவும், சற்றுக் காய்ச்சலுடனும் காணப்படுவார். பிறகு இந்த இரண்டும் எந்தவித சிகிச்சையும் இல்லாமலேயே சரியாகிவிடும். சுமார் 5 முதல் 10 ஆண்டுகள் வரை இந்த நோய் எந்தவித அறிகுறியும் இல்லாமல் உடலில் மறைந்தே இருக்கும். அதற்குப் பிறகு இந்த நோய் தீவிரமடைந்து பலவிதங்களில் வெளிப்படும்.

அதாவது, கொஞ்சம் கொஞ்சமாக உடல் இளைத்துக் கொண்டே போவது, இடைவிடாத வயிற்றுப்போக்கு, தொடர் காய்ச்சல், இடைவிடாத இருமல் போன்றவை ஏற்பட்டு இறுதியில் மரணம்கூட நேரலாம்.

இவை மட்டுமின்றி ரத்தப்போக்கு (Bleeding disorders) பூச்சைத் தொற்று (Fungal infection) போன்றவற்றாலும் பாதிக்கப்படலாம். பல தரப்பட்ட நோய்கள் ஏற்படவும் வாய்ப்பிருக்கிறது. மனச்சோர்வு மற்றும் அறிவுத்திறன் வீழ்ச்சி கூட எய்ட்ஸால் பாதிக்கப்பட்டவருக்கு ஏற்படலாம்.

## இளம் வயது எய்ட்ஸ் நோயாளிக்கும், வயதான எய்ட்ஸ் நோயாளிக்கும் வித்தியாசம் உண்டா?

கிருமியின் தாக்கம் தீவிரமாக இருந்தால் முதுமையில் நோயாளியைக் காப்பாற்றுவது கஷ்டம். ஆனால், இளம் வயது நோயாளிக்கு சிகிச்சை அளிப்பது சுலபம். இளம் வயதில் எய்ட்ஸ் நோயால் பாதிக்கப்பட்டவருடைய ஆயுளை ஓர் ஆண்டுக்கு நீட்டிக்க 80 சதவீதம் வாய்ப்பு இருந்தால், அதுவே முதியவராக இருந்தால் 40 சதவீத வாய்ப்புதான் உண்டு. இதற்கான காரணங்கள் தெரியவில்லை. ஆனாலும், முதுமையில் வரும் பல்வேறு நோய்களின் குறுக்கீடு, நோயின் தீவிரம், முறையான சிகிச்சை இல்லாமை போன்றவை காரணங்களாக இருக்கலாம்.

எய்ட்ஸ் வராமல் தவிர்ப்பது எப்படி?

சுய ஒழுக்கம் (ஒருவனுக்கு ஒருத்தி)

ஆணுறை மூலம் பாதுகாப்பான உடலுறவு

ஒருமுறை மட்டும் பயன்படுத்தக்கூடிய ஊசிகளைப் பயன்படுத்துவது

கத்தி, பிளேடு போன்றவற்றை கொதிநீரில் போட்டு சுத்தம் செய்து பயன்படுத்துவது

அறுவைச் சிகிச்சைகளின் போது கிருமி நீக்கம் செய்யப்பட்ட ரத்தத்தைப் பயன்படுத்துவது.

என்பது போன்ற பலவகைகளில் மேற்கொள்ளப்படும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளால் எய்ட்ஸ் நோய்வராமல் தவிர்க்க முடியும்.

# டெல்லி சிறப்பு படையின் (SPECIAL CELL) தீவிரவாதம்

டெல்லி சிறப்பு படை 1986ல் தீவிரவாதத்திற்கு எதிராக ஆரம்பிக்கப்பட்டது, அது 1990களில் பல தீவிரவாதிகளை கொன்றதாகவும் பல வழக்குகளை தீர்த்ததாகவும் சொல்லிக் கொண்டதன் மூலம் முக்கியத்துவம் பெற்றது. அதே நேரத்தில் அதன் அதிகாரிகள் சிலரின் மீது கொள்ளையில் ஈடுபட்டதாகவும் சந்தேகப்படும்படியான எதிர் தாக்குதல் கொலைகளை (என்கௌன்டர்) செய்ததாகவும் குற்றம் சாட்டப்பட்டது. பிரஷாந்த் பூஷன் என்ற பிரசித்தி பெற்ற வழக்கறிஞர் கூறும் போது துரதிருஷ்டவசமாக நீதிமன்றம் எப்பொழுதெல்லாம் இந்த சிறப்பு படையினர் ஜோடிக்கப்பட்ட ஆதாரங்களின் அடிப்படையில் மக்கள் கைது செய்ததாக கண்டறிந்ததோ அப்பொழுதெல்லாம் இந்த சிறப்பு படையினருக்கு எதிராக எந்த நடவடிக்கையையும் எடுக்க உத்தரவோ ஆலோசனையோ வழங்கவில்லை, அவ்வாறு அவர்கள் சட்டத்தால் கடுமையாக தண்டிக்கப்படாதவரை இத்தகைய காவல் அதிகாரிகள் அப்பாவிகளை தீவிரவாதிகளாகக் காட்டிக் கொண்டு தான் இருப்பார்கள் என்று கூறினார், இதைப் பற்றி சொல்வதென்றால் கடந்த நான்கு மாதங்களில் டெல்லி கீழ் நீதிமன்றங்கள் இவ்வாறு சிறப்பு படையினரால் கைது செய்யப்பட்ட ஒன்பது பேரை விடுவித்துள்ளன, அதில் நான்கு பேர் யாரெனில் மார்ச் 2005ல் சவுத் வெஸ்ட் டெல்லியில் நடந்த ஓர் எதிர் தாக்குதலுக்குப் பின் கைது செய்யப்பட்ட தீவிரவாதிகள் (?) காவல்துறையினர் டெஹ்ரடூனில் உள்ள இந்திய மிலிட்டரி அகாடமி (IMA) மீது நடக்க இருந்த மிகப்பெரிய தாக்குதல் முயற்சியை அவர்கள் தடுத்து நிறுத்தி விட்டதாக பீற்றிக் கொண்டனர், ஐந்து வருடங்களுக்கு பிறகு அந்த நான்கு பேரும் விடுவிக்கப்பட்டனர், அந்த நால்வரையும் பற்றி பரிஜேஷ் பாண்டே என்பவர் தரும் தகவல்கள் இதோ :-



1. திலாவர் கான் (மத்ரஸா இம்தாதுல் உலூமின் மௌலானா)
2. மசூத் அஹ்மத் (பக்வாலி மஸ்ஜிதின் இமாம்)

**உண்மை கோப்பு**

- இருவரும் சிறப்புடையினரால் தற்கொலை தாக்குதல் நடத்த இருந்தார்கள் என்ற காரணத்திற்காக கைது செய்யப்பட்டார்கள்.
- லஷ்க்ரே தய்பா என்ற முத்திரை குத்தப்பட்டு இருவரும் டெஹ்ரடூனில் உள்ள இந்தியன் மிலிட்டரி அகாடமியை தகர்க்க தற்கொலை தாக்குதல் நடத்த இருந்தார்கள் என குற்றச்சாட்டப்பட்டனர்,
- லஷ்கர் தீவிரவாதி என கூறப்பட்ட ஹமீத் ஹுசைன் என்பவர் கொடுத்த வாக்கு மூலத்தின் அடிப்படையில் இருவரும் கைது செய்யப்பட்டனர்,
- ஐந்து வருடம் சிறையிலடைக்கப்பட்டனர்,
- நீதிமன்றம் ஜனவரி 2010ல் அவர்கள் மீது இருந்த அனைத்து குற்றச்சாட்டுகளையும் நீக்கி விடுதலை செய்தது.

இவர்களை நோக்கி வருகிற ஒரு காவல்காரரின் பார்வை ஒன்று போதும் மவ்லானா திலாவர் கான் இமாம் மசூத் அஹ்மதின் முதுகுத் தண்டை சில்லிட வைக்க. திலாவர் இம்தாதுல் உலூம் மதரஸாவில் ஆசிரியர் இது தென்மேற்கு (North West) டெல்லியில் உள்ளது. மசூத் பக்வாலி மஸ்ஜிதினுடைய இமாம், இது அந்த மத்ரஸாவிற்கு 200 மீட்டர் தொலைவில் உள்ளது, இவர்கள் இருவரும் உள்ளூர் காவல் நிலையத்திற்கு மார்ச் 2005 ல் அழைக்கப்பட்டனர். பின்னர் டெல்லி காவல்துறையின் சிறப்புப்

படை பிரிவு அலுவலகத்திற்கு (தெற்கு டெல்லியில் லோதி காலணியில் உள்ளது) தொடர்ச்சியாக விசாரணைக்கு வரவழைக்கப்பட்டனர், இவர்களை தற்போது மக்கள் மத்தியில் பார்ப்பதற்கு ஐந்து வருடங்கள் ஆகிவிட்டது,

போதுமான ஆதாரங்கள் இல்லையென கூறி பாட்டியாலா ஹவுஸ் கோர்ட் அவர்களை விடுதலை செய்யும் வரை அவர்கள் லஷ்கரே தய்பா தீவிரவாதிகள் என முத்திரை குத்தப்பட்டு டெஹ்ரடூனில் இருந்த இந்தியன் மிலிட்டரி அகாடமியை தற்கொலை தாக்குதல் மூலம் தகர்க்க இருந்ததாக குற்றம் சாட்டப்பட்டு ஐந்து வருடங்கள் சிறையில் இருந்தனர். நீதிமன்றம் சிறப்பு படையின் விசாரணை ஓட்டைகளையும் அது தன்னுடைய அதிகாரத்தை தவறாக பயன்படுத்தியதையும் சுட்டிக் காட்டி கடுமையாக விமர்சித்திருந்தது.

இருவரும் ஹமித் ஹுசைன் என்பவரின் வாக்கு மூலத்தின் (இவர் லஷ்கர் தய்பாவை சேர்ந்தவர் என்று குற்றச்சாட்டப்பட்டவர்) வேறெந்த ஆதாரங்களும் இல்லாத நிலையில் கைது செய்யப்பட்டனர். ஹமித் ஹுசைன் பாகிஸ்தான் தீவிரவாதிகளுக்காக வெடிபொருட்களை திலாவரிடத்தில் கொடுத்து வைத்திருந்ததாக கூறப்பட்டது. ஹமித் மசூதையும், திலாவரையும் அடையாளங்காட்டினார். இவர்களிடமிருந்து ஒரு கிரனேடும் ஒரு சைனீஸ் பிஸ்டலும் 24 துப்பாக்கி ரவைகளும் கைப்பற்றப்பட்டதாக கூறப்பட்டது,

சிறப்பு படையின் விசாரணையை திலாவர் இவ்வாறு நினைவு கூறுகிறார். என்ன நடக்கிறது என்பது தெரியாமல் நான் திகைத்து போயிருந்தேன் எனக்கு ஹமிதை தெரியுமா என கேட்பார்கள். தெரியாது என்று சொன்னவுடன் நான் சித்ரவதை செய்யப்பட்டேன். திரும்பவும் அதே கேள்வியை திரும்பவும் கேட்பார்கள் நான் மீண்டும் மறுத்துக் கொண்டிருந்தேன் எனக்கு கற்றுத் தரப்படும் பாடத்தை நான் மறக்க மாட்டேன் என்று அவர்கள் கூறினார்கள் என்னை வெற்றுத் தாள்களில் கையெழுத்து போடும் படியும் வற்புறுத்தினார்கள்.

மசூதுக்கு இதே போன்று தான் நடந்தது. என்னை அழைத்து சென்று ஹமீதை அடையாளம் காட்டும் படியும் சதி திட்டத்தைப் பற்றி கூறும் படியும் துன்புறுத்தினார்கள். அவர்களுக்கு என்ன பதில் தருவது என்பதே எனக்கு தெரியவில்லை. எங்களை மிருகங்கள் போல காமராக்களின் முன்பு நிற்க வைத்து படம் எடுத்தார்கள். அருகில் அவர்கள் வந்து நின்று கொண்டு தாங்கள் தான் எங்களை பிடித்த அதிகாரிகள் என காட்டிக் கொள்வார்கள். நாங்கள் எதற்காக இத்தகைய கொடுமைகளை அனுபவிக்க வேண்டும் என்று எங்களுடைய இறை நம்பிக்கையே சற்று ஆட்டங் கண்டுவிட்டது.

எங்கள் நண்பர்களும் சொந்தங்களும் எங்களை விட்டு விலகிச் சென்றுவிட்டனர், நாங்கள் பொறுமையாக காத்திருந்தோம் நீதி கிடைக்க தாமதானது. ஆனால் ஜனவரி 8 அன்று தீர்ப்பு வெளிவந்த போது அது அவர்கள் மீதான அனைத்து குற்றச்சாட்டையும் உடைத்துப் போட்டது.

கூடுதல் நீதிமன்ற நீதிபதி சர்மா அரசு தரப்பில் கொடுக்கப்பட்ட ஆதாரங்கள் நம்பிக்கையூட்டுவதாக இல்லை. காவல்துறை கைது செய்ததாக சொன்ன வீட்டில் திலாவர் வசித்தார் என்பதற்கு போதுமான ஆதாரமில்லை இன்றும் பல ஓட்டைகளை அவர் எடுத்து கூறினார். அந்த பகுதியை அதிரடி சோதனை நடத்த சென்றவர்களில் ஒருவரான ஆய்வாளர் (சிறப்பு செல்) ரமேஷ் லம்பா திலாவரையும் மசூதையும் அரைமணி நேர இடைவெளிக்குள் கைது செய்துள்ளார். ஆனால் திலாவரின் வீட்டிலிருந்து ஆயுதங்களை கண்டெடுத்ததைப் பற்றி ஒரு வார்த்தை கூட கூறவில்லை என்றும் கூறினார்.

மிகவும் ஆச்சரியப்படுத்தும் விஷயம் என்ன வென்றால் ஆய்வாளர் ரன் சிங் என்பவர் கொடுத்த வாக்கு மூலம் அதில் திலாவரை அவர்கள் கைது செய்தவுடன் சிறப்பு படை அணியினர் அவர்களுடைய அலுவலகத்திற்கு திரும்பியதாக கூறியுள்ளார். (அதாவது அதே இடத்திலுள்ள மசூதை கைது செய்யாமல்) இது சிறப்பு படை அதிகாரிகள் கொடுத்த வாக்குமூலத்திற்கு முரணானது. காவல்துறையினர் ஒரு இடத்திலுள்ள இரண்டு பேரை கைது செய்ய சென்று ஒன்றில் ரன்

சிங்கை சேர்த்து கொண்டார்கள் மற்றொன்றில் சேர்த்து கொள்ளவில்லை என்பதை நம்ப முடியவில்லை. அடையாளங் காட்டும் இடத்தில் ஹமித் ஹுசைன் இருந்தார் என்பதும் நம்புவதற்கு மிகவும் கடினமாக உள்ளது. ஏனெனில் அவருடைய பெயரை காவல்துறையின் தினசரி நாளேட்டில் எங்கேயும் குறிப்பிடப்படவில்லை என்று நீதிபதி கூறினார்.

மவ்லானாவும் இமாமும் வாழ்க்கையின் முழு வட்டத்தையும் அடித்துவிட்டு வந்து விட்டனர். ஜெயிலில் இருந்து வெளியே வந்த போது புது உலகத்தில் காலை வைப்பது போன்று இருந்தது. தீவிரவாதிகள் என்ற முத்திரை குத்தப்பட்டதிலிருந்து வெளிவர நாளாகிவிட்டது. ஆனால் இதெல்லாம் கொஞ்ச நேரத்திற்கு தான். அடுத்த நாளே சில காவலர்கள் திலாவரின் வீட்டிற்கு வந்து உள்ளூர் காவல் நிலையத்திற்கு வந்து போகும்படி கூறினார்கள்.

நான் எவ்வளவு பயந்து போனேன் என்பதை என்னால் சொல்ல முடியவில்லை. கடந்த ஐந்து வருட சிறை வாழ்க்கையும் என் கண் முன்னால் வந்து போனது. நான் நல்லவன் தான் என்ற நற்சான்றிதழ் கொடுக்கப்பட்ட பின்பும் என்னை கைது செய்து விடுவார்கள் என்ற பயம் இன்றும் எனக்கு உள்ளது. இந்த பயம் நான் இறந்த பின்பு தான் என்னை விட்டு போகும் என்று நினைக்கிறேன் என்று சோகத்துடன் கூறுகிறார்.



**ஹாருன் ரஷீத்**
மெக்கானிகல் இஞ்சினியர்

உண்மை கோப்பு

- மே 16 2005 அன்று சிங்கப்பூரில் இருந்து திரும்பி வந்த போது இந்திரா காந்தி இன்டர்நேஷனல் விமான நிலையத்தில் கைது செய்யப்பட்டார்.
- லஷ்கரே தய்பாவிற்கு முக்கிய நிதி திரட்டுபவர் என முத்திரை குத்தப்பட்டார்.
- ஐந்து வருடம் சிறையில் கழித்தார்.
- ஜனவரி 2010ல் நீதிமன்றம் எல்லா குற்றச் சாட்டுகளிலிருந்தும் அவரை விடுவித்தது.

பீஹாரை சேர்ந்த மெக்கானிகல் எஞ்சினியரான ஹாருன் ரஷீதிற்கு இவ்வாறெல்லாம் நடக்கும் என்பதும் கனவில் கூட வந்திருக்காது டிசம்பர் 2004ல் ஹிந்துஸ்தான் ஏரோநாட்டிக் (HAL) லிமிடெட்இல் இருந்து பணியை துறந்து சிங்கப்பூரை சேர்ந்த நிறுவனத்தில் பணியாற்ற சென்றார். மே 16 2005ல் அவர் வீட்டிற்கு திரும்பும் வழியில் டெல்லி சிறப்பு படையினரால் இந்திரா காந்தி இன்டெர்நேஷனல் விமான நிலையத்தில் டெல்லியில் கைது செய்யப்பட்டார். டெஹ்ரடூனில் உள்ள இந்தியன் மிலிட்டரி அகாடமி மீது நடத்த இருந்த தற்கொலைப்படை தாக்குதல் சதிக்கு பண உதவி செய்ததாக இவர் மீது குற்றச்சாட்டப்பட்டது.

டெல்லி காவல் துறையின் சிறப்பு படை (Cell) கூற்றுப்படி வெஸ்டர்ன் யூனியன் மணி டிரான்ஸ்ஃபர் வழியாக ஹாருண் இரண்டு முறை மொத்தம் ரூ 49,000 ஐ ஜனவரி 10,15-2005ல் அவருடைய சகோதரர் முஹம்மது யூனுசுக்கு அனுப்பியுள்ளார். அதை அவர் மார்ச் 2005ல் உத்தம் நகரில் ஒரு அபார்ட்மெண்டில் எதிர்சண்டையில் கொல்லப்பட்ட மூன்று பேரில் ஒருவரான ஷம்ஸ் என்பவருக்கு கொடுத்துள்ளார். ஹாருணுக்கு பாகிஸ்தானிலிருந்து அப்துல் அஜீஸ் என்பவரிடமிருந்து பணம் கிடைத்துள்ளது.

அவர்கள் மேலும் தாங்கள் 76 பக்கம் கொண்ட மின்னஞ்சலை ஹாருணிடமிருந்து கைப்பற்றி இருப்பதாகவும் அதில் சங்கேத பாஷையில் மற்ற தீவிர வாதிகளுக்கு குறிப்புகள் அளிக்கப்பட்டதாகவும் கூறினார்கள்.

ஆனால் வழக்கு விசாரணைக்கு வந்த போது வேறுவிதமான காட்சிகள் வெளிவரத் தொடங்கின. அதிகார துஷ்பிரயோகம் டெல்லி சிறப்பு படையினரால் செய்யப்பட்டது பகிரங்கப்படுத்தப்பட்டது.

ஹாருணின் வழக்கறிஞர் M.S. கானின் கூற்றுப்படி ஹாருண் ஓர் ஏழை குடும்பத்தை சேர்ந்தவன்.


அவன் சிங்கப்பூர் செல்வதற்காக தன் மாமாவிடமிருந்து ஒரு லட்ச ரூபாயை கடனாக பெற்றுச் சென்றான். அங்கே சென்றதும் அவ்வளவு பணம் தேவையில்லை என்று தெரிந்து அதில் 49000 ரூபாய் தன் சகோதரனுக்கு திருப்பி அனுப்பினான். இது எப்படி அவனை லஷ்கர் நிதியாளர் என்ற பட்டத்தை அவனுக்கு பெற்று தந்தது என்று அவனுக்கு தெரியாது.

நீதிமன்றத்தில் கொல்லப்பட்ட தீவிரவாதி ஷம்சுக்கு எந்த பணமும் கொடுக்கவில்லை என யூனுஸ் மறுத்தார்.ஹாருணுக்கு லஷ்கருடன் தொடர்புள்ளது என்று நிரூபிக்கும் எந்த ஆதாரத்தையும் காவல்துறை நீதிமன்றத்தில் தரவில்லை. ஆதாரம் சொல்லப்பட்ட மின்னஞ்சலும் நீதிமன்ற ஆய்வின் போது நிற்கவில்லை.

ஆய்வாளர் கைலாஷ் நீதிமன்றத்தில் அவர் ஹாருணின் மின்னஞ்சலின் இரகசிய குறீயிட்டை 10 மே 2005 அன்று தகர்த்ததாக கூறினார். அதே நாளில் அதனை பிரிண்ட் எடுத்தாகவும் கூறினார். ஆனால் அதே சிறப்பு செல்லை சேர்ந்த ஆய்வாளர் பத்ரிஷ் தத் என்பவர் மே 13 2005 அன்றே (5 நாட்களுக்கு முன்பு) தனக்கு ஹாருன் அந்த இரகசிய குறீயிட்டு வார்த்தையை தந்து விட்டதாக கூறினார். ஆய்வாளர் கைலாஷ் விசாரணையின் போது உடனிருந்ததையும் பத்ரிஷ் மறுத்துவிட்டார். இது அந்த 5 நாட்களில் சிறப்பு செல்லினால் புணையப்பட்ட கதை என்பது தெளிவாக நிரூபணமானது.

நீதிமன்றம் ஆய்வாளர் கைலாஷின் பொய்களை பல இடங்களில் சுட்டிக்காட்டியது. மே 13 அன்று எடுக்கப்பட்டதாக கூறப்பட்ட அந்த 76 பக்க மின்னஞ்சல் நீதிமன்றத்திலும் தரப்படவில்லை. குற்றப்பத்திரிக்கையிலும் சேர்க்கப்படவில்லை. அது காவல்துறையினரின் நாட்குறிப்பிலும் குறிக்கப்பட வில்லை.

ஹாருண் தற்போது விடுதலையாகிவிட்டார். ஆனாலும் அவர் மீண்டும் கைது செய்யப்படலாம் என்ற அச்சம் நிலவுகிறது. காவல்துறையினர் மீது அவருக்கு நம்பிக்கை வர நாளாகலாம்.



**இஃப்திகார் மாலிக்**
பயோடெக்னாலஜி மாணவர்
யார் என் இளமையை திருப்பித் தருவார்கள்?

உண்மை கோப்பு

■ இந்திய மிலிட்டரி அகாடமி – டெஹ்ரடூனை தாக்க சதி செய்ததாக கைது செய்யப்பட்டார்.

■ வீட்டிலிருந்து தூக்கி செல்லப்பட்டார். வீட்டின் உரிமையாளரிடம் தகவல் சொல்லப்படவில்லை.

■ சிறப்பு செல்லின் கூற்றுப்படி அவரின் படிப்பிற்கு லஷ்கர் உதவி செய்தது.

■ அவருக்கெதிரான ஆதாரங்களை கைப்பற்றியதாகக் கூறிய ஆய்வாளர் டெஹ்ரடூனுக்கு வரவேயில்லை

26 வயது இஃப்திகார் கைது செய்யப்பட்ட போது டெஹ்ரடூன் டால்ஃபின் இன்ஸ்டிடியூட் ஆஃப் பயோமெடிகல் அண்ட் நேசுரல் சயின்ஸஸ் இல் இரண்டாம் வருட பயோ டெக்னாலஜி மாணவர். அவரை சிறப்பு செல் காவல்துறையினர் மார்ச் 7 2005 அன்று வீட்டிலிருந்து பிடித்து சென்றனர். அவரிடமிருந்து குர்ஆனின் சில சூடான வாசகங்களையும் 2002 குஜராத் கலவரத்திற்கு பழி வாங்கும் படியான வாசகங்களைக் கொண்ட ஒரு நோட்டு புத்தகத்தையும் இந்தியன் மிலிட்டரி அகாடமியில் நடக்க இருந்த அணிவகுப்பில் கலந்து கொள்ள நுழைவு சிட்டையும் கைப்பற்றியதாகக் கூறினார்.

இஃப்திகாருக்கு பாகிஸ்தான் தீவிரவாதியான ஷம்சுடன் தொடர்பிருந்ததாகவும் அவன் தான் இஃப்திகாரை பிஹாரில் நடந்த சிமி (SIMI) சந்திப்புகளில் கலந்து கொள்ள தூண்டியதாகவும் காவல் துறையினர் கூறினர். ஷம்சின் டைரியில் இஃப்திகாரை ஷஹீத் என்று குறிப்பிட்டுள்ளதாகவும் எனவே லஷ்கர் தான் இவனின் படிப்பிற்கு உதவியது என்றுளளம் கூறப்பட்டது.

நீதிமன்றத்தில் நீதிபதி தர்மேஷ் ஷர்மா சிறப்பு செல்லின் ஓட்டைகளை பட்டியலிட்டார். சிறப்பு செல்லின் ஆய்வாளர்

ரமேஷ் ஷர்மா ஆய்வாளர் கைலாஷ் சிங்கால் என்பவர் டெஹ்ரடூனுக்கு சென்று IMA வின் நுழைவு சீட்டை இஃப்திகாரிடம் கைப்பற்றியதாகவும் அவர் தான் கைப்பற்றிய குறிப்பை எழுதினார் என்றும் கூறினார்.

இதை ஏற்றுக் கொண்டு விசாரணை செய்த போது அவர் அந்த இடத்திற்கு சென்றதே கிடையாது என தெரிய வந்தது. பின்னர் எவ்வாறு இப்பொருட்கள் கைப்பற்றப்பட்டன எவ்வாறு கைப்பற்றும் குறிப்பு (SEIZURE MEMO) எழுதப்பட்டது என கேட்கப்பட்ட போது அதற்கு பதிலேதும் தரப்படவில்லை.

மேலும் நீதிமன்றத்தில் இஃப்திகார் தன்னை காவலர்கள் வற்புறுத்தி குஜராத்தினை பழி தீர்க்க வேண்டும் என எழுதச் சொன்னதாக கூறினார். அவரிடம் குர்ஆனின் விஷயங்கள் இருந்ததை ஏற்றுக் கொண்ட அவர் ஆனால் அவையொன்றும் சூடான வெறியேற்றக் கூடிய வாசகங்கள் கிடையாது என மறுத்தார்.

நீதிபதி ஷர்மாவிற்கு இதுவும் வியப்பாக இருந்தது. அதாவது இஃப்திகார் கைது செய்யப்பட்ட போதும் அவருடைய வீட்டிலிருந்து பொருட்கள் கைப்பற்றப்பட்ட போதும் அவருடைய வீட்டின் சொந்தக்காரர் பகத்ராம் குல்யானி என்பவருக்கு தகவல் தெரிவிக்கப்படவே இல்லை பொதுமக்களில் யாரும் கூட சாட்சியாக்கப்படவில்லை. ஆய்வாளர்கள் சஜ்சய் தத்தும் பதிரிஷ் தத்தும் டெஹ்ரடூனுக்கு சென்றதே கிடையாது மேலும் இஃப்திகாரிடமிருந்து கைப்பற்றப்பட்ட நாட்குறிப்பு (டைரி) ஆங்கிலத்தில் இருந்தது என்று ஓர் ஆய்வாளரும் ஹிந்தியில் இருந்தது என்றும் ஓர் ஆய்வாளரும் கூறினார். நீதிமன்றம் மேலும் இஃப்திகாருக்கு லஷ்கருடனான தொடர்பு நிரூபிக்கப்படவில்லை என்றும் உத்தம் நகரின் கொலை செய்யப்பட்ட தீவிரவாதிகளை இவருக்கு தெரியும் என்பதும் நிரூபிக்கப்படவில்லை என்று கூறியது. IMA நுழைவு சீட்டைக் கொண்டு எந்த காரணத்தையும் கற்பிக்க முடியாது மேலும் அது அந்த அணிவகுப்பு 5 மாதங்கள் பழையது நடந்து முடிந்து விட்ட ஒன்று என்று கூறி அவரை விடுதலை செய்தது.

எனினும் காவல்துறையைப் பற்றிய பயம் இன்னும் தொடர்கிறது.

நன்றி : டெகல்கா

தமிழில் : அபூ அஃப்ரஹ்




# நீதிக்கான உயிர் தியாகம்



## ஷாஹித் ஆஸ்மி

கல் இடறலுக்கெல்லாம் கலங்கிநிற்கும் நம்மவர்களுக்கு மத்தியில் ஷாஹித் ஆஸ்மியின் தியாகம் நெஞ்சை நெகிழச் செய்யும். இதுவே ஷாஹித் ஆஸ்மி ரஷ்யாவிலோ, சைனாவிலோ, ஈரானிலோ சுட்டுக் கொல்லப்பட்டிருந்தால் அடுத்த நாள் காலையிலேயே அது நியூயார்க் டைம்ஸ்–ன் பக்கங்களை நிரப்பியிருக்கும். ஆனால் அவர் கொலை செய்யப்பட்டிருப்பது மேலை நாட்டு எஜமான்களுடன் கைகுலுக்கிக் கொண்டிருக்கும் இந்தியாவில். வாய் திறக்குமா ஊடகங்கள்? ஆஸ்மி சண்டையிட்டுக் கொண்டிருந்தது காட்டுமிராண்டித் தனமான காவல் துறையினருடனும், தீவிரவாதத்துடன் சண்டைபோடுகிறோம் என்ற பெயரில் அவர்கள் செய்து வந்த சந்தேகத்திற்கிடமான காரியங்களுடனும்.

ஏற்கனவே பிராம்மணீய தீவிரவாதம் இந்திய பாதுகாப்புகளை விழுங்கி ஏப்பம் விட்டு உருவாக்கப்பட்டு கொண்டு வரப்பட்ட தீவிரவாதிகளுக்கு இந்தியாவின் கதவுகளை திறந்து விட்டு தாக்குதல் நடத்தியதையும், குண்டு வைத்ததையும் அதனை கண்டெடுத்த உண்மையாளர் ஹேமந்த் கர்கரே போன்றோரை பலி கொண்டிருப்பதையும் நாம் அறிவோம். தற்போது அந்த வரிசையில் இன்னொ1ன்று ஷாஹித் ஆஸ்மி. நூற்றுக்கணக் கான ஏழைகளுக்கு குறிப்பாக முஸ்லிம்களுக்கு தீவிரவாதிகள் என பொய்யாக முத்திரை குத்தப்பட்டவர்களுக்காக வாதாடிய நீதியின் காவலன் உண்மையான தீவிரவாதிகளால் மும்பையில் பெப்ரவரி 11–ம் தேதி அன்று சுட்டுக் கொல்லப்பட்டார்.

இரஷ்ய பத்திரிக்கையாளரும் மனித உரிமை ஆர்வளருமான அன்னா பொலிட் கோவ்ஸ்கயாவிற்கு எந்த விதத்திலும் குறைந்தவரல்ல உயிர்தியாகி (ஷஹீத்) ஷாஹித் ஆஸ்மி. அன்னா விலாடிமிர் புடினுக்கு எதிராக போராட்டங்கள் நடத்யி போது மூன்று வருடங்களுக்கு முன்பு மாஸ்கோவில் சுட்டுக் கொல்லப்பட்டார். ஆஸ்மியின் போராட்டங்களும் ஒன்றும் சளைத்தவை அல்ல. அரசாங்கத்தால் தீவிரவாதிகள் என பொய்யாக முத்திரை குத்தப்பட்டவர்களையல்லவா அவர் நீதிமன்றத்தில் காப்பாற்றியுள்ளார்.

இவருடைய மரணத்தின் மூலம் பயனடையப் போவது யார்? விடை உள்துறை அமைச்சகம், RAW, ஐ.பி. என்ற மத்திய உளவுத்துறை ஏனெனில் இவர்கள் தான் தீவிரவாதம் என்ற கோட்டைகளை கட்டி எழுப்புகிறார்கள். அவ்வாறு இவர்கள் எழுப்பிய பல கோட்டைகளை ஆஸ்மி அவ்வழக்குகளில் வெற்றி பெற்ற போது உடைத்தெறிந்தார். பல குண்டுவெடிப்பு வழக்குகளில் ஆஸ்மி வெற்றிகரமாக மஹாராஷ்டிர காவல் துறைக்கு எதிராக வழக்குகளை நடத்தியுள்ளார். 2008ல் இந்தியன் முஜாஹிதின் உறுப்பினர்கள் என கைது செய்யப்பட்ட 12 பேருக்கும் மேலானவர்களுக்காக வழக்கு நடத்த தயாராகிக் கொண்டிருந்தார். இந்தயன் முஜாஹிதீனுக்கு தற்போது சனிக்கிழமை நடந்த புனே குண்டுவெடிப்பிலும் தொடர்பிருப்பதாக கூறப்படுகிறது. குஜராத் தீவிரவாத தாக்குதல்களில் திட்டம் தீட்டியதாகவும் தாக்கியதாகவும் குற்றம் சாட்டப்பட்டவர்களுக்காக இவர் ஆஜராக தயாராகிக் கொண்டிருந்தார். இந்த காரணங்கள் போதாதா? இவரைக் கொல்ல.

கடந்த ஜூலை ஆஸ்மி மும்பை உயர் நீதிமன்றத்தில் ஜெயில் வார்டன்களுக்குகெதிராக அவர்கள் தீவிரவாத குற்றம் சாட்டப்பட்டவர்களை தாக்கியதற்கு எதிராக வரலாற்று வெற்றி கண்டு அதன் மூலமும் எதிரிகளை உருவாக்கிக் கொண்டார். என்னுடைய சேரியில் இரவும் பகலும் காவலர்கள் வந்து மக்களை பயமுறுத்தி அவர்களை கடத்தி செல்வதை கண்ட வண்ணம் நான் வளர்த்திருக்கி றேன் என்பது ஆஸ்மியின் கூற்று

MAHARASHTRA CONTROL OF ORGANIZED CRIME ACT (MCOCA) க்கு எதிராக டெகல்காவில் எழுத காரணமாக இருந்தவர் இந்த ஆஸ்மி. சிமி–ஐ பற்றிய ஆய்வுக் கட்டுரை டெகல்காவில் வருவதற்கும் காரணமானவர் தான் இந்த ஆஸ்மி. சிமி–ஐ பற்றிய அந்த அறிக்கைக்கு மஹாராஷ்டிரா அரசாங்கத்தால் எந்த பதிலும் கொடுக்க முடியவில்லை.

எது எப்படியோ, ஆஸ்மியின் விலை மதிப்பற்ற உயிர் அவருடைய 32 வயதில் தீவிரவாதிகளால் பறிக்கப்பட்டுள்ளது. கர்கரேயை கொன்றவர்கள் ஆஸ்மியையும் கொன்று விட்டனர். பாபரி மஸ்ஜித் இடிப்பு கலவரத்தின் போது கத்தியேந்திய ஹிந்து தீவிரவாதிகளின் கையில் பள்ளிக் கூடத்தில் இருந்து திரும்பிக் கொண்டிருந்த போது மாட்டிக் கொள்ளவிருந்தார். அப்போது ஒரு நல்ல ஹிந்து அவருடைய அடுத்த விட்டுக்காரர் அவரை காப்பாற்றினார் இம்முறை அப்படி ஏதும் நடக்கவில்லை.

1994ல் ஆஸ்மியை இந்தியாவின் மூத்த அரசியல் தலைவர்களை கொலை செய்ய திட்டம் தீட்டினார் எனக் கூறி காவல்துறை கைது செய்தது. இதற்கு ஆதாரம் அவர் கூறாத அவருடைய வாக்கு மூலம். இதற்காக அவருக்கு ஐந்து வருடங்கள் சிறை தண்டனை கொடுக்கப்பட்டது. நியூ டெல்லியின் திஹார் ஜெயிலில் இருந்த போது அவர் பட்டப் படிப்பில் சேர்ந்தார் அவருடன் உள்ளிருந்த கைதிகளுக்காக சட்ட ரீதியான ஆவணங்களை தயார் செய்து கொடுத்தார். 2001ல் விடுதலையானார். பத்திரிக்கை துறையிலும் சட்ட கல்லூரியிலும் சேர்ந்தார் மூன்று வருடங்களுக்கு பிறகு தனக்கு வருமானம் அளித்துக் கொண்டிருந்த துணை ஆசிரியர் பதவியை துறந்து விட்டு வழக்கறிஞர் மஜீத் மேமனி டம் ரூ 2000/– சம்பளத்திற்கு ஜுனியராக சேர்ந்தார். நான் ஏழைகளுக்காக வேலை செய்ய விரும்புகிறேன் என்பது ஆஸ்மி தன் சகோதரரிடம் சொன்னது அவருடைய பெருவாரியான வாடிக்கையாளர்களிடம் அவர் எந்த சம்பளத்தையும் வாங்க வில்லை.

ஆனால் இவையெல்லாம் அவரை உயிருடன் கொண்டு வராது. சூடானதொரு வேளையில் நீதிமன்றத்தில் ஆஸ்மி ராமன் கூட நீதிக்காக வன்முறையை கையி யெடுத்துக் கொண்டிருக்கிறார் என்று ஆஸ்மி கூறிய போது ஊடகங்கள் கத்தின. காவல்துறை வழக்கு பதிவு செய்தது. நீதிபதி ஆஸ்மியை விசாரித்தார் ஆஸ்மி பயப்பட விலலை அது உண்மை என கூறினார் நீங்கள் தீவிரவாதி என தண்டிக்கப்பட்டவர் என புரளி உள்ளதை சுட்டி காட்டி நீதிபதி எச்சரித்த போது அந்த தண்டனையை நான் பெருமையுடன் ஏற்றுக் கொள்கிறேன் என்று தைரியமாகக் கூறியவர். நீதிபதி ராமரைப்பற்றி ஆஸ்மி தவறாக ஏதும் கூறவில்லை என்று கூறியவுடன் வழக்கு உடைப்பட்டது.

மற்றொரு நீதிபதி நீதிமன்றத்திலேயே திங்கட்கிழமையன்று ஆஸ்மியின் மறைவிற்காக அழுது விட்டார். மக்கள் சுற்றி அமைதியாக பார்த்தனர். ஆஸ்மியின் நீண்டகால தொழில் தோழரான வழக்கறிஞர் சபா குரேஷி எதன் மீதும் பற்றற்றவராய் நான் அவரை எங்கும் பார்க்கிறேன் என்று கூறுகிறார். பால்கனியிலிருந்து வெளியே பார்த்த வண்ணம் நான் என்ன செய்யப் போகிறேன் என்று கேட்கிறார் பலருடைய கண்ணீர் வற்றிக் காய்ந்து விட்டது. நாம் என்ற செய்யப்போகிறோம் என்ற கேள்வி. 1991 இல் சங்கக் குஹா நியோகி என்பாரும் சத்தீஸ்கரில் உள்ள பழங்குடியினரை ஒருங்கிணைத்தற்காக சுட்டுக் கொல்லப்பட்டடார்.

அதாவுர் ரஹ்மான் 2006 இரயில் குண்டு வெடிப்பு வழக்கில் கைது செய்யப்பட்ட இருவரின் தந்தை. சென்னையில் உள்ள அஜித் என்ற வழக்கறிஞரை தொலை பேசியில் அழைத்து இரகசிய குரலில் கேட்கிறார் அஜித் சாஹேப் இனி எங்களுக்கு என்ன நடக்கும்? (அஜித் சாஹித் ஆஸ்மியின் நெருங்கிய நண்பர் இக்கட்டுரையை டெகல்காவில் எழுதியவர்) அஜித் அவரிடமும் மற்ற அனைவரிடமும் சொன்னது ஷாஹித் இறக்கவில்லை, இறக்கவும் மாட்டார், அவர் காட்டிய வழியில் நடக்க தயாராக உள்ளேன். எந்த குண்டுகளும் ஆஸ்மி எனக்கு ஊட்டிய ஊக்கத்தை தடுக்க முடியாது?

புரட்சியாளர்கள் புதைக்கப்படுவதில்லை விதைக்கப்படுகிறார்கள். இதோ இங்கேயொரு ஆஸ்மி விதைக்கப் பட்டிருக்கிறார். திருக்குர்ஆனின் வசனம் இவ்வாறு கூறுகிறது சிலர் அதனை அடைந்து விட்டனர். சிலர் அதனை எதிர்பார்த்து கொண்டிருக் கின்றனர் அவர்கள் ஒரு போதும் தங்கள் வாக்குறுதியிலிருந்து பின் வாங்குவதில்லை. சுரணையுள்ள சகோதரர்கள் ஆஸ்மியின் வாழ்விலிருந்து பாடம் பெறட்டும்.

குறிப்பு–மும்பை தாக்குதல் வழக்கில் ஃபஹீம் அன்சாரி மற்றும் சபாவுத்தீன் அஹ்மத் இருவரும் நிரபராதிகள் என விடுவிக்கப்பட்டுள்ளனர். இவர்கள் இருவருக்காகவும் சாகும் வரை வழக்காடியவர் ஷாஹித் ஆஸ்மி.

நன்றி டெகல்கா – **அபூ அஃப்ரஹ்**

# தலைநகர் டெல்லியில் ஜாதி ஒழிந்தது ஆங்கில நூல் வெளியீடு



பல்லாயிரக்கணக்கான தலித் மக்களின் விடுதலை கண்ணியம் இவற்றிற்காக அரை நூற்றாண்டிற்கும் மேலாகப் போராடி வருபவர் போராடிக் கொண்டிருபவர் டி.எம். உமர் பாரூக் (டி.எம். மணி) அவர்கள்.

அவர்கள் மே 7, 2007 இல் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டார்கள். அவர்களின் போராட்ட வரலாற்றுப் பொக்கிஷம் தான் ஜாதி ஒழிந்தது என்ற நூல்.

வேர்கள் வெளியீட்டகத்தின் வெளியீடாக வெளி வந்த இந்தத் தமிழ் நூல் தமிழகத்தின் எல்லா மாவட்டங்களிலும் மிகவும் பிரபலமாகி வருகின்றது. சுமார் 10,000 பிரதிகள் தமிழகமெங்கும் விநியோகிக்கப்பட்டு விட்டது. இந்த நூல் தமிழகத்தில் ஏற்படுத்தி வரும் மாற்றங்களின் அடிப்படையில் இந்த நூலை அகில இந்திய அளவில் எடுத்துச் செல்லும் பெரு முயற்சியில் தாருல் இஸ்லாம் பவுண்டேஷன் டிரஸ்ட் ஈடுபட்டு வருகின்றது.

இந்த முயற்சியின் முதல்கட்டமாக அந்த நூலை ஆங்கிலத்தில் கொண்டு வரும் முயற்சியில் ஈடுபட்டது. இந்த வகையில் நூலை ஆங்கிலத்தில் கொண்டு வரும் முயற்சி 2010 மார்ச் திங்களில் நிறைவடைந்தது.

ஆங்கிலத்தில் END OF CASTEISM தி எண்ட் ஆஃப் காஸ்டிசம் என்ற பெயரில் வெளிவந்துள்ளது.

ஆங்கில மொழியாக்கத்தை தலை நகர் டெல்லியில் வெளியிடுவது என தாருல் இஸ்லாம் பவுண்டேஷன் டிரஸ்ட் முடிவு செய்தது. 18.4.2010 இல் டெல்லியில் இந்த நூல் வெளியீட்டு நிகழ்ச்சி சிறப்பாக நடைபெற்றது (அல்ஹம்ந்துலில்லாஹ்)

நிகழ்ச்சி 10.30க்கு நடைபெறும் என்றே அழைப்புகளில் அறிவிப்புகளில் அறிவித்திருந்தோம். நிகழ்ச்சி பற்றி செய்திகள் வெளியிட்ட ராஷ்டிரீய்யா ஷாகாரா பத்திரிக்கையும் இதர உருது பத்திரிக்கைகளும் நிகழ்ச்சி 10.30க்கு நடைபெறும் என்றே அறிவித்திருந்தது

எனினும் 10 மணிக்கே மக்கள் குழுமிவிட்டதால் நிகழ்ச்சியை 10 மணிக்கு தொடங்க வேண்டும் என நமது டெல்லி அன்பர்கள் வலியுறுத்தினார்கள்.

நாம்10.30 என்ற அறிவிப்பையே பின் பற்றுவோம் என அவர்களுக்கு ஆறுதல் சொன்னோம். எனினும் 10.28 மணிக்கு சரியாக நிகழ்ச்சி தொடங்கப்பட்டது.

நிகழ்ச்சிக்கு முஸ்லிம் மஜ்லிஸ்–சே–முஷாவர் இன் முன்னாள் தலைவரும் மில்லிகஜட் என்ற ஆங்கில இதழின் ஆசிரியருமான டாக்டர் ஜஃபருல் இஸ்லாம் கான் அவர்கள் தலைமை தாங்கினார்கள்.

வேர்கள் வெளியீட்டகத்தின் தாளாளரும் தாருல் இஸ்லாம் பவுண்டேஷன் டிரஸ்ட்டின் தலைவருமான மு.குலாம் முஹம்மத் அவர்கள் அனைவரையும் வரவேற்றார்.

### அவர் தனது வரவேற்புரை : சென்னைப் பல்கலைக்கழகமும் ஜாதி ஒழிந்தது நூலும்

ஜாதி ஒழிந்தது நூல் சென்னைப் பல்கலைக் கழகத்தில் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது பேராசிரியர் அழகரசன் அவர்களின் கண்காணிப்பின் கீழ் ஆய்வு நடைபெறுகின்றது.

பேராசிரியர் அவர்களே இந்த நூலை ஆங்கிலத்தில் கொண்டு வந்திட முயற்சிகளை மேற்கொள்வதாக இருந்தார்கள். ஆனால், வெளியீட்டகம் அதை ஆங்கிலத்தில் கொண்டு வந்துவிட்டது என்பதை அறிந்து மகிழ்ந்தார்.

தேவையான ஆங்கிலப் பிரதிகள் பல்கலைக்கழக நூல் நிலையத்தில் வேர்கள் பதிப்பகத்தின் இதர வெளியீடுகள் விலைக்கே வாங்கப்பட்டன. இந்த செய்தியை வரவேற்புரையில் வழங்கியபோது அவையோர் ஆரவாரத்துடன் வரவேற்றனர்.

இந்தச் செய்தி இந்த நூலின் முக்கியத்துவத்தையும் நிகழ்ச்சியின் முக்கியத்துவத்தையும் ஆழப்படுத்தியது.

தமிழகத்தில் இந்த நூல் 21 மாவட்டங்களில் விவாதப்பொருளாக மாறிய வரலாறும் வந்திருந்தோருக்கும் விரித்துரைக்கப்பட்டது. இந்த நூலைமையப்படுத்தி டி.எம். உமர் ஃபாரூக் அவர்களின் ஊரில் குடும்பதோடு வருவோருக்கு ஓர் இஸ்லாமிய கல்வி மையம் திறக்கப்பட்டதையும் எடுத்துச் சொன்னார்கள். இது எங்கள் முயற்சியில் முகிழ்ந்த மூன்றாவது கல்விக்கூடம் என்றும் கூறினார்கள். தொடர்ந்து ஜஃபருல் இஸ்லாம் கான் அவர்கள் தனது தலைமை உரையை நிகழ்த்தினார்கள். தனது தலைமை உரையில் தான் வேர்கள் பதிப்பகத்தின் தாளாளர் மு.குலாம் முஹம்மத் அவர்களை இருபது ஆண்டுகளாக அறிவேன் என்றும் அவரது சமுதாய பணிகள் ஆழமானவை அழுத்தமானது என்பதையும் தெளிவுபடுத்தினார்.

இஸ்லாம் ஒன்று தான் ஒடுக்கப்பட்ட மக்களுக்கிருக்கும் ஒரே மார்க்கம். இதற்கு இந்த நூலும் டி.எம். உமர் ஃபாரூக் அவர்களின் மதமாற்றமும் சிறந்த அத்தாட்சிகள். தாருல் இஸ்லாமின் பணிகள் கடந்த 30 ஆண்டுகளாக நடந்து வருகின்றன என்பதையும் தெளிவுபடுத்தினார்கள்.

நூல் எதைச் சொல்லுகின்றது என்பதையும் சுருக்கமாகச் சொல்லி முடித்தார்கள். வரவேற்புரையைத் தொடர்ந்து நூலை வெளியிடும் நிகழ்ச்சி நடைபெற்றது.

அம்பேத்கர் சமாஜ் கட்சியின் தலைவரும் அஹ்வால்–இ–மிஷன் பத்திரிகையின் தலைவருமான பாய்தேஜ் சிங் அவர்கள் நூலை வெளியிட்டார்கள். (ஆர்.எஸ் ஆதில் முன்னாள் பிரகாபதி) வழக்கறிஞர் டெல்லி அவர்கள் நூலைப் பெற்றுக் கொண்டார்கள்.

நூல் வெளியீட்டு நிகழ்ச்சியைத் தொடர்ந்து IOS Institute of Objective Studies இன்ஸ்டிடியூட் ஆஃப் ஆப்ஜக்டிவ் ஸ்டடீஸ்–இன் பொதுச் செயலாளர் பேராசிரியர் Z.M. கான் அவர்கள் உரையாற்றினார்கள். உரையில் நூலில் சித்தரிக்கப்பட்டிருந்த நிகழ்வுகளை மேற்கோள் காட்டினார். குறிப்பாக டி.எம். இப்போது டி.எம். உமர் ஃபரூக் அவர்கள் தலைமையில் பிணம்புதைக்கும் உரிமையைப் பெறும் போராட்டம் அனைவர் உள்ளத்தையும் உருகச் செய்தது.

இதே போல் நூலின் இதரப் பகுதிகளையும் தொட்டுக்காட்டிப் பேசினார்கள். நூலை அவர்கள் ஆழமாகப்படித்து ஆய்வுரை வழங்கியது அனைவரையும் கவர்ந்தது நூலிலிருந்து பல மேற்கோள்களையும் காட்டினார்கள்.

முடிவில் இஸ்லாம் ஒன்றைத் தவிர வேறு வழி ஜாதியை ஒழிக்க இல்லை. இந்த வகையில் ஜாதி கொடுமைகளுக்கெதிராகப் போராடிய டி.எம். மணி அவர்களின் நெஞ்சுரத்தையும், அவர்களுக்கு துணை நின்றவர்களும் வெகுவான பாராட்டிற்குரியவர்கள் எனவும் பாராட்டினார்கள்.

இந்த தகவல்களையெல்லாம் நாடெங்கும் எடுத்துச் சொல்லும் வேர்கள் வெளியீட்டகம் செய்வது ஒரு பெரும் சேவை இந்த நூலை அவசியம் இந்தி மொழியில் கொண்டுவரப்பட்டு எல்லோருக்கும் விநியோகிக்கப்பட வேண்டும்.

டி.எம். உமர் ஃபாரூக் அவர்கள் தங்களை முஸ்லிம் சமுதாயம் எப்படி ஏற்றுக்கொண்டது என்பதைப் பற்றி அறிந்திட நாங்கள் அனைவரும் ஆர்வமாக இருக்கின்றோம் என்றும் கூறினார்கள்.

தான் அன்மையில் ஜப்பானில் ஓர் கருத்தரங்கத்தில் கலந்து கொண்டதாகவும் அந்த மாநாட்டில் நீதிபரிபாலனம் குறித்து வந்தபோது

இந்த நூலிலிருந்து நிரம்பவே மேற்கோள்கள் காட்டியதாகவும் குறிப்பிட்டார்கள் கேட்டோர் மலைத்துப் போய் நின்றதாகவும் கூறினார்கள்.

பேராசிரியர் அவர்களைத் தொடர்ந்து முஅத்தலாத் என்ற பத்திரிகையின் ஆசிரியர் டாக்டர் அவ்வாஃப் அஹ்மத் அவர்கள் உரையாற்றினார்கள். அவர்களும் நூலை ஆழ்ந்து படித்திருந்தார்கள். நூலிலிருந்து பல மேற்கோள்களைக் காட்டினார்கள்.

பின்னர் யூனிவர்சல் பீஸ் பவுண்டேஷன் என்ற தாவா இஸ்லாத்தின் பக்கம் மக்களை அழைக்கும் பணியில் தன்னை ஈடுபடுத்திவரும் அமைப்பின் செயலாளர் டாக்டர் இத்ரீஸ் அவர்கள் உருது மொழியில் உரையாற்றினார்கள்.

முஸ்லிம்கள் தாவா என்ற பிரதான பணியைச் செய்திட வேண்டியதின் அவசியத்தைக் சுட்டிக்காட்டினார்கள் இஸ்லாம் வழங்கும் சமத்துவமும் சகோதரத்துவமும் எல்லா மார்க்கங்களையும் வென்று விடும் என்று பறைசாற்றினார்.

முஸ்லிம்கள் முழு மூச்சாகத் தாவா செய்ய வேண்டியதின் அவசியத்தையும் குறிப்பிட்டுக் காட்டினார்கள்.

வேர்கள் பதிப்பகத்தின் பணிகளை அனைவரும் பாராட்டினார்கள்.

நிகழ்ச்சியின் பல்வேறு கட்டங்களிலும் உதவி செய்தவர்களில் முக்கியமானவர்கள் டெல்லி ஜமாஅத் இஸ்லாமி என்ற இஸ்லாமிய இயக்கத்தைச் சார்ந்தவர்கள். அவர்களின் சார்பில் அவர்களது மக்கள் தொடர்பாளர் நுணாப் ரபீக் அஹ்மத் அவர்கள் கலந்து கொண்டு உரையாற்றினார்கள்.

இஸ்லாத்தின் அடிப்படைகளாகிய தவ்ஹீத் ஆகிரத் திராலத் ஆகிய அடிப்படைகளை விதித்துரைத்தார்கள். ஜமாஅத்தே இஸ்லாமியின் பணிகளையும் விரிவாகக் கூறினார்கள்.

அடுத்து பேசிய எஸ் ஆதில் அவர்கள் தன்னுடைய உரையில் :–

நான் தீண்டாமைக் கொடுமை களிலிருந்து விடுபட்டிட ஆரிய சமாஜ் என்ற இயக்கத்தில் தன்னை இணைத்துக் கொண்டேன். அங்கே எனக்கு சமத்துவம் கிடைக்கவில்லை. ஏமாற்றமே மிச்சம். பின்னர் புத்த மதத்தை ஏற்றுக்கொண்டேன். அங்கேயும் தீண்டாமை ஒட்டிக் கொண்டது. நான் வித்தியாசமாகவே நடத்தப்பட்டேன். இறுதியில் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டேன். எனக்கு சமத்துவம் கிடைத்தது.

டாக்டர் அம்பேத்கர் அவர்கள் மதமாற்றம் மட்டுமே தீர்வு என்றார்கள். இஸ்லாத்தை ஏற்றுக் கொள்வதை பரிந்துரைத்தார்கள். தந்தை பெரியார் அவர்களும் இஸ்லாத்தை ஏற்றுக் கொள்ள சொன்னதை விரித்துரைத்தார்கள். தந்தை பெரியார் அவர்களின் நூலிலிருந்தும் டாக்டர் அம்பேத்கர் அவர்களின் நூலிலிருந்தும் நிரம்ப மேற்கொள்கள் காட்டினார்கள்.

வர்ண தருணத்தை ஜாதி கொடுமை எனப்பார்க்காமல் அதனை division of Labour தொழில் பகுப்பு எனக் கூறி நியாயப்படுத்திட முயற்சி செய்ததையும் கோடிற்றுக் காட்டினார். குறிப்பாக பண்டித ஜவஹர்லால் நேரு அவர்கள் தனது சுய சரிதையில் இப்படிக் குறிப்பிட்டதையும் இஸ்லாத்தின் மூலமே அந்த மக்கள் விடுதலை அடைந்தார்கள் என நேருஜியே ஒத்துக் கொண்டதையும் குறிப்பிட்டார்கள்.

கூட்டத்தில் பெருவாரியாகக் கலந்து கொண்ட தலீத் மக்கள் மற்றும் ஒடுக்கப்பட்ட மக்களை இஸ்லாத்தை ஏற்றுக் கொள்ள சொல்லி அழைத்தார்கள். பல்வேறு நூல்களிலிருந்தும் இதற்கு மேற்கோள்கள் காட்டினார்கள்.

இழிவும், ஜாதிய அமைப்பிலிருந்தும் விடுதலை பெற இஸ்லாத்தை விட்டால் இன்னொரு வழி இல்லை என்பதை ஆணித்தரமாக அனைவர் மனதிலும் பதிய வைத்தார்கள்.

ஆதில் அவர்கள் உரையாற்றி அமர்ந்ததும் சகோதரர் தேஜ் சிங் அவர்கள் அவர் படித்துக் காட்டிய மேற்கோள் காட்டிய அனைத்து நூல்களையும் வாங்கி பார்த்துத் திருப்தி அடைந்தார்கள்.

ஆதில் அவர்களின் உரையை நூலாகக் கொண்டு வந்திட வேண்டும் என்றொரு விண்ணப்பமும் எழுந்தது. ஆதில் அவர்களிடம் கேட்டபோது அவர்கள் அதை தான் ஒரு நூலாக வடிவமைத்துக் கொண்டிருப்பதாகக் கூறினார்கள்.

**தேஜ்சிங் அவர்களின் உரை :**

நூலை வெளியிட்ட தேஜ்சிங் அவர்கள் முன்னாள் சுங்க அதிகாரி. தலீத் பெருங்குடி மக்களுக்கு முழு நேரமும் உழைத்திட தன் பணியை இராஜினாமா செய்து விட்டு வந்தவர். தொடக்க நாள்களில் BSP என்ற பகுஜன் சமாஜ் கட்சியில் அங்கத்தினராக இருந்தவர்.

அம்மா மாயாவதி பாரதீய ஜனதா கட்சியோடு கூட்டுக் சேர்ந்த போது அக்கட்சியிலிருந்து வெளியேறியவர். இப்போது அம்பேத்கர் சமாஜ் கட்சி என்றொரு கட்சியை நடத்திக் கொண்டிருப்பவர். எட்டு மாநிலங்களில் கிளைகளைக் கொண்டு செயல்படும் கட்சி.

அத்தோடு அஹ்வால் இ.மிஷன் என்ற இந்தி பத்திரிகையின் ஆசிரியராகவுமிருந்து வருகின்றார்.

தேஜ்சிங் அவர்கள் உரையாற்றும் போது முதலில் முஸ்லிம்களும் தலீத்களும் ஒன்றிணைந்திட வேண்டும். இதனால் அவர்கள் தங்களுடைய பொது எதிரியை வீழ்த்த முடியும். ஆனால் தலீத் மக்கள் அனுபவித்துக் கொண்டிருக்கும் கொடுமைகளுக்கும்

அநீதிகளுக்கும் இஸ்லாம் தான் ஒரே வழி. தீர்வு. ஆனால் சில தனிப்பட்ட மதமாற்றங்கள் நாம் எதிர்பார்க்கின்ற விளைவுகளை ஏற்படுத்திட மாட்டா. ஒரு பெரும் மத மாற்றம் மட்டுமே தேவையான மாற்றங்களை உருவாக்கும். பெரும் மதமாற்றத்தால் விளையும் மிகப்பெரிய பலன் என்னவெனில் இந்தியாவின் மூலை முடுக்குகளுக்கெல்லாம் இந்தச் செய்தி சென்று சேரும் அம்பேத்கர் உலகச் செய்தியாகவும் மாறலாம். நாம் அதற்காக உழைத்திட வேண்டும்.

கலாச்சார மாற்றங்களைக் கொண்டுவராத மதமாற்றங்கள் எதுவும் தலித்களுக்கோ தாழ்த்தப்பட்ட மக்களுக்கோ எந்த பலனையும் தராது. டி.எம். உமர் ஃபாரூக் அவர்கள் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டதன் மூலம், மிகப்பெரியதொரு கலாச்சார மாற்றத்திற்கு ஆளாகி இருக்கின்றார்கள். இதனை இந்த நூலில் பதிவாகி இருக்கும் இரண்டு படங்களிலிருந்தும் புரிந்து கொள்ளலாம்.

ஒரு பெரும் மதமாற்றம் என்பது இஸ்லாத்தைப் பெரும் வாரியாக ஏற்றுக் கொள்வது என்பது சாத்தியமான ஒன்றே. காரணம் முஸ்லிம்களுக்கும் தலித்களுக்கும் சிறந்த உறவுகள் இருக்கவே செய்கின்றன. இஸ்லாத்தை ஏற்றுக் கொள்வதன் மூலமே கலாச்சார மாற்றங்களும் நிகழும். இந்தக் கலாச்சார மாற்றங்கள் கிடைக்காமல் போனதால் தான் புத்தமதத்திற்கு மதம் மாறியது எந்தப் பலனையும் தந்திடவில்லை.

இந்த மகத்தான (Max Conversion) பெரும் மதமாற்றத்திற்கு ஏற்பாடு செய்வதற்கு முன் நம்மிடையே ஒற்றுமையை இன்னும் வலுப்படுத்துவோம் என்றும் கூறினார். இறுதியாக டி.எம். உமர் ஃபாரூக் அவர்கள் தங்களது ஏற்புரையை வழங்கினார்கள்.

**டெல்லியில் வெற்றி :**

டெல்லியில் வெற்றிகரமாக நாம் ஓர் நிகழ்ச்சியை நடத்திட முடிந்தது என்றால் அதற்குக்காரணம் டெல்லியில் நமக்கு உதவிகளை செய்தவர்கள் டாக்டர் முஹம்மத் ரஃஹ்பாத் அவர்கள். டெல்லி ஜமாஅத்தே இஸ்லாமியின் வட்டார தலைவர். சுமார் 800 அழைப்பிதழ்களை விநியோகித்தவரும் அவரே! அமீரே ஜமாஅத் என்றும் அன்போடு அழைக்கப்படும் ஜமாஅத்தே இஸ்லாமியின் அகில இந்திய தலைவர் அறிஞர் மௌலானா ஜலாலுதீன் உமரி அவர்கள் தங்கள் தஃவா (இஸ்லாத்தின் பக்கம் மக்களை அழைக்கும் பிரிவு) அணியின் தலைவர். இனியவர். முஹம்மத் இக்பால் முல்லாஹ் அவர்களிடம் ஒத்தாசை வழங்குமாறு கேட்டுக் கொண்டார்கள். அதன் அடிப்படையில் அனைத்து உதவிகளையும் வழங்கினார்கள்.

காலிப் அக்கடமி தான் இதற்கு உகந்த இடம், பாதுகாப்பான இடம் என முதன் முதலில் பரிந்துரைத்தது ரேடியன்ஸ் ஆங்கில இதழின் ஆசிரியரும் ஜமாஅத்தே இஸ்லாமியின் பொதுச் செயலாளர்களில் ஒருவருமான ஜனாப் எஜாஸ் அஹ்மத் அஸ்லம் அவர்கள்.



மேடை அலங்காரம் முதலானவற்றிற்கு மூவிஸ் அவர்கள் உதவினார்கள். இவரும் ஜமாஅத்தே இஸ்லாமியைச் சார்ந்தவரே. நூலை பெறுவதற்கு பொருத்தமானவர் ஆர்.எஸ். ஆதில் அவர்கள் தாம் என்பதையும் வெளியிடுவதற்கு பொருத்தமானவர் தேஜ் சிங் தான் என்பதைப் பரிந்துரைத்து ஏற்பாடு செய்தவர் டாக்டர் ஜாப்பருல் இஸ்லாம் கான் அவர்கள். ஆதில் அவர்களை நிகழ்ச்சி அழைத்து வரும் பொறுப்பை முஹம்மத் இக்பால் முல்லாஹ் அவர்களே ஏற்றுக்கொண்டார்கள்.

இவர்கள் அனைவருடன் டாக்டர் இலியாஸ் அவர்களும் அழைப்பிதழ்களை விநியோகித்தார்கள். பாய்தேஜ்சிங் அவர்கள் தங்கள் இயக்கத்தைச் சார்ந்த முக்கிய தலைவர்கள் அனைவரையும் அழைத்துவந்தார்கள்.

இன்ஸ்டிடியூட் ஆஃப் அப்றுக்டிங் சுபீஸ் நமது தாஃவா பணிகளில் மிகவும் துணை நின்றவர்கள். அவர்களும் அழைப்பிதழ்களை விநியோகிப்பதில் முக்கிய பங்காற்றினார்கள்.

எல்லாப் சொற்பொழிவாளர்களும் குறித்த நேரத்தில் வந்தார்கள். ஆழமான உரைகளை நிகழ்த்தினார் கள், ஆனாலும் குறித்த நேரத்தில் முடித்தார்கள். டெல்லி காவல் துறையினரும், காலிப் அக்காடமியைச் சார்ந்த ஊழியர்களும் அதன் செயலாளரும் மிகவும் சிறந்த ஒத்துழைப்புகளை நல்கினார்கள். இவர்கள் அனைவருக்கும் வேர்கள் வெளியீட்டகத்தின் சார்பிலும் தாருல் இஸ்லாம் பவுண்டேஷன் சார்பிலும் மு. குலாம் முஹம்மத் அவர்கள் நன்றி கூறினார்கள்.

நிகழ்ச்சி பற்றிய அறிவிப்பை உருது மொழியில் அதிகமான விற்பனை செய்யும் நாளிதழ் ராஷ்டிரிய ஷகாரா 18.4.2010 அன்று காலை வெளியிட்டிருந்தது. விளம்பரமாக வெளிவந்த இந்த அறிவிப்பு பின்னர் இலவசமாக்கப்பட்டது. இந்த பத்திரிகைகளுக்கும் இதே போல் அறிவிப்புகளை வெளியிட்ட அனைத்து உருது பத்திரிகைகளுக்கும் நன்றி கூறப்பட்டது.

UNI என்ற United News of India யுனைடட் நியூஸ் ஆஃப் இந்தியா என்ற மத்திய செய்தி நிறுவனத்தின் உருது பிரிவு 7.4. 2010 முதலே தான் செய்தி தரும் பத்திரிகைகளுக்கு செய்திகளை அனுப்பி இருந்தது. இந்தச் செய்தி நிறுவனத்தின் ஒத்துழைப்பிற்கும் நன்றி தெரிவிக்கப்பட்டது.

இடிவி ETV என்ற தொலைக்காட்சி நிறுவனம் டி.எம் உமர் ஃபாரூக் அவர்களைப் பேட்டிக் கண்ட அன்றே செய்திகளை வெளியிட்டது. அதில்,

இந்த நூலைப்பற்றிய ஆய்வுரை பேசிய சகோதரர்கள் பல மொழிகளில் பேசினாலும் அவர்கள் பேசுவதில் முக்கியமான விஷயங்கள் அண்ணன் குலாம் அவர்கள் என் அருகில் உட்கார்ந்துகொண்டு அதை எனக்கு மொழிபெயர்த்து சொன்னார்கள். குறிப்பாக இங்கு ஆய்வுரை வழங்கய டாக்டர் கான் அவர்கள் இஸ்லாத்தில் நான் இணைந்த பிறகு இஸ்லாமிய சமூகம் என்னிடத்தில் எப்படி நடந்து கொள்கிறது என்பதை நான் சொல்ல வேண்டும் என்று அவர்கள் சொன்னார்கள். முதலில் நான் அதற்கு பதில் சொன்னால் தான் நான் தொடர்ந்து பேசுவதிலே அர்த்தம் இருக்கும். இந்துக்கள் என்னை நல்லவன் என்றும், ஒழுக்கமானவன் என்றும், நாணயமானவன் என்றும், நல்ல பேச்சாளன் என்றும், எழுத்தாளன் என்றும் என்னைப் பாராட்டியதுண்டு. ஆனால் ஒரு நாளும் என்னைத் தொட்டுவிட மாட்டார்கள். தூரத்திலேயே நின்று கொள்வார்கள். அவர்கள் வீட்டுக்குள்ளேயே என்னை அனுமதிக்க மாட்டார்கள். என் வீட்டிலேயும் அவர்கள் தண்ணீர் கூட குடிக்கமாட்டார்கள். ஏன் என்றால் என்னிடத்தில் தீட்டு இருப்பதாக அவர்கள் நம்புகிறார்கள். அவர்கள் மதம் அவர்களுக்கு அவ்வாறு போதித்திருக்கிறது.

ஆனால் இஸ்லாமிய சமூகம் நான் இஸ்லாத்தில் சேர்ந்து விட்டேன் என்ற கேள்விப்பட்டவுடன என்னை ஆரத்தழுவி அரவணைத்துக் கொண்டார்கள். எங்கள் ஊர் இமாம் எங்களை அழைத்துக் கொண்டு போய் தன் வீட்டில் விருந்தும் பரிமாறினார். இஸ்லாத்தில் இணைந்து விட்ட தலித் சகோதரர்களிடம் பெண் கொடுத்தும் பெண் எடுத்தும் சம்பந்தம் போட்டுக் கொண்டார்கள். மொத்தத்தில் பசித்தவன் முன்னால் வைக்கப்பட்ட உணவைப்போல இஸ்லாமிய சமூகம் எங்களை வேகமாக உள்வாங்கிக் கொண்டது. நாங்கள் இஸ்லாத்தில் இணைவதற்கு முன்னால் கூட இஸ்லாமிய சமூகம் எங்களிடத்தில் தீண்டாமை பார்த்ததில்லை என்பது குறிப்பிடத்தக்கதாகும். இதற்கு அடிப்படையான காரணம் அவர்கள் சார்ந்துள்ள மதம் தான். இந்து மதம் மனிதர்களை நான்கு பிரிவுகளாக படைத்ததாகவும், அதிலும் ஏற்றத்தாழ்வாக படைத்ததாகவும் சொல்கிறது. எவ்வளவு காலம் மாறிய பின்பும் அவர்களால் தங்கள் மத நம்பிக்கையை மாற்றிக் கொள்ள முடியவில்லை. ஆனால் இஸ்லாம் மார்க்கம் மனிதர்களை ஒரு ஆணிலிருந்தும், ஒரு பெண்ணிலிருந்தும் படைத்ததாக கூறுகிறது அவர்களுக்குள்ளே ஏற்றத்தாழ்வு இல்லை எனவும் கூறுகிறது. அதனால் தான் இஸ்லாமிய சமூகம் மனிதர்களிடையே மனிதாபிமானத்துடன் நடந்து கொள்கிறது ஏற்றத்தாழ்வு பார்ப்பதில்லை. அவர்கள் மதம் சொல்லுகிறபடியே அவர்கள் நடந்துகொள்கிறார்கள். அதனால் தான் அண்ணல் அம்பேத்கர் மதமே மனிதனை செயலாக்கத்திற்கு உட்படுத்துகிறது என்ற தத்துவத்தை ஏற்றுக்கொள்கிறார். சுமார் 40 ஆண்டு காலம் தலித்துகளின்

உரிமைகளுக்காக போராடியவன் என்ற முறையில் அம்மக்களை நான் நன்றாக அறிவேன், அம்மக்களின் சட்டப்படியான உரிமைகளை கேட்டேன் என்பதற்காக இந்த நாடு எனக்கு ஆயுள் தண்டனை கூட வழங்கியது. அந்த நிலையிலும் அவர்களின் உரிமை போராட்டத்தினை நான் கைவிட்டுவிடவில்லை.

அம்மக்கள் அரசியலில் பங்கு கேட்கவில்லை, ஆட்சியில் பங்கு கேட்கவில்லை, நிலத்தில் பங்கு கேட்கவில்லை, தேசப்பிரிவினை கேட்கவில்லை தங்களுக்கு சமத்துவம் வேண்டும் என்று கேட்கிறார்கள். இந்துக்கள் அதை கொடுக்கமுடியாது என்கிறார்கள். இந்த போராட்டத்தின் வெளிப்பாடு தான் இந்த நூல். இதில் சொல்லப்பட்டு இருக்கின்ற அத்தனை சம்பவங்களும் உண்மை சம்பவங்கள். இது கற்பனையோ, கட்டுக்கதையோ அல்ல இந்துக்களை கடவுள் தனது தலையிலிருந்தும், தோளிலிருந்தும், தொடையிலிருந்தும், காலிருந்தும் படைத்துவிட்டதாக அவர்கள் நம்புகிறார்கள்.

தலையிலே பிறந்த பிராமணன் உயாந்தவன் என்றும், தோலிலே பிறந்த சத்திரியன் அவனை விட தாழ்ந்தவன் என்றும் தொடையிலே பிறந்த வைசியன் அவனைவிட தாழ்ந்தவன் என்றும் காலிலே பிறந்த சூத்திரன் அவனைவிட தாழ்ந்தவன் என்றும் அவர்களுக்குள்ளே ஏற்றத்தாழ்வும், இடைவெளியும் வைத்து இறைவன் படைத்ததாகவும் நம்புகிறார்கள்.

ஆனால் தீண்டத்தகாதவர்கள் இந்த நான்கு வகையை சேர்ந்தவர்கள் அல்ல. போன ஜென்மத்தில் பாவம் செய்தவர்கள். ஆகவே அவர்கள் தீண்டத்தகாதவர்கள் என்று இந்து மதம் சொல்லுகிறது. ஆனால் தான் அவர்களை ஊருக்கு வெளியே ஒதுக்கி வைத்து இருக்கிறார்கள். இந்தியாவில் 12 லட்சம் கிராமத்திலும் இப்படிதான் இருக்கிறது என்கிறார் அம்பேத்கர். இப்படி பாகுபடுத்தி வைப்பது தான் மனுஸ்மிர்தியின் வேலை என்கிறார். அதனால் தான், அவர் நடத்திய முதல் போராட்டத்தில் மனுஸ்மிர்தியை தீயிட்டுக் கொளுத்தினார் அம்பேத்கர். மனு இப்போது உயிருடன் இருந்தால் அவன் கழுத்தை நெருக்கி கொன்றுவிடுவேன் என்றார்.

இரண்டாயிரம் ஆண்டுகாலமாக இந்த சாதி போராட்டம் நடந்துகொண்டு தான் இருக்கிறது. சீர்திருத்தவாதிகள் மகான்கள் எல்லாம் இம்மக்களுக்காக போராடினார்கள் ஆனாலும் இம்மக்களின் பிரச்சனை அப்படியே தான் இருக்கிறது.

கடவுள் இல்லை, எல்லா மதமும் குற்றம் உடையது உலகம் தானாக தோன்றியது, என்பது போன்ற கொள்கைகள் தான் இம்மக்களின் அடிமை தனத்திற்கு காரணமாக இருக்கிறது. எதற்காக இம்மக்கள் போராடுகிறார்களோ அத்தகைய தத்துவம் 1400 ஆண்டுகளுக்கு முன்பே இந்த தேசத்தில் இருந்து வருகிறது. சமத்துவம், சகோதரத்துவத்தை வழங்கி வருகிறது. என்றாலும் இம்மக்கள் தனித்தே இருக்கிறார்கள். பழம் இருக்கும்போது காயை கடித்துவிட்டு கசக்கிறது என்கிறார்கள்.

இந்திய வரலாற்றிலேயே தீண்டாமை பிரச்சனையையும், தீண்டப்படாதவர்கள் பிரச்சனையையும் அரசியல் அரங்கத்திற்கு கொண்டு வந்தவர் அண்ணல் அம்பேத்கர். தீண்டப்படாத மக்களின் பிரச்சனையை வட்டமேசை மாநாட்டிற்கு அவர் கொண்டு சென்ற போது இந்துக்கள் அதை கடுமையாக எதிர்த்தார்கள். ஆனால் இஸ்லாமிய சமூகம் அவருக்கு கைகொடுத்தது. அதனால் தான் தீண்டப்படாதவர்களின் பிரச்சனை உலக அளவில் வெற்றி பெற்றது. அப்படிப்பட்ட மாபெறும் தலைவர் அம்பேத்கர் அவர்கள் சொன்னதை அம்மக்கள் கேட்கவேண்டும். அவரை பின்பற்ற வேண்டும். இந்து மதத்திலிருந்து இவர்கள் விடுபட வேண்டும். தீண்டப்படாத மக்களின் அனைத்து தேவைகளையும் பூர்த்தி செய்யக்கூடியதாக இருக்கிறது இஸ்லாம் மார்க்கம் என்று அவர் கூறினார். இன்று இஸ்லாமியர்களாக இருக்கின்றவர்கள் எங்கோ அரபு தேசத்தில் இருந்து வந்தவர்கள் அல்ல. யார்யாருக்கெல்லாம் இங்கே உரிமைகள் மறுக்கப்பட்டதோ அவர்கள் எல்லாம் இஸ்லாத்தில் சேர்ந்து சமத்துவம் பெற்றார்கள் என்பது தான் உண்மை.

சமத்துவமின்மையும், ஏற்றத்தாழ்வும், தீண்டாமையும் மண்டிக்கிடப்பது தான் இந்து மதம். ஆனால் சமத்துவத்தையும் சகோதரத்துவத்தையும் அளிப்பதற்கு தயாராக இருப்பது இஸ்லாமிய மார்க்கம். நான் ஆரம்பத்தில் சொன்னது போல தீண்டப்படாத மக்கள் இஸ்லாத்தில் இணைந்து விட்டால் அவர்களை ஆரத்தழுவி அணைத்துக்கொள்ள தயாராக இருக்கிறது இஸ்லாம் மார்க்கம். பிறகு தடையாக இருப்பது யார். இந்த தடை உடைப்பட்டால் தீண்டப்படாத மக்களின் விடுதலையை வென்றுவிடலாம்.

ரஇஸ்லாமிய சமூகம் அதற்கு ஒத்துழைக்கவேண்டும். இந்த விழாவில் சிறப்புரையாற்றிய அம்பேத்கர் பகுஜன் சமாஜ் தேசிய செயலாளர் தேஜ்சிங் போன்ற உதவித்தலைவர்கள் இதற்கு ஒத்துழைக்க வேண்டும் என கேட்டுக்கொண்டு இந்த நூல் வெளியீட்டு விழாவிற்கு ஒத்துழைத்த அனைத்து சகோதரர்களுக்கும் இதை சிறப்பாக நடத்தி வரும் தாருல் இஸ்லாம் ஃபவுண்டேஷன் தலைவர் குலாம் முஹம்மத் அவர்களுக்கும் நன்றி சொல்லி விடைபெறுகிறேன்.

அஸ்ஸலாமு அலைக்கும்.

# உயிரின் பயணம்

## ரஹ்மத் ராஜகுமாரன்

இலக்கியச் சுடர்

ரஹ்மத் ராஜகுமாரன்

செல் : 9443446903



உயிர் உள்ளதற்கான அடையாளங்கள் என்று நாம் வரையறுத்துக் கொண்ட நியதிகள் : தானாக இயங்குகின்றன, உணவுப் பெருட்களை உட்கொள்கின்றன, ஜனப்பொருக்கம் செய்கின்றன, கோபப்படுகின்றன, எதிர்த்து தாக்கின்றன இன்னும்... செய்கின்றன.

இந்த உயிர் உள்ளவைகள் எப்படித் தோன்றின? உயிரினத்திற்கே உரித்தானதன்மைகள் மற்றும் குணங்கள் சிக்கலான கூட்டுப் பொருள்களின் வளர்ச்சியின் போது தோன்றியிருக்க வேண்டும்.

ஹைட்ரஜன், அம்மோனியா, தண்ணீர் மற்றும் சில ஹைட்ரோ கார்பன்கள் வளத்துடன் உள்ள அமினோ அமிலங்கள் போன்றவைகள் அடங்கிய ஒரு முன்னேற்பாடான சூழ்நிலையில் தான் உயிர் தோன்றியது என்கிறார் விஞ்ஞானி ஒபாரின்.

அது முன்னேற்பாடாக தோன்ற வில்லை, அது தோன்றிய விதமே ஒரு பித்துதான் என்கிறது இன்னொரு விஞ்ஞானக் கருத்துக்கள். ஆக எது எப்படியோ எந்த மூலக் கூறுகள் ஜடமாக உயிரற்றதாக இருந்ததோ அந்த குறிப்பிட்ட சில மூலக்கூறுகளிலிருந்து உயிர் தோன்றியது. காரணம் அந்த மூலக் கூறுகளையே உயிர் முக்கியமாகச் சார்ந்துள்து என்கிறார் விஞ்ஞானி ஹக்ஸ்லி

அவனே உயிரற்றதிலிருந்து உயிருள்ளதை வெளிப்படுத்துகிறான் உயிருள்ளதிலிருந்து உயிரற்றதை வெளிப்படுத்துகிறான் (திருக்குர்ஆன் 30 : 19)

பல்லாயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்னால் ஒரு காலக்கட்டத்தில் ஏராளமான எலட்ரான்களும், நியூக்கிளியஸ்களும் பல திசைகளிலருந்து முட்டி மோதித் கொண்டன. அதன் விளைவாய் அணுக்கள் உருவாயின. அப்படி உருவான அணுக்களுக்குள் சில மட்டும் சற்றுக் கூடுதலான அளவில் உருவாக்கும் நிலைப்பும் பெற்றன. அத்தகைய அணுக்கள் மோதிக் கொண்ட போது பலவகையான மூலக்கூறுகள் உருவாயின. அவற்றுள் நிலைத்து நின்றவை நியூக்கிளியக் அமிலங்கள், புரதங்கள் எனப்படும் பெரிய மூலக் கூறுகளாகும். இந்த இரண்டு மூலக்கூறு குடும்பங்களும் வேறு சில மூலக்கூறுகளுடன் இணைந்து பெரிய உருவங்காளாகி உறுப்புகளாகி உயிரினங்களாக உருமாற்றம் பெற்றன.

ஒரு செல்லை எடுத்து வைத்துக் கொண்டு இன்னும் கொஞ்சம் நுணுகிப்பாருங்கள் உரிய கருவி மூலம் அதில் ஒரு தொழிற்சாலை அழகுப் பெட்டகமாய் அமைத்திருப்பதைக் காண்பீர்கள். மேலாளராக மையத்தில் நியூக்கிளியஸ் உயிர்க் கரு சென்ரோசோம், ரைபோசோம், என்டோ பிளாஸ்டிக் ரெடிகுலம் என்ற பெயர்களில் ஒரு பொறியை மட்டும் உற்றுப் பாருங்கள். இப்போது உங்கள் கண்களில் தெளிவான கோடிக்கணக்கான சிறியதும் பெரியதும் ஆன மூலக் கூறுகள் அந்த மூலக் கூறுகளில் பலவற்றை நுணுகி நுணுகிப் பாருங்கள். வியப்பில் மலைத்துப்போவீர்கள். பத்து பதினைந்து அணுக்கள் தாம் அப்படிச் சிறிய பெரிய குழுக்களாக இணைந்து பல்லாயிரக்கணக்கான மூலக் கூறுகள் வடிவில் இருப்பதை அறிந்து கொள்வீர்கள். அதில் சிலவகை அணுக்களே உயிர்ப் பொருள்கள்!

உயிர் உள்ள செல் ஒன்றை பற்றி அறிந்து கொள்ள அதனுள்ளிருக்கும் நியூக்கிளியக் அமிலம் புரதம் போன்ற மூலக் கூறுகளை நாம் அறிய வேண்டியுள்ளது. இந்த மூலக் கூறுகளைப்பற்றித் தெரிய அவற்றுள் பிணைந்திருக்கும் அணுக்களைத் தெரிந்து கொள்ள வேண்டியதிருக்கிறது. அந்த அணுக்களைத் தெரிந்து கொள்ள அவற்றினுள்ளிருக்கும் எலக்ட்ரான்களையும் நியூக்கிளிய சஸ்களையும் அறிய வேண்டியுள்ளது. இப்படி மெல்ல மெல்ல ஊடுருவி உட்செல்லும் எனது பார்வையில் இருந்து உயிர் என்ற பொருள் மறைந்து போய் உயிரற்ற பொருட்களாளையே ஆராய்ந்து கொண்டிருக்கிறேன் என்கிறார் ஆல்பர்ட் சென்ட் கோர்க்கி என்ற உயிரியல் விஞ்ஞானி

நபியே! நீர் கூறும் : நீங்கள் கல்லாகவோ, அல்லது இரும்பாகவோ ஆகிவிடுங்கள். அல்லது உங்களது இதயங்களில் மிகப்பெரிதென தோன்றிவிடும் (வேறொரு) படைப்பாக ஆகிவிடுங்கள். அப்போது எங்களை எவர் (உயிர்ப்பித்து) மீளச் செய்வார்? என்று அவர்கள் கூறுவார்கள். உங்களை எவன் முதன் முறையாக உண்டாக்கினானோ அவனே! என்று (நபியே!) நீர் கூறும். (திருக்குர்ஆன் 17 : 50,51)

மேற்கண்ட அறிவியல் அறிஞர்கள் முதலானோர் உயிரற்றவை என்று கருதப்படுகின்ற அணுக்களிலிருந்து நுட்பமான உயிரிகள் தோன்றி படிப்படியாகப் பெரிய சிக்கலான உயிரினங்கள் வரை வளர்ச்சியடைந்துள்ளன என்று கருதுகின்றனர். ஆகவே அவர்களும் கூட அணுக்கள் என்பவை உயிருள்ளவை என்று கருதவில்லை இதற்குக் காரணம் உயிர் என்பதற்கு அவர்கள் கொண்டுள்ள பல வரையரைகளாகும். உயிர் இல்லாதவை தானாக இயங்க முடியாது. தானாக இயங்கும் தன்மை உடையவை உயிர் உள்ளவை என்ற ஒரு கருத்தை மட்டும் வைத்துக் கொள்வதே போதுமானது சரியானது.அதன்படி பார்த்தால் அணுக்கள் உயிருள்ளவை என்று ஏற்றுக் கொள்ளலாம். அணுவிற்குள் எலட்ரான்கள் குறிப்பிட்ட ஒழுங்கு முறையில் சுற்றி வருகின்றன என்பது அனைவருக்கும் தெரியும். அணுக்கள் உயிருடையவை மட்டுமல்ல. விருப்பு வெறுப்பும் உடையவை. அதனால்தான் எதிர் எதிர் துருவங்கள் (ஆண்–பெண்) ஒன்றையொன்றும் கவர்கின்றன. ஒரே மாதிரி துருவங்கள் ஒன்றையொன்று விலக்குகின்றன.

நாம் உண்கின்ற சமைக்கப்பட்ட உணவு உயிரற்றவை. உண்டபின் இரைப்பையிலும், குடலிலும் ஏற்படுகின்ற வேதியல் மாற்றங்களினால் குருதியாக தசையாக நரம்பாக அதாவது உயிருள்ளவையாக மாறுகின்றன. உயிரற்றவை உயிருள்ளவையாக மாறின என்பதை விட எல்லாமே உயிர் உள்ளவையாகத்தான் இருக்கின்றன என்பதே பொருத்தமாகும்.

இறந்தவற்றிலிருந்து உயிருள்ளவற்றையும், உயிருள்ள வற்றிலிருந்து இறந்தவற்றையும் வெளிப்படுத்துபவன் யார்? (திருக்குர்ஆன் 10 : 31)

இதனால் இன்னொரு பேருண்மையும் விளங்க வருகிறது. அதாவது உயிர்வேறு உடல் வேறு என்றும் உயிரை பார்க்க முடியாது என்றும் கருதிவந்தோம். இப்போது எல்லாமே உயிர்தான். உயிர் இல்லாதவையே இல்லை என்பதனால் நாம் உயிர்களை மட்டும்தான் காண்கிறோம் (உயிரற்ற) உடலை இல்லை! இந்த உடல் தான் மண்ணோடு மண்ணாய் மக்கிப் போனதே. அப்படியானால் உயிர் போய் விட்டது என்றால் என்ன மாற்றம் நிகழ்கிறது? உயிரற்ற நிலைநீங்கி அது தன்னுடைய மூலநிலைக்கு அணு நிலைக்குப் படிப்படியாகச் சென்று விடுகிறது என்பதே சரி.

வள்ளுவர் சொன்னது போல் :

உறங்குவது போலும் சாக்காடு உறங்கி

விழிப்பது போலும் பிறப்பு

– திருக்குறள் 339

ஒரு மனிதனை ஓர் உயிர் என்கிறோம். ஆனால் ஓர் உடலிலே கோடான கோடி உயிர்கள் (பல்வேறு உயிர் அணுக்களாக) ஒருங்கிணைந்து செயல்படுகின்றன. அவை அந்த உடலிலேயே பிறந்து வளர்ந்து மடிகின்றன. அவை போன்ற கோடான கோடி உயிர் அணுக்களுக்கு நமது உடலே ஒரு பெரும் பிரபஞ்சமாக இருக்கிறது.

இதே போல் கோடான கோடி உயிர்கள் பிறந்து வளர்ந்து மடியும் இப்புவியை ஓர் உயிர் எனலாம். அக்கருத்தை ஓர் அறிவியல் கொள்கையாக முன் மொழிந்தவர் ஆங்கில வேதியல் அறிஞர் ஜேம்ஸ் லவ்வாக் என்பவர் அவர் விளக்குகிறார் :

பூமி ஒரு ஜடமல்ல : இயக்கங்களும் உறுப்புகளும் அமைந்த மூலமாக ஒழுகுகின்ற ஓர் உயிரி ஜீவன் போன்றதே. உலகின் இயற் கூறுகளும் உயிரினங்களும் வேறுபட்டதாகத் தோன்றினாலும் இயக்கத்தினால் ஒருங்கிணைந்தவையே.

ஓர் உயிரினம் எவ்வாறு தன் இயக்கங்களைக் கூட்டியும் குறைத்தும் தகவமைத்தும் ஒழுங்குபட வாழ்ந்து கொண்டு இருக்கின்றதோ அது போலத்தான் பூமியின் இயக்கமும் நிகழ்கிறது. எனவே பூமி வெறும் கோளமல்ல. துடிப்புடன் இயங்கும் உயிரியைப் போன்றதே.

இதே போல எல்லா உலகங்களும் உயிர்களும் தோன்றி வளர்ந்து மடியும் நிலைக்கலனாக உள்ள இப்பிரபஞ்சமும் ஓர் உயிரிதான் என்பது தெளிவாகிறது.

இதையே தான் மெஞ்ஞானிகள் பிரபஞ்ச சக்தி என்றும் இறைசக்தி என்றும் இயற்கை என்றும் கூறுகின்றார்கள்.

ஆக, உயிரின் எல்லையை மரணம் தீர்மானிப்பது இல்லை. மரணத்திற்குப் பின் உயிரற்ற ஜடமான நிலையில் மண்ணோடு மண்ணாய் மக்கிப் போன ஃபாஸில்களாக ஆன பின் மீண்டும் புதியதொரு படைப்பாய் எல்லாமே உயிர்ப்பிக்கப்படுகிறது என்றால் அப்போது பிரிந்த உயிர் அதுவரை எங்கிருந்தது...? என்னவானது....? விஞ்ஞானத்தில் பதில் இல்லை.

நாம் (இறந்து) எலும்பாகி உக்கி, மக்கிப் போனதன் பின்னர் புதிய ஒரு படைப்பாக உயிர்ப்பிக்கப்படுவோமா...? என்று அவர்கள் கேட்கிறார்கள். (திருக்குர்ஆன் 17 : 49)

அறிவியில் ரீதியாக ஆராய்ந்த பின்னும் சந்தேகமில்லை. மீண்டும் உயிர்ப்பிக்கப்படுவார்கள். அதுவரை எங்கே பறந்து போனது அந்த உயிர் என்கிற ரூஹ். இது பற்றிய ஞானம் நமக்கு குறைவு.

(நபியே) ருஹுுவைப்பற்றி அவர்கள் உம்மிடம் கேட்கிறார்கள். அதற்கு நீர் அது எனது இறைவனின் கட்டளையால் ஏற்பட்டது (அதைப்பற்றி) வெகு சொற்ப ஞானமேயன்றி உங்களுக்குக் கொடுக்கப்படவில்லை (ஆதலால் அதன் நுட்பங்களை நீங்கள் அறிந்து கொள்ள முடியாது) என்று கூறுவீராக! (திருக்குர்ஆன் 17 : 85)

ஒவ்வொரு உயிரின் பயணங்களும் என்றும் முடிவதில்லை.

# 26/11 மும்பை தாக்குதல்

## அஜ்மல் கேசாப் தீர்ப்பும்/பொது நல வழக்கும்




வைகறை வெளிச்சம் மே இதழில் சுட்டிக் காட்டியபடி அஜ்மல் கேசாப் என்ற IB மத்திய உளவுத்துறையின் கையிலிருந்த அப்பாவிக்கு மரண தண்டனை வழங்கப்பட்டு விட்டது.

இனி 26/11 என்ற மும்பைத் தாக்குதல் பற்றியோ அதனை நிறைவேற்றிய அபிநவ் பாரத் ஐ பற்றியோ அதிகமாக யாரும் விவாதிக்க கூடாது என்றே எல்லோரும் எதிர்பார்ப்பார்கள். ஆனால் நமது போர் தீவிரவாதத்தின் உண்மை முகத்தை நாட்டு மக்களுக்கு எடுத்துச் செல்லும் போர் தொடரும்.

பத்திரிகைகள் மிகை யாகவே தாளங்கள் போடு கின்றன. ஏதோ வரலாற்று சிறப்பு மிக்க தீர்ப்பு என்பதாக பாராட்டுகின்றன.

நீதிபதி தகல்பானிக்கு எல்லோரும் பாராட்டுகளை வழுங்கிக் கொண்டிருக்கி றார்கள். பதக்கங்கள் தான் மிச்சம்.

ஆனாலும் தீர்ப்பில் கர்க ரேயைக் கொலை செய்தது யார்? என்பதை சொல்லவில்லை,

எனினும் கர்கரேயின் மனைவி கவிதா கர்கரேயின் பெயரில் பல கருத்துக்கள் பிறப்பிக்கப்படுகின்றன. கேசாப்தான் கர்கரேயைக் கொலை செய்தது போல். கவிதா கர்கரேயே நம்புவதைப் போன்றதொரு தோற்றத்தை உருவாக்கிட எல்லா முயற்சி களையும் மேற்கொண்டு வரு கின்றார்கள் பத்திரிக்கை யாளர்கள்.

கர்கரேயைக் கொலை செய்தது யார்? என்று நூலை எழுதிய எஸ்.எம். முஷ்ரிஃப் அவர்கள் இருக்கின்றார்கள், அவர்களை உடனேயே தொடர்பு கொண்டோம்.

அவர் தான் தீர்ப்பைப் படித்தாகவும் ஆனாலும் கர்கரேயைக் கொலை செய்தது யார்? என்பதை தீர்ப்புச் சொல்லவில்லை என்பதையும் கர்கரேயின் காரில் கேசாப்பின் குண்டுபட்டிருப்பதாகவும் தீர்ப்பு கூறுகின்றது என்றார்.

இன்னும் பல இருக்கின்றன. அவற்றை நான் விரிவாக வெளியிடுவேன் என கூறினார்,

இந்துப் பத்திரிக்கை அஜ்ம லின் அல்லது இஸ்மாயிலின் குண்டு கர்கரேயை தாக்கி இருக்கலாமென கூறியுள்ளது.

முஷ்ரிஃப் அவர்கள் இன்னொரு வினாவை முன் வைக்கின்றார்கள். அது கர்கரேயின் உடலில் பாய்ந்துள்ள குண்டுகள் யாருடைய துப்பாக்கியில் இருந்து பாய்ந்தன என்பதை கொண்டு ஆராய்ச்சி மேற்கொள்ளப் பட்டிருக்க வேண்டும் என்கின்றார்,

ஆமாம்! கர்கரேயை கொலை செய்தவர்களை கண்டு பிடிப்பதில் அரசு முறை யான முயற்சிகள் எதையும் மேற்கொள்ளவில்லை என்பது வேதனையானது.

இதில் IB என்ற நமது உளவுத்துறை காப்பாற்றிட நினைத்தவர்களை காப்பாற்றி விட்டது. இதில் இந்த தீர்ப்பில் IB க்குதான் அதிக லாபம்,

எழுதிய கண்டுபிடிப்புகளில் காமா மருத்துவமனைக்கு தேவையான அளவிற்கு படைகள் அனுப்பபட்டதாக கூறுகின்றது.

**இதில் ஒரு ஐயம்!!**

ஒரு நீதிமன்ற தீர்ப்பு இதில் காட்டப்பட வேண்டிய அளவுக்கு அதிகமாக முக்கியத்துவம் தருகின்றது. இதனால் இந்த தீர்ப்பின் வழி முஷ்ரிஃப் அவர் களின் ஆய்வுகளில் ஒன்றுக்கு பதில் தந்திட முயற்சிகள் மேற்கொண்டிருக்கிறார்கள் என்றே சொல்லிட வேண்டும்.

இதனை பார்த்திடும்போது உளவுத்துறையின் விருப்பம் ஒன்று தீர்ப்பாக வந்ததோ என்றே எண்ணிடத் தோன்றுகிறது.

வழக்கை விரைந்து முடித்திட வேண்டும் என்பது IB என்ற மத்திய உளவுத்துறையின் முக்கிய நோக்கம்.

காரணம் முஷ்ரிஃப் அவர் களின் நூலில் முக்கியத்து வத்தை மண்மூடிப்போக செய்திட வேண்டும் என்பதே.

ஆனால் முஷ்ரிஃப் அவர்கள் PIO என்ற பொது நல வழக்கு ஒன்றை இது விஷயத்தில் பதிவு செய்து விட்டார்கள்.

இப்போது தீர்ப்பில் இரண்டு பேரை விடுதலை செய்தி ருக்கின்றார்கள். அவர்கள் வீணாக சிறையில் அடைக்கப் பட்டு சித்திரவதை செய்யப் பட்டுள்ளார்கள்.

அவர்கள் விடுதலை செய்யப்பட்டதை பற்றி கருத்துகளை கூறுகின்றவர்கள் அவர்கள் அப்பாவி என்பதே காவல் துறைக்கும் வழக்கை ஜோடனை செய்தவர்களுக்கும் தெரிந்திருக்க வேண்டும். இருந்தும் அவர்கள் ஏன் சிறையில் அடைக்கப்பட்டார்கள்.

வீணான வழக்குகள் பலவீனமானவை என்பதை தெரிந்திருந்தும் அரசு வழக்கறிஞர்கள் ஏன் அந்த வழக்கை நடத்தினார்கள் என்றெல்லாம் வினாக்களை எழுப்பியுள்ளார்கள். இந்தியாவைச் சார்ந்தவர் களை விடுவித்து விட்டால் தீர்ப்பு மிகவும் நடுநிலையானது என்பதைப் போல் தோன்றும் என்று நினைத்திருக்கிறார் களா? என்று சிலர் வினவியுள்ளார்கள்.

இந்நிலையில் மும்பை தாக்குதலை நடத்தியவர்கள் அமெரிக்க, யூத, இந்திய பாசிஸ்ட்கள் ஆகியோர் தான் என்ற 2008 நவம்பரிலேயே கூறிய அம்ரேஸ் மிஸ்ராவின் உள்ள குமுறலை இங்கே படியுங்கள்.

MGM

# அம்ரேஸ் மிஸ்ரா குமுறுகின்றார்

# உளவுத்துறையின் உண்மை முகம்

2008 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் நாடெங்கும் பெரும் பரபரப்பு.

ஆமாம்! நாட்டில் நடந்த பல்வேறு குண்டுவெடிப்புகள் அவற்றில் உயிரிழந்தவர்கள், ஊனம்பட்டவர்கள், அனைத்திற்கும் அபிநவ்பாரத் என்ற இந்து தீவிரவாத அமைப்பே காரணம் என்ற செய்தி நாட்டு மக்களுக்குக் காட்டப்பட்டுக் கொண்டே வந்தது.

மூக்கில் கைவைத்தவர்களாக நாட்டு மக்கள் மலைத்துப் போய் நின்றார்கள்.

பழி ஒரு பக்கம், பாவம் ஒரு பக்கம், என நெழிந்தார்கள்

வழக்கமாக இந்துத்துவ தீவிரவாத அமைப்புகளுக்கு நெருக்கடிகள் வரும்போதெல்லாம் பாரதீய ஜனதா கட்சிக்கு நெருக்கடிகள் வரும் போதெல்லாம் நாட்டில் ஒரு பெரும் தாக்குதல் நடைபெறும்.

இந்த உண்மைக்கு நிதர்சனமான காட்சி நாடாளுமன்ற தாக்குதல். அடுத்த சாட்சிதான் 26/11 என அடையாளமிட்டு அழைக்கப்படும் மும்பை தாக்குதல்கள்.

இந்தத் தாக்குதல் நடந்த முதல் நாள் தொட்டே அம்ரேஷ் மிஸ்ரா என்ற மனித உரிமை ஆர்வலர் அஜீஸ் பட்னி என்ற பத்திரிக்கையாளர், இவர்களெல்லாம், நாட்டுக்கோர் செய்தியைச் சொன்னார்கள். அது மும்பைத் தாக்குதலை நடத்தியவர்கள் மும்பை நரிமன் ஹவுஸ் இல் அலுவலகம் வைத்திருக்கும் யூதர்களும் இந்தியாவில் அவர்களின் கைகளாக இயங்கிடும் இந்துத்துவ அமைப்புகளும் தான் என கூறினார்.

நரிமன் ஹவுஸ் இல் 26/11 க்கு முன் பல சந்திப்புகள் நடந்தன. அவை யூதர்களுக்கும் இங்குள்ள தீவிரவாதிகளுக்குமிடையே நடந்தவை அவற்றில் அறிமுகமில்லாத பல புதியமுகங்கள் கலந்து கொண்டன.

இந்தப் புதிய முகங்கள் எவை? எவை? என்பது கண்டறியப்பட வேண்டும் என்ற கோரிக்கை மும்பைக் காவல்துறையிடம் தொடர்ந்து வைக்கப்பட்டது.

ஆனால் மும்பைக் காவல்துறை அதைக் கண்டுகொள்ளவே இல்லை. இதனால் ஆத்திரமுற்ற மக்கள் ஒரு நாள் ரோடு ரோக்கே என்ற சாலை மறியலில் கூட ஈடுபட்டார்கள்.

மக்கள் சாலை மறியலில் ஈடுபட்டதை ஊடகங்கள் ஒரு நாள் செய்தியாக மட்டும் வெளியிட்டு விட்டு மூடிமறைத்து விட்டன. இவற்றை நாம் அப்போதே வைகறை வெளிச்சத்தில் வெளியிட்டோம்).

இந்த உண்மைகளையெல்லாம் நாட்டு மக்களின் பார்வைக்கு வைத்தார் அம்ரேஷ் மிஸ்ரா. அவர்கள் ஆனால் யாரும் அதைக் கண்டு கொள்ளவில்லை.

பின்னர் 26/11 நிகழ்வுகள் நடந்தவுடன் அவர் பத்திகையாளர்கள் சந்திப்பு ஒன்றை நடத்தினார். அதிலும் தனது ஆழிய கருத்துக்களை வைத்தார். அப்போதும் யாரும் கண்டுகொள்ளவில்லை சில உருது பத்திரிக்கைகளும் முஸ்லிம்கள் நடத்தும் பத்திரிகைகளுந்தான் அந்தச் செய்தியை வெளியிட்டன.

தன்னுடைய முயற்சிகளை அனைவரும் முறியடிக்கின்றார்கள் உண்மையை மறைக்கின்றார்கள் என்பதையெல்லாம் அறிந்த அம்ரேஷ் மிஸ்ரா அவர்களும் அஜீஸ் பட்டினி (இவர் ராஷ்டிரிய ஷஹாரா என்ற பத்திரிகையில் முக்கிய பங்கு வகிப்பவர்) அவர்களும் நீதிக்காகப் போராடும் சில பத்திரிகையாளர்களைச் சந்திப்பது என முடிவு செய்தார்கள். இந்தப் பின்னணியில் ஸ்டீல்டா செட்டல்வாட் அவர்களையும் சன்தீப் பிரதேஷ் என்ற பத்திரிகையாளரையும் சந்தித்தார்கள். இவர்களும்

உண்மையை ஏற்றுக் கொள்ளவில்லை. சில பத்திரிகையாளர்கள் சந்திப்பில் அவர்கள் எதிர் கேள்விகளைக் கேட்டார்கள். ராபாத் ஹவுஸ் இல் நடந்த முக்கிய ஆலோசனை களைச் சொன்னார்கள் யாரும் ஏற்றுக் கொள்ளவில்லை.

அம்ரேஷ் மிஸ்ரா அவர்களை யும் அஜீஸ் பட்னி அவர்களையும் அடியாட்களை ஏவி அடித்தார்கள். உதைத்தார்கள். அனைத்தையும், அமைதியாக ஆரவாரமில்லாமல் மக்களிடம் ஒப்படைத்து விட்டு அமைதிக் காத்தார்கள் அம்ரேஷ் மிஸ்ரா அவர்களும் அஜீஸ் பட்னி அவர்களும்.

2008 ஆம் ஆண்டு அம்ரேஷ் மிஸ்ரா அவர்களும் அஜீஸ் பட்னி அவர்களும் சொன்னவை உண்மைகள் என்பது மெல்ல, மெல்ல தெளிவாகின.

எஸ்.எம். முஷ்ரிஃப் அவர் களின் கர்கரேயைக் கொலை செய்தது யார்? என்ற நூலுக்குப்பின் எல்லாமே வெட்ட வெளிச்சமாகின.

குறிப்பாக நமது துணை குடியரசு தலைவர் அவர்கள் ஆற்றிய உரைக்குப்பின் நாட்டு மக்களே ஒரு உஷார் நிலைக்கு வந்ததாகக் தெரிகின்றது.

துணை குடியரசு தலைவர் ஹமீத் அன்சாரி அவர்கள் உளவுத் துறைகள் செய்யும் செயல்கள் நடத்தும் ஆய்வுகள் புலன் விசாரணைகள் இவை கேள்விகணக்கற்றவையாக இருந்திடக் கூடாது என்றும் உளவுத் துறை யாருக்கேனும் ஏதேனும் ஒரு விதத்தில் பதில் சொல்லுபவையாக இருந்திட வேண்டும் என்றும் கூறி உள்ளார்கள்.

இந்த உரை ஜனவரி திங்கள் 19ஆம் நாள் 2010இல் நிகழ்த்தப் பெற்றது. அந்த உரையில் நமது உளவுத்துறைகளும் ஏன் ஒரு நாடாளுமன்ற நிலைக்குழுவுக்குப் பதில் சொல்லிடக் கூடாது? ஏனைய நிலைக்குழுக்களைப் போல் ஓர் நிலைக்குழுவுக்கு உட்பட்டதாக ஏன் இயங்கிடக் கூடாது? என்றெல்லாம் வினாக்களை எழுப்பினார்.

இந்திய அரசின் அதிகார வட்டம் சற்றே அசைந்தது. M.K. நாராயணன் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் என்ற பெரிய பொறுப்பை வகித்தவர் இடமாற்றம் செய்யப்பட்டார். அவர் வகித்த ஒரே ஒரு ஊரில் ஒரே ஒரு ராஜா பதவி பிடுங்கப்பட்டது. ஆனாலும் ஒரு குறுநில மன்னராகி கவர்னராகத் தான் பதவி மாற்றம் பெற்றார்.

இவர் நமது நாட்டு தேசியப் பாதுகாப்பிற்கு இஸ்ரேலைக் கேட்டுத்தான் ஆலோசனைகளை வழங்குவார். மூக்கடைத்தால் கூட இஸ்ரேல் சென்று தான் வைத்தியம் செய்வார். இவர் இப்போது பதவி மாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

அடுத்து கர்கரேயைக் கொலை செய்யும் விவாகரத்தில் மத்திய உளவுத்துறையின் அங்கமாக நின்றவர் கர்கரேயைக் கொலை செய்வதில் தலையாயப் பணி களைச் செய்து முடித்தவர் ரகுவான்ஷீ என்ற காவல்துறை அதிகாரி. மராட்டிய மாநிலத்தில் பல நூறு முஸ்லிம் இளைஞர் களைக் கொலை செய்வதில் காரணமாக இருந்தவர்.

அண்மைக் காலம் வரை இவருக்கு எந்தப் பதவிகளையும் கொடுக்காமலிருந்தார்கள். ஆனால் இவர் பெயரளவில் மராட்டிய மாநிலத்தைச் சார்ந்த தீவிரவாதப் எதிர்ப்புப் படையின் தலைவராக இருந்தார்.

தனக்கு எந்த முக்கியத்துவமு மில்லை என்பதை அறிந்து மனம் வருந்தினரார். எப்படியாவது பழைய முக்கியத்தைப் பெற்றுவிட வேண்டும் என விரும்பினார். அவருடைய முக்கியத்துவம் பாழ்படும் போதெல்லாம் அவர் முஸ்லிம் இளைஞர்களைப் பொய்யான காரணங்களின் கீழ் கைது செய்து தான் பிரபல்ய மாவார். உடன் இழந்த முக்கியத்து வங்களை மீண்டும் பெறுவார்.

இந்த வழக்கமான வஞ்சகத்தைப் பின்பற்றி மார்ச்சு 13,2010 இரண்டு முஸ்லிம் இளைஞர்களைக் கைதுசெய்தார். அவர்கள் மும்பையின் முக்கிய இடங்களைக் குண்டு வைத்துத் தகர்க்கத் திட்டம் போட்டிருப்ப தாக அறிவித்தார் என பிரகடனப் படுத்தினார் குறிப்பாக முக்கிய எண்ணெய் கிடங்குகளைத் தகர்த்திட திட்டமிட்டிருந்ததாகத் தகவல்களைச் சொன்னார்.

ஆனால் அத்தனையும் பொய்

இதனை அறிந்த உளவுத்துறை அமைச்சர் சிதம்பரம் அவரை பதவி மாற்றம் செய்திட ஆவனச் செய்தார்.

இந்த உண்மைகளெல்லாம்

இப்போது அம்ரேஷ் மிஸ்ரா போன்றவர்களை அசத்தி இருக்கின்றது.

ஆகவே அவர் அண்மையில் இப்படித் தன்னுடைய உளக் குமுறலைக் கொட்டித் தீர்த்திருக் கின்றார் அதன் தமிழ்வடிவத்தை வைகறை வாசகர்களுக்குத் தருகின்றோம்.

### மத்திய உளவுத்துறை இந்தியா வுக்கு எதிராகச் சென்று விட்டது : அம்ரேஷ் மிஸ்ரா

டேவிட் கோல்மேன் ஹெட்லி என்பவன் அமெரிக்க உளவுத் துறையின் டபுள் ஏஜென்ட் என்ற உண்மை வெட்ட வெளிச்சமாகி விட்டது.

இந்த பின்னணியில் இந்திய ஆங்கில இதழ்களின் அமெரிக்க விசுவாசம் இன்னொரு முறை ஊர்ஜிதம் செய்யப்பட்டுள்ளது.

ஆனாலும் விதிவிலக்காக இந்துஸ்தான் டைம்ஸ் பத்திரி கையின் ஆசிரியர் விர் சங்வி ஒரு தலையங்கத்தைத் துணிச் சலாக எழுதியுள்ளார் அந்தத் தலையங்கத்தில் இப்படித் கூறியுள்ளார்.

ஹெட்லி அமெரிக்க உளவுத் துறையின் கையாள். அவனுக்கு 26/11 என்ற மும்பைத் தாக்குலைத் தெரியும் என்றால் அமெரிக்கா வின் மத்திய உளவுத் துறைக்கும் அது தெரியும்.

இப்போது விர் சங்கி 26/11 அமெரிக்க யூத சதி என்பதை ஏற்றுக் கொள்கின்றார்.

ஆனால் இதையே நானும் அம்ரேஷ் மிஸ்ராவும் அஜீஸ் பட்னி அவர்களும் 26/11 நடந்தவுடன் சொன்ன போது ஏற்றுக் கொள்ள மறுத்துவிட்டார்.

மாறாக நாங்கள் அன்று இந்த உண்மைகளைச் சொன்ன போது எங்களை அடித்தவர்களை வேடிக்கை பொருளாய் பார்த்துக் கொண்டிருந்தவர்களில் ஒருவர்.

2008 நவம்பர் டிசம்பரில் 26/11 என்ற மும்பைத் தாக்குதல் அமெரிக்க யூத ஆர்.எஸ்.எஸ் சதி எனச் சொன்னதற்காகப் பலமுறை எங்களைக் கடிந்து எழுதியவர் விர்சங்வி. நாங்கள் ஏதோ தேசத்திற்கெதிராக சொல்வதாக எங்களைச் சாடி தங்கள் பேனாவை ஒட்டியவர். இதில் விர் சங்வி அவர்களை மட்டும் தனித்துச் சொல்வதற்கில்லை. இதில் அவரோடு அனைத்துப் பத்திரிகை யாளர்களையும் அணி சேர்த்துக் கொண்டார்கள்.

ஆனால் இப்போது டேவிட் கோல்மேன் ஹெட்லி விவகாரம் வெளியானதால் தங்களுடைய போக்கை விர் சங்வியும் இன்னும் சில பத்திரிகையாளர்களும் வெகுவாக மாற்றி உள்ளார்கள். இப்போதும் அவர்கள் அன்று தாங்கள் செய்த தவறை ஏற்றுக் கொள்ளவில்லை.

2009 நாடாளுமன்ற தேர்தலில் அத்வானியைப் பிரதமராக்கிட ஆங்கில பத்திரிகைகள் பல வரிந்து கட்டிக் கொண்டு எழுதின. அதன் மையப் பொருளாக மும்பைத் தாக்குதலில் காங்கிரஸ் கட்சி கையாலாகாத் தன்மையோடு நடந்து கொண்டது எனக் காட்டி னார்கள்.

ஆனால் அஜீஸ் பட்னியும் நானும் மேற்கொண்ட இடைவிடா முயற்சியால் ஆங்கில பத்திரிக்கை களும் அத்வானியும் தோற்றார் கள். நாம் ஜெயித்தோம் காங்கிரஸ் ஜெயித்தது.

26/11 மும்பை தாக்குதலில் அமெரிக்க உளவுத்துறையின் கைகள் இருக்கின்றன என்ற உண்மை வெட்ட வெளிச்சமானப் பின் பல பத்திரிகையாளர்களின் முகங்கள் சிவந்து விட்டன.

இப்போதும் பல பத்திரிகைகள் ஹெட்லியைக் காப்பாற்றிட தங்களால் இயன்ற மட்டும் முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றன.

ஆங்கில இதழ்கள் டேவிட் கோல்மேன் ஹெட்லியை ஒரு லஷ்கரே தய்பா ஏஜென்ட் என்று மட்டும் காட்டி அவனுக்கும் CIA என்ற அமெரிக்க உளவுத்துறைக் கும் உள்ள தொடர்புகளை மறைத்து வருகின்றன.

இந்த நிலையில் தான் காங்கிரஸ் 'NIA' NATIONAL INVESTIGATION AGENCY அரசு என்ற தேசிய புலனாய்வு முகவாண்மை ஒன்றை தொடங்கியது. இந்தப் புலனாய்வு முகவாண்மையைத் மத்திய அரசு தொடங்குவதற்குக் காரணம் as the IB and other Indian AGENCIES & Espcially the 'IB' had not only gone anti- muslim they had gone anti India. IB என்ற மத்திய புலனாய்வுத் துறையும் இந்தியா வின் இதர உளவுத்துறைகளும் குறிப்பாக IB என்ற மத்திய

உளவுத்துறை முஸ்லிம்களுக் கெதிராக மட்டும் செல்லவில்லை மாறாக இந்தியாவுக்கு எதிராகவும் போய்விட்டது.

இந்த உண்மைக்கு நிதர்சன மான எடுத்துக் காட்டு பட்லா ஹவுஸ் (டெல்லி) இல் இரண்டு மாணவர்களைத் தேர்ந்தெடுத்துக் கொலை செய்தது. குறிப்பாக ஆசம் கார்க்–ஐ சார்ந்த முஸ்லிம் மாணவர்கள் நன்றாகக் கல்வி அறிவு பெற்ற முஸ்லிம் இளைஞர்கள் கொலை செய்யப்பட்டது.

கொலை செய்யப்பட்ட இந்த மாணவர்கள் மதரஸாக்கள் என்ற மார்க்கக் கல்விக் கூடங்களில் கற்றவர்கள் அல்ல. மாறாக, உலகக் கல்விக் கூடங்களில் உச்சத்தை எட்டியவர்கள்.

அவர்கள் இளைஞர்கள் மட்டுமல்ல மாறாக அவர்கள் தங்கள் படிப்பில் தங்கமடல்களைப் பெற்று சாதனை தளங்களில் தடம் பதித்தவர்கள்.

ஷீஷான் என்ற அசாம் கார்கை சேர்ந்த மாணவன் தங்கப் பதக்கங்கள் பலவற்றை வென்ற வன். பட்லா ஹவுஸ் படுகொலை யின் போது கைது செய்யப் பட்டான். அப்பாவியான அவன் மீது 50 வழக்குகள் பதியப்பட் டுள்ளன. மூன்று மாநிலங்களில் அவன் வழக்காடி வென்றால் தான் விடுதலை. நிச்சயமாக அவனுடைய வாழ்க்கை பாழாக்கப்பட்டு விட்டது. இந்த வழக்குகள் முடிய 100 ஆண்டுகள் ஆகலாம். அதுவரை அவன் சிறையிலேயே இருந்தாக வேண்டும்.

பலர் பல்வேறு சிறைகளில், அழிந்து கொண்டிருக்கிறார்கள். அவர்கள், ஆஸம்கார்க் உத்திரப்பிரதேச மாநிலத்தின் பிற பகுதிகள், குஜ்ராத், இராஜஸ்தான், மாகாராஷ்டிரா ஆகிய இடங்களைச் சார்ந்தவர்கள். இவர்கள் நாட்டின் பல்வேறு சிறைக் கூடங்களிலும் அல்லாடிக் கொண்டிருக்கின் றார்கள்.

## கவுண்டனாமோ சித்திரவதைக் கூடங்கள்

கவுண்டனாமோ சித்திரவதைக் கூடங்களை அமெரிக்காதான் நடத்தி வருகின்றது என்றில்லை. நமது மத்திய உளவுத்துறை 'IB' யும் இந்தியாவில் பல சித்திர வதைக் கூடங்களை நடத்தி வருகின்றது. அங்கே அப்பாவி முஸ்லிம் இளைஞர்கள் சித்திரவதைப் படுத்தப்படுகின்றார்கள்.

சித்திரவதையின் போது அவர் கள் இறந்தால் சந்தடி இல்லாமல் புதைக்கப்படுகின்றார்கள்.

The IB, to-day has been infiltrated heavily by RSS, Mossad and CIA. Infact the one agency is an anti-national agency. It is obstructing the work of NIA and secular Indians like Shri.Digvijay Sing. Soon in India's interest the IB will have to be closed down. All its communal officers will be hunted down and tried in a court of Just law.

இதன் பொருள் : மத்திய உளவுத்துறை IB இன்று ஆர்.எஸ்.எஸ். (என்ற இந்துத்துவ அமைப்பு) மொசாத் (என்ற இஸ்ரேலிய உளவுத்துறை) சிஐஏ என்ற அமெரிக்க மத்திய உளவுத்துறை இவற்றால், அதிகமாக ஊடுருவப்பட்டு விட்டது. உண்மையைச் சொல்வதானால் இந்த முகவாண்மை IB தேசவிரோத முகவாண்மையாகும். இது தேசிய புலனாய்வு அமைப்பின் (NIA) செயல்பாடுகளையும் திக்விஜய்சிங் போன்ற மதசார்பற்ற இந்தியர்களின் செயல்களையும் தடுக்கின்றது, வழிமறிக்கின்றது. இந்தியாவின் தேசிய நலன்கருதி, இந்த அமைப்பு மூடப்பட்டாக வேண்டும். அதிலிருக்கும் வகுப்பு வெறியர்கள் பிடிக்கப்பட்டாக வேண்டும். சட்டத்தின் முன் நிறுத்தப்பட்டாக வேண்டும்.

நமது மத்திய புலனாய்வுத் துறையான 'IB'க்கு ஹெட்லியைப் பற்றித் தெரியும். காரணம், 26/11 என்ற மும்பைத்தாக்குதலில் ஈடுபட்டவர்கள் வாங்கிய SIM சிம் கார்டுகளை வாங்கியது 'IB' என்ற மத்திய உளவுத்துறையின் கையாள்தான். இது இப்போது நிரூபிக்கப்பட்டுவிட்டது. இன்றுவரை 26/11 இல் SIM கார்டுகளை வாங்கியது யார்? என்பதை மத்திய உளவுத்துறை 'IB' கூறிடவில்லை. அதே நேரத்தில் மத்திய உளவுத் துறை தான் 26/11 என்ற மும்பைத் தாக்குதலை விசாரித்து வருகின்றது. என்பதையும் நாம் நினைவில் கொள்ள வேண்டும்.

அதேபோல் மராட்டிய மாநில 'IB' என்ற மத்திய உளவுத்துறை தலைவருக்கு, மும்பை தாக்குதல் கள் பற்றி எந்தத் தகவலையும் சொல்வதில்லை. மதசார்பற்ற சிந்தனையுடைய அதிகாரிகளுக்கு

எந்தத் தகவலையும் 'IB' இதிலுள்ள வகுப்பு வெறியர்கள் சொல்வதில்லை.

மாராட்டிய மாநில ஐ.பி. சார்ந்த அதிகாரி ஒருவர் எனக்கு மும்பை தாக்குதல் விசாரணையில் என்ன நடக்கின்றது என்பதே தெரியாது என ஆதங்கப் பட்டுள்ளார்.

டேவிட் கோல்மேன் ஹெட்லி விவகாரம் வெளியே வந்திருக்காது 'NIA' என்ற தேசிய புலனாய்வுக் குழு களமிறங்க வில்லை என்றால்.

**'IB' என்ற மத்திய உளவுத் துறை தீவிரவாதிகளை உருவாக்குகின்றது.**

இப்போது செய்தி வருகின்றது அது 'IB' என்ற மத்திய உளவுத்துறை கோராக்பூரில் ஒரு தீவிர பயிற்சி முகாமை நடத்திக் கொண்டிருக்கின்றது. அதில் இந்துத்துவ தீவிரவாதிகளை உருவாக்கிக்கொண்டிருக்கின்றது. இவர்கள் தீவிரவாதிகள் எனக் குற்றம் சாட்டப்பட்டு நிற்கும் முஸ்லிம் விசாரணை கைதிகளைக் கொலை செய்ய பயன்படுத்தப்படுவார்கள் எனக் கூறுகின்றார்கள்.

சோட்டா இராஜன், என்ற பெயர்களெல்லாம் தாராளமாகப் பயன்படுத்தப்படுகின்றன. இது போன்ற பெயர்களைப் பயன் படுத்திதான் 1993 இல் முஸ்லிம் வியாபாரிகள், அரசியல் செல்வாக்குமிக்க முஸ்லிம்கள், சமுதாயப்பணியில் ஈடுபடும் முஸ்லிம்கள் இவர்களெல்லாம் கொலை செய்யப்பட்டார்கள். மிகவும் முறையாகத்திட்டமிட்டு இவர்களை ஒழித்தார்கள்.

இப்படிக் கொலை செய்யப் பட்டவர்களில் அண்மையில், கொலை செய்யப்பட்ட ஷஹீத் ஆஸ்மி முக்கியமானவர். அவர் செய்த குற்றம் எதுவுமில்லை 2006 இல் நடைபெற்ற மும்பைரெயில் குண்டு வெடிப்பில் குற்றம் சுமத்தப் பெற்ற அப்பாவி முஸ்லிம்களுக்காக வாதாடினார்.

ஷஹீத் ஆஸ்மி, மும்பை ரெயில் குண்டு வெடிப்பில், குற்றம் சுமத்தப்பட்ட அப்பாவி முஸ்லிம் களுக்கு எதிராகப் புனையப்பட்ட பொய் சாட்சியங்களை நீதிமன்றத்தில் தகர்த்தெறிந்து கொண்டிருந்தார்.

இதனால் நேப்பாளம் – கொராக்பூர் தொடர்புடைய தீவிரவாதிகளால் கொலை செய்யப்பட்டார்.

மராட்டிய மாநிலம், முஸ்லிம் களை விருப்பம்போல் கொலை செய்யலாம், என்ற உரிமை பெற்ற மாநிலம். இங்கே முஸ்லிம்களைக் கொலை செய்வது முறைபடுத்தப் பட்ட – அங்கீகரிக்கப்பட்ட ஒரு செயலாக மாறிவிட்டது.

ஹெட்லி பல முறை இந்தியா வந்திருக்கின்றான். அவன்தான் 26/11 என்ற மும்பைதாக்குதலை ஆர்–எஸ்.எஸ். மொசாத், அமெரிக்க உளவுத்துறை இவற்றோடு இணைந்து செயல்படுத்தி இருக்கின்றான். இது 'IB' என்ற மத்திய உளவுத்துறைக்குத் தெரியும் தெரிந்தும், அவர் அதை வெளியிடவில்லை.

இந்தப் பின்னணியல் 'IB' என்ற மத்திய உளவுத்துறையும், ஹெட்லியைப் போலவே தீவிரவாத செயல்களை அரங்கேற்றிடும் நிறுவனம். அப்பாவிகளைக் கொலை செய்வதில் இரக்கமற்ற ஈன நிறுவனம் என்றாகிவிட்டது.

இதைத் தவிர நேர்மையான ஓர் முடிவுக்கு யாரும் வந்திட இயலாது.

மாலிகோன் குண்டு வெடிப் பில் இராணுவ அதிகாரி ராஜ்குமார் புரோகித், சாத்வி பிரஞ்ந்யா ஆகியோர் மீது தாக்கல் செய்யப் பட்டுள்ள குற்றப்பத்திரிகையைக் கவனமாகப் படிப்போம் என்றால் ஆர்.எஸ்.எஸ் என்ற அமைப்பிற் கும் பாகிஸ்தானின் பன்னாட்டு உளவுத்துறையாகிய ISI க்கும் நிறைய தொடர்புண்டு என்பதை அறிந்திடலாம்.

தேசபக்தியில் அனைவரையும் மிகைத்து நிற்பதாகப் பீற்றிக்கொள்ளும் ஆர்.எஸ்.எஸ் என்ற அமைப்பு கோடிக்கணக்கில் பாகிஸ்தான் பன்னாட்டு நிறுவனத்திடம் பணம் வாங்கி இருக்கின்றது. இதனை 'IB' என்ற மத்திய உளவுத்துறை நன்றாக அறியும். ஆனால் அதனை கண்டு கொள்ளவே இல்லை.

டேவிட் கோல்மேன் ஹெட்லி இன் சகாப்தத்திற்கும் அபிநவ் பாரத் என்ற இந்துத்துவ தீவிர வாத அமைப்பிற்கும், இதர பெயர் களில் இயங்கிடும் இந்துத்துவ தீவிரவாத அமைப்புகளுக்கும் நிரம்ப தொடர்புண்டு.

இந்து இந்துத்துவ தீவிர அமைப்புகள் தாம் அண்மையில் நடந்த பூனா குண்டுவைப்பு களை நடத்தியவை. இதில் ஆர்.டி.எக்ஸ் வகை குண்டுகளும், அம்மோனி யம் நைட்ரேட்டும் பயன்படுத்தப் பட்டிருந்தது.

பெப்ருவரியல் திக் விஜய் சிங், மராட்டிய மாநிலம் சென்று திரும்பினார். இதற்குப் பிறகு மராட்டிய மாநில உள்துறை செயலர், மும்பைக் குண்டு வெடிப்பில் இந்துத்துவ அமைப்பு களின் கைவண்ணமிருப்பதாகத் தெரிவித்தார். ரகுவான்ஷீயும், பூனா குண்டு வெடிப்பில் இந்துத்துவ அமைப்புகளின் கைகள் இருக்கின்றன என்பதை ஒத்துக்கொண்டார்.

ஆனால் இப்போது மாராட்டிய உள்துறை அமைச்சர் RRபாட்டில் யாராவது பூனா குண்டு வெடிப்பிற்கும் இந்துத்துவ அமைப்புகளுக்கும் தொடர்புண்டு எனக்கூறினால், அவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என கர்ச்சிக் கின்றார். கறைபடிந்த கைகளுக்குச் சொந்தக்காரர் எப்படி இப்படியொரு அறிவிப்பைச் செய்ய முடியம்.

26/11 மும்பை தாக்குதலின் போது இவர்பொறுப்பற்று நடந்து கொண்டார் என்பதற்காகப் பதவி பிடுங்கப்பட்டவர். 2009 நாடாளும் மன்ற தேர்தலுக்குப் பின் மீண்டும் பதவியில் அமர்த்தப்பட்டவர்.

மதசார்பற்ற அமைப்புகளின் இடைவிடா போராட்டத்தால் ரகுவான்ஷி மராட்டிய தீவிரவாத தடுப்புப் படையின் தலைவர் பதவியிலிருந்து அகற்றப்பெற்றார். ஆனால் அவரை விட கீழ்த்தர மான ரகேஷ் மாரியா தீவிரவாதத் தடுப்புப் படையின் தலைவராக ஆக்கப்பட்டுள்ளார். இவர் அகற்றப்பட்ட வேண்டும். இதற்கு மராட்டிய அரசு ஆவன செய்ய வேண்டும்.

அதேபோல் டேவிட் கோல்மென் ஹெட்லியை நாம், இந்தியா கொண்டு வந்து விசாரிக்க வேண்டும், அப்போது ஆர்.எஸ்.எஸ். மொசாத் – அமெரிக்க மத்திய உளவுத் துறை, ஐ.எஸ்.ஐ ஆகியவற்றின் தொடர்பு கள் தெரியவரும். பல உண்மைகள் அத்தோடு தீவிரவாதத்தின் உண்மை முகம் புலப்படும்.

இவ்வாறு அம்ரேஷ் மிஸ்ரா அவர்கள் 16–30–2010 மில்லி கெஜட் என்ற பத்திரிகையில் எழுதிய கட்டுரையில் குறிப்பிட் டுள்ளார்.

**அம்ரேஷ் மிஸ்ரா :**

எழுத்தாளராகவும், மனித உரிமை ஆர்வலராகவும் இருந்த அம்ரேஷ் மிஸ்ரா இந்துத்துவ தீவிர வாத அமைப்புகளின் தேசத்துரோகத்தைக் கண்டு பொங்கி எழுந்தார்.

அத்தோடு அவர் இந்துத்துவ தீவிரவாத அமைப்புகளின் செயல் களைக் கண்காணிப்பவராகவும், அவற்றிற்கெதிராகப் போரடுபவ ராகவும் மாறினார். பல முறை அடி உதைபட்டும் இந்துத்துவ தீவிர வாதிகளை எதிர்ப்பதை நிறுத்திட வில்லை. அவருடைய நிலையான எதிர்ப்பைக் கண்டு வகுப்புவாத எதிர்ப்பு அணியின் தலைவராக அவரை காங்கிரஸ் கட்சி நியமித் துள்ளது. அத்தோடு காங்கிரஸ் காரியகமிட்டி செயற்குழு உறுப்பினராகவும் ஆக்கியுள்ளது.

இந்தப் பின்னணியில் அம்ரேஷ் மிஸ்ரா அவர்கள் 'IB' என்ற மத்திய உளவுத்துறைக் கெதிராகவும் இந்து தீவிரவாத அமைப்புகளுக்கெதிராகவும் நிறைய நடவடிக்கைகளை மேற் கொள்ளலாம். அத்தோடு நாட்டின் உள்நாட்டுப் பாதுகாப்பிற்கு நிலை யான ஏற்பாடுகளைச் செய்யலாம். செய்வார் என எதிர்பார்க்கலாம் இன்ஷா அல்லாஹ்.

முஸ்லிம்களுக்கு கெதிராக 'IB' யும் மொசாத்தும் அமெரிக்க உளவுத்துறையும் ஆர்.எஸ்.எஸ். போன்ற இந்துவத் தீவிரவாத அமைப்புகள் அதிகமான பாதகங் களைச் செய்வது காங்கிரஸ் ஆட்சியில்தான் என்பதை நாம் மறக்க வேண்டாம்.

திகார் முதலாக, நாடெங்கும் சிறையில் வாடும் அப்பாவி முஸ்லி1ம்களுக்கு நல்ல நிவாரணம் கிடைக்கவேண்டும்.


–M.G.M

# கம்ப்யூட்டர் கல்வி


அடுத்ததாக உங்களுக்கு தேவையான படங்கள், கார்ட்டூன் படங்கள், சில வகையான வடிவங்கள், எக்ஸெல் சார்ட் போன்றவற்றை *Insert Tool Bar*லிருந்து தேர்ந்தெடுத்துக் கொள்ளலாம்.

உதாரணத்திற்கு *Desktop*ல் (*Desktop* என்பது கம்ப்யூட்டரை *ON* செய்தவுடன் வருகின்ற திரை) உள்ள ஒரு படத்தை நாம் எவ்வாறு நம்முடைய டாகுமெண்டில் நுழைப்பது என்பதை பார்ப்போம்.

முதலில் *Insert*ல் சென்று *Picture* என்பதை தேர்வு செய்யுங்கள்.




பின்னர் வருகின்ற திரையில் *Desktop* என்பதை தேர்வு செய்யுங்கள். தற்போது உங்களுடைய டெஸ்க் டாப்பில் உள்ள படங்கள் எல்லாம் பட்டியலிடப்பட் டிருக்கும். அதில் உங்களுக்கு தேவையான படத்தை தேர்வு செய்து *Insert* என்பதை தேர்வு செய்தால் அந்தப்படம் உங்களுடைய டாகுமெண்டில் *insert* ஆகிவிடும்.




இவ்வாறு ஒரு படத்தை உங்களுடைய டாகுமெண்டில் நுழைத்தப்பின் அதனை உங்களுக்கேற்றவாறு *Format* செய்து கொள்ளலாம்.

இதற்கு அந்தப்படத்தின் மீது கிளிக் செய்தபின் *Tool Bar*ன் கடைசியில் பார்த்தால் *Format* என்றொரு புதிய *Tool* வந்திருக்கும். அதனை தேர்வு செய்யுங்கள்.அதில் கீழ்கண்டவாறு *Tool*களைக் காணலாம்.


அதில் *Brightness, Contrast* போன்றவை உங்களுடைய டி.வியில் நீங்கள் *Brightness, Contrast*ஐ எப்படி உபயோகிப்பீர்களோ அதைப்போன்றதே. *Brightness, Contrast*ஐ தேர்வு செய்து உங்களுக்கு வேண்டிய அளவிற்கு உங்களுடைய படத்தின் *Brightness, Contrast*ஐ கூட்டவோ குறைக்கவோ செய்யலாம்.

*Recolor* என்ற *Option* மூலம் உங்கள் படத்தை கலரிலிருந்து *Black & White* ஆகவோ அல்லது வெவ்வேறு கலரை கூட்டவோ குறைக்கவோ செய்யலாம்.

*Change Picture*ல் சென்று உங்கள் படத்தை மாற்றிக்கொள்ளலாம்.

*Reset Picture*ல் சென்று உங்கள் படத்தில் நீங்கள் செய்த மாற்றங்களை நீக்கி நீங்கள் படத்தை நுழைத்த போது எவ்வாறிருந்ததோ அதைப்போலவே கொண்டுவரலாம்.


அடுத்து தெரியக்கூடிய ஐந்து படங்களை தேர்வு செய்வதன் மூலம் உங்கள் படத்திற்கு நீங்கள் விரும்பும் வகையில் *Border, Shading, Outline* போன்றவற்றை தரலாம். இன்னும் கூடுதலாக *Effect*கள் தேவையென்றால் ஐந்தாவது படத்தின் மூலையில் தெரியும் மிகச் சிறிய முக்கோணத்தை கிளிக் செய்தால் இன்னும் அதிகமான டிசைன்கள் வெளியே வரும்.




Picture Style என்றிருப்பதை தேர்வு செய்வதன் மூலம் உங்கள் படத்தின் Line Color, Fill Color,Line Style, Shadow, 3D format போன்றவற்றை விருப்பப்படி அமைத்துக் கொள்ளலாம்.

அடுத்ததாக உங்கள் படத்தினை நீங்கள் விரும்பிய வடிவத்திற்குள் கொண்டு வர Picture Shapes என்பதை தேர்வு செய்து அதற்குள் தெரிகின்ற வடிவங்களில் உங்களுக்கு எந்த வடிவம் பிடித்திருக்கிறதோ அதனை தேர்வு செய்தால் உங்களுடைய படம் அந்த வடிவம் போல் வந்து விடும்.

குறிப்பு - மேலே சொல்லியுள்ள எந்தவிஷயத்தை செய்ய வேண்டுமென்றாலும் எந்த படத்தில் இந்த Effectகள் வரவேண்டுமோ அந்த படத்தின் மீது கிளிக் செய்து விட்டு தான் Effectகளை தேர்வு செய்ய வேண்டும். அப்போது தான் அந்த படத்திற்கு அந்த Effect Apply ஆகும்.





Picture Border என்பதில் உங்கள் படத்தின் பார்டரின் கலர், பார்டர் லைனின் Thickness, Line Style போன்றவற்றை தேர்வு செய்யலாம்.




Picture Effect என்ற Optionஇல் Shadow. Glow, Reflection, Soft Edges, Bevel, 3D Rotation போன்றவற்றை தேர்வு செய்யலாம்,

Shadow என்பது உங்கள் படத்திற்கு பின்னால் நிழல் விழுவது போன்ற Effectஐ ஏற்படுத்த உதவும். Glow Effect உங்கள் படத்தை சுற்றி பிரகாசமானதொரு தோற்றத்தை ஏற்படுத்த உதவும். Reflection என்பது படத்தின் பிரதிபலிப்பு தோற்றத்தை ஏற்படுத்தவும் Soft Edges என்பது உங்கள் படத்தின் Cornerகளை மிருதுவாக மாற்றவும் Bevel என்பது ஒரு உலோகத்தினுள் உங்கள் படத்தை பதித்தது போன்ற தோற்றத்தையும் 3D Rotation என்பது உங்கள் படத்தினையோ அல்லது வடிவத்தையோ 3D வடிவத்தில் காட்டவும் உதவும்.

Bring to Front என்ற Optionல் உள்ள Bring to Front, Bring Forward, Bring in front of Text போன்ற Optionகள் ஒரு படத்தை மற்றொரு படத்திற்கு மேலே கொண்டு வருவதற்கும் ஒரு படத்தை Textக்கு மேலே கொண்டு வருவதற்கும் உதவும்.



*Bring to Front* என்பதை தேர்வு செய்தால் எல்லா படங்களுக்கும் மேலே வந்து விடும். *Bring forward* என்பதை தேர்வு செய்தால் நீங்கள் தேர்வு செய்துள்ள படம் நான்காவது படமாக இருந்தால் அது மூன்றாவது இடத்திற்கு மேலே வந்துவிடும். உங்களுடைய படம் *Text*க்கு மேலாக வரவேண்டும் என்றால் *Bring in front of Text* என்பதை தேர்வு செய்ய வேண்டும்.

இதேப் போல் *Send to Back. Send Backward, Send behind text* போன்றவை கீழாக செல்ல உதவும்.

*Text Wraping* என்பது மிகவும் உதவியானதொரு *Option* ஆகும். ஒரு *Paragraph* (பத்தி) நடுவே ஒரு படத்தை கொண்டு வந்து வைக்கிறீர்கள் என்று வைத்துக்கொள்வோம். அந்ததப்படம் அந்த பத்தியை மறைத்துக் கொண்டிருக்கும். அப்போது நீங்கள் *Text Wrap Option*ஐ தேர்வு செய்து *Square* என்பதை தேர்வு செய்தால் உங்கள் படத்தைச் சுற்றி அழகாக அந்த *Text, Square* வடிவத்தில் வந்து விடும். இதுவே *Tight* என்பதை தேர்வு செய்தால் நெருக்கமாக படத்தை சுற்றி எழுத்துக்கள் வரும்.

*Top and Bottom* என்பதை தேர்வு செய்தால் எழுத்துக்களை உங்கள் படத்தின் மேல்புறமாக அல்லது கீழ்புறமாக தள்ளிவிட்டு அழகாக கொண்டு வந்துவிடும். *Behind Text. Front of Text* என்பதை கொண்டு எழுத்திற்கு மேலேயே மறைத்தவண்ணமோ அல்லது படத்தின் மீது எழுத்து வரும் வகையிலோ கொண்டு வரலாம்.


*Crop* என்பதை உபயோகப்படுத்தி உங்கள் படத்தில் உள்ள தேவையற்ற பகுதிகளை வெட்டி எடுக்கலாம்.

*Rotate* என்பதை உபயோகப்படுத்தி உங்கள் படத்தை நீங்கள் விரும்பும் வண்ணம் திருப்பிக் கொள்ளலாம்.

*Allighn* என்பதும் மிகவும் உபயோகமானதொரு *Tool* தான். நீங்கள் மூன்று படங்களை வைத்துள்ளீர்கள். அந்தப் படங்களை *Horizondal* ஆகவோ *Vertical* ஆகவோ வரிசையாக வைத்துள்ளீர்கள். ஆனால் சரியாக நேராக அப்படங்களை வைக்க வேண்டும் என்று நீங்கள் விரும்பினால் *Allign* என்பதை தேர்வு செய்து *Allign Left, Allign Right, Allign Top, Allign Bottom* போன்றவற்றை தேர்வு நீங்கள் விரும்பியவண்ணம் *Allign* செய்து கொள்ளலாம். *Allign* செய்வதற்கு முக்கியமாக நீங்கள் எந்தெந்த படங்களை *Allign* செய்ய விரும்புகிறீர்களோ அந்தப் படங்கள் அனைத்தையும் *Select* செய்து கொள்ள வேண்டும். இதற்கு *Shift* கீயை அமுத்திக்கொண்டு ஒவ்வொரு படத்தின் மீதும் கிளிக் செய்தால் நீங்கள் தேர்வு செய்யும் படங்கள் எல்லாம் தேர்வாகி விடும்.

*Group* என்பதை ஒன்றுக்கு மேற்பட்ட படங்களை ஒரே *Group* ஆக மாற்ற உதவும். இதனால் என்ன பயன் என்றால் ஒன்றுக்கு மேற்பட்ட படங்களை ஒரே குரூப் ஆக்கிய பின் அதில் ஏதாவது ஒரு படத்தை பிடித்து நகர்த்தினாலோ அல்லது ஏதாவது ஒரு படத்தை நகர்த்தினாலோ அந்தந்த *Position*கள் மாறாமல் அந்த குரூப்பில் உள்ள மொத்த படங்களும் நகரும் அல்லது பெரிதாகும்.

இவ்வாறு குரூப் செய்ய நாம் *Allighn* செய்வதில் சொன்னது போல் தேவையான படங்களை *Shift* கீயை அமுத்திக்கொண்டு பின்னர் மௌஸைக் கொண்டு கிளிக் செய்து தேர்வு செய்து கொள்ளுங்கள். பின்னர் *Group* என்பதை தேர்வு செய்யுங்கள். இவ்வாறு ஒன்றுக்கு மேற்பட்ட படங்களை தேர்வு செய்யும் வரை குரூப் *Option* உபயோகிக்க முடியாதவண்ணம் *Disabled* ஆகத் தான் இருக்கும். இவ்வாறு குரூப் செய்த படங்களை தேவைப்பட்டால் *Ungroup* ம் செய்யலாம்.




Insert ClipArt என்றOption மூலம் கார்ட்டூன் படங்களை Insert செய்யலாம்.

Insert ClipArt என்பதை தேர்வு செய்தவுடன் கீழ்கண்ட திரை வரும். அதில்

Go என்பதை தேர்வு செய்யுங்கள். பலவகையான கார்ட்டூன் படங்கள் திரையில் வரும் அதில் நீங்கள் விரும்பிய படத்தின் மீது கிளிக் செய்தால் அந்த படம் உங்கள் டாகுமெண்டில் நுழைந்துவிடும். அதன் பின்னர் Picture Toolல் எவ்வாறு படங்களை Format செய்தீர்களோ அதேப்போல் Clipart படங்களையும் Format செய்து கொள்ளலாம்.

Insertல் அடுத்ததாக உள்ளது Shapes.

Shape Toolஐ கிளிக் செய்து வரக்கூடிய வடிவங்களில் எந்த வடிவம் பிடித்துள்ளதோ அந்த வடிவத்தை நீங்கள் டாகுமெண்டில் Insert செய்து கொள்ளலாம்,





இந்த Shapeகளுக்கு வண்ணம், கோட்டின் வண்ணம், நிழல் விழுவது போன்ற Effectகள், 3D Effect போன்றவற்றை தரலாம்.

நீங்கள் படத்திற்கான Format Toolஐ நான் சொன்னவண்ணம் உபயோகித்துப் பார்த்தபின் Shape Toolஐ உபயோகித்துப்பார்த்தால் அது மிகவும் எளிதாக இருக்கும்.

இதில் ஒரு சில Toolகள் தான் புதியவை. அவற்றை நான் கீழே சொல்லிவிடுகிறேன்.

ஒரு சிறிய கோப்பையிலிருந்து கலர் விழுவது போன்று ஒரு படம் இருக்கும். அதை கிளிக் செய்தால் மேலே காட்டியுள்ள படத்தை போன்று திரை வரும். அதில் உங்கள் வடிவத்திற்கு எந்த கலரும் வேண்டாமென்றால் No fill என்பதை தேர்வு செய்யலாம். ஏதாவது கலரை நிரப்ப வேண்டுமென்றால் தேவையான கலரை தேர்வு செய்யுங்கள். மேலே காட்டியுள்ள கலரை விட அதிகமான கலர் தேவையென்றால் More Fill Colour என்பதை தேர்வு செய்து அவ்வாறு செய்யலாம். ஒன்றுக்கு மேற்பட்ட கலர்ளை தர Gradient என்பதை தேர்வு செய்யலாம். நீங்கள் தேர்வு செய்தவுடன் Single கலர் தான் வித்தியாசமான Effect உடன் வரும். இரண்டு கலர்களை தேர்வு செய்ய More Gradient Effect என்பதை தேர்வு செய்தால் கீழே தெரியும் திரை வரும். அதில் உங்களுக்கு பிடித்த இரண்டு கலர்களை தேர்வு செய்து பின்னர் பிடித்த Effectஐ தேர்வு செய்து OK கொடுத்தால் அந்த Effect உங்களுடைய Shapeக்கு வந்துவிடும்.





இதேப்போல் உங்கள் Shapeக்குள் Picture.Texture. Pattern போன்றவற்றை அந்தந்த Optionஐ தேர்வு செய்து நிரப்பலாம்.

Fillக்கு கீழேயுள்ள Outline என்பதை தேர்வு செய்து Shpeன் கோட்டின் கலர், வடிவம் போன்றவற்றை தேர்வு செய்யலாம்.

இன்ஷா அல்லாஹ் வளரும் - அபூ அஃப்ரஹ்

## நூல் விமர்சனம்




நூல் : உன்னை அறிந்தால்....

ஆசிரியர் : ஷேக் சஅதி சிராஜி

பக்கங்கள் : 72

விலை : 50.00 ரூபாய்

வெளியீடு : மக்கள் சேவை பதிப்பகம்
தம்புச் செட்டி தெரு, சென்னை - 1

தொலைபேசி : +91 (0) 44 42164350

---

அறிஞர் சஅதி ஷீராஸி பாரசீகம் (இன்றைய ஈரான்) தந்த சிறந்த உரை நடை எழுத்தாளர். கவிஞர். 1189 முதல் 1291 வரை வாழ்ந்த இவர் பாக்தாதின் நிஜாமிய்யா கலாசாலையில் கற்றார்.

அறிஞர் அப்துல் காதிர் ஜீலானி (ரஹ்) வின் சீடர்களில் ஒருவரான ஷீராஸி எழுதிய குலிஸ்தான், புஸ்தான், தீவான் ஆகிய நூல்கள் உலகப் புகழ்பெற்றவை. பல மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டவை.

(நூல் : அல்முன்ஜித்)

அன்னாரின் குலிஸ்தான் ரோஜாத்தோட்டம் எனும் நூலின் கதைகளின் மொழி பெயர்ப்புத்தான் இந்நூல்.

தத்துவ விரும்பிகளையும் சிறுவர்களையும் இந்நூல் வெகுவாகக் கவர்ந்திடும். சிந்திக்கத் தூண்டும். ஒரு நிமிடக் கதைகள் தான் என்றிருப்பினும் பல ஆழமான விஷயங்களை ஒன்றிரண்டு வரிகளில் கூறிவிடுகிறார்.

மனிதனா ? கழுதையா? என்ற கதை மூன்றே பாராக்கள் எட்டே எட்டுவரிகள் கொண்டது. நடந்த தவறில் உன்னுடைய பங்கு என்ன என்று சிந்திக்க வேண்டும் என்ற உண்மையை அழகுபடச் சொல்கிறது.

சூரியன் மீதான அன்பு எனும் தலைப்பிலான ஆறு வரிக்கதை அழகு. நல்ல தகவலைச் சொல்கிறது.

“இந்த ஊர்வாசிகள் எவ்வளவு மோசமானவர்கள்! நாய்களை அவிழ்த்துவிட்டு கற்களைத் கட்டிவைத்துள்ளனர்” என்ற வரிகள் நல்ல நகைச்சுவையாக இருந்தாலும் சமயமறிந்து சொல்லப்பட்ட நல்ல சொல்.


ஒரு கவிஞர் எழுதிய கதை நூல். எனவே கதைகள் கவிதைகளாகவே இனிக்கின்றன. குழந்தைகளின் வாசிப்புக்கு ஏற்றபடி படங்கள் தரப்பட்டுள்ளன.

நூலாசிரியர் பாரசீகத்தின் ஷீராஸ் நகரில் பிறந்தவர் என்பதால் ஷீராஸி என்றழைக்கப்பட்டார். சிராஜி என்பது சரியான ஒலிபெயர்ப்பு அல்ல.

குழந்தைகள் விரும்பிப் படிப்பார்கள். அவர்களுக்கு வாங்கித் தரலாம். நாமும் வாசிக்கலாம்.

– ரியாஜி

# நூல் விமர்சனம்




| | |
|---|---|
| **நூல்** | : **இஸ்லாமிய ஆட்சியின் எழுச்சியும் வீழ்ச்சியும் பாகம் - 2** |
| **ஆசிரியர்** | : **அபுல் அஃலா மௌதூதி (ரஹ்)** |
| **தமிழாக்க ஆசிரியர்** | : **அப்துர் ரஹ்மான் உமரி** |
| **பக்கங்கள்** | : **192** |
| **விலை** | : **75.00 ரூபாய்** |
| **வெளியீடு** | : **திண்ணைத் தோழர்கள் பதிப்பகம்** |
| **தொலைபேசி** | : **9994600350, 9952635343** |

தன் மனதில் பட்ட விமர்சனங்களை காய்தல் உவத்தல் இன்றி பளிச் சென்று சொல்லிடத் தயங்காதவர் மவ்தூதி.

அல்லாஹ்வின் இறுதித் தூதர் அண்ணல் நபி (ஸல்) அவர்கள் உருவாக்கிய இஸ்லாமி ஆட்சி காலப் போக்கில் உருமாறி மன்னராட்சியாக மாறியதற்கான காரணங்களை சூழ்நிலைகளை மனிதர்களைப்பற்றி ஓரளவுக்கு விரிவாகப் பேசுகிறது இந்நூல்.

அந்தக் காலக்கட்டங்களில் மார்க்க ரீதியான சிந்தனைக் குழுக்கள் தோன்றியதற்கான அரசியல் பின் புலங்களையும் எடுத்துரைக்கிறது.

முஸ்லிம்களால் நடத்தப்படும் அரசாக இருந்தாலும் கூட முழுமையான இஸ்லாமிய அடிப்படையில் செயல்படாத அரசின் கீழ் எந்தப் பொறுப்பையும் ஏற்க மாட்டேன் என்று கூறும் இமாம் அபூஹனீஃபா (ரஹ்) வின் வரலற்று சுருக்கம் ஜனநாயக அமைப்பின் அற்ப பதவிகளைப் பிடிக்க இஸ்லாத்தையே துறக்கமுன் வரும் நிகழ்கால மனிதர்கள் வாசிக்க வேண்டிய பகுதி.

இஸ்லாமிய நெறிகளின் படி இயங்காத அரசைப்பற்றி இமாம் அபூஹனீஃபா (ரஹ்) அவர்களின் நிலைப்பாடும் இமாம் மாலிக் (ரஹ்) வின் நிலைப்பாடும் வேறு வேறாக இருந்ததையும் அதன் பின்னணியிலிருந்த இருவரின் நியாயங்களையும் நூல் எடுத்துரைக்கிறது.

இமாம் அபூஹனீஃபா (ரஹ்) வின் மக்கள் செல்வாக்கைக் கட்டுப்படுத்த நினைக்கும் கலீஃபா இமாம் மாலிக் (ரஹ்)வின் முஅத்தா எனும் நூலை அரசின் சட்ட நூலாக ஆக்கிட விரும்பிய போது அதை நாசூக்காக இமாம் மாலிக் (ரஹ்) மறுத்து விட்டார்கள். இந்தப் பகுதியை இன்னும் விரிவாகக் கூறியிருக்கலாம் அப்படிக் கூறியிருந்தால் அது கலீஃபாவின் மற்றொரு முகத்தை வெளிச்சம் போட்டுக் காட்டுவதாக அமைந்திருக்கும்.

அரசுப் பதவியை ஏற்க மறுததற்காக ஆசிரியர் அபூஹனீஃபா (ரஹ்)வுக்கு அரசு கசையடி தர முன் வருகிறது. அதையும் ஏற்கத் துணிந்தார்கள். இமாமின் மரணத்துக்குப் பிறகு மாணவர் அபூயூசுப் (ரஹ்) பதினாறு ஆண்டுகாலம் வைராக்கியத்துடனிருக்கிறார் அரசுப் பதவியை ஏற்பதில்லை என்று.

பின்னர் வேறு வழியின்றி நீதிபதிப் பொறுப்பை ஏற்றார்கள். இதற்கு வறுமையும் மாமியாரின் இழி மொழியும் ஒரு காரணம் என்பது நெக்குருவைத்திடும் வரிகள்.

இமாம் அபூயூசுப் (ரஹ்) வின் புகழ் மேவிய நூலான கிதாபுல் ஹராஜ் —ல் கலீஃபாவைத் தேர்ந்தெடுக்கும் முறை பற்றி ஏன் விவாதிக்கப்படவில்லை என்ற கேள்விக்கு நூலாசிரியர் மவ்தூதி கூறும் பதில் சரியானதே. ஆட்சியாளரின் நெருக்கத்தைப் பெற்றிட முயன்றார் என்று அபூயூசுப் (ரஹ்) பற்றி கூறப்படும் குற்றச்சாட்டுக்கு

மவ்தூதி தரும் ஐந்து பதில்கள் இமாம்கள் மீது அவர் வைத்திருக்கும் மரியாதைக்குச் சிறந்த சான்று.

முன்னோர்களை விமர்ச்சிக்கிறார் என்று தன் மீது கூறப்படும் குற்றச்சாட்டுக்கு பதிலும் மவ்தூதி தருகின்றார் இந்நூலில்.

நேர்வழியின் அடிப்படையில் நின்றிலங்கிய இஸ்லாமிய ஆட்சி ஒரு மன்னராட்சியின் நிலைக்கு இறங்கி விட்டதற்குக் காரணமாக அமைந்து விட்ட சூழ்நிலைகள் சம்பவங்கள் மனிதர்கள் பற்றிப் பேசமாமலேயே இருந்து விட முடியுமா? என்று கேட்கிறார்.

ஜைதிய்யா என்று தம்மை அழைத்துக்கொள்ளும் ஷியாப்பிரிவினர் யாருடன் தம்மை இணைத்துக்கொள்கின்றனரோ அந்த ஜைத்பின் அலீ அவர்கள் இமாம் அபூஹனீஃபா (ரஹ்) வின் ஆசிரியர்.

ஆசிரியர் அபூஹனீஃபா (ரஹ்)வுக்கு கசையடி வழங்கிட முன் வந்த அரசில் பின்னாளில் மாணவர் அபூயூசுப் (ரஹ்) தலைமை நீதிபதியாகிறார்.

மக்களிடம் இமாம் அபூஹனீஃபாவுக்கு உள்ள செல்வாக்கைக் குறைத்திட அரசு முயல்கிறது. அதற்காக மாலிக் (ரஹ்) வின் முஅத்தாவை சட்ட நூலாக்க முயல்கிறது. ஆனால் அபூஹனீஃபா (ரஹ்) வின் சிந்தனை முடிவுகளே அரசின் சட்ட நூலாகிறது இமாம் அபூயூசுப் (ரஹ்) வழியாக.

இவை வரலாற்றின் சுவையான முரண்.

அரிய தகவல்கள் அடங்கிய அருமையான நூல். மொழிபெயர்ப்பு நடை விறுவிறுப்பாக இருக்கிறது. மிகப்பெரும் விமர்சகரான மவ்தூதி தன் மீதான விமர்சனங்களுக்கு பதில் தருகிறார்.

அச்சுப் பிழைகள் இருக்கின்றன. சில இடங்களில் உறுத்துகிறது.

தரமான இஸ்லாமிய நூல்களைத் தொடர்ந்து வழங்கி வருகின்ற திண்ணைத் தோழர்கள் பதிப்பகத்தின் மற்றொரு சிறந்த நூல்.

இஸ்லாத்தை நிலை நாட்ட உழைத்தவர் மவ்தூதி (ரஹ்). அவரின் கருத்துக்களை ஒரு மொழியோடு முடக்கி விடாமல் தமிழ் கூறும் நல்லுலகுக்கு வழங்கியிருப்பது வரவேற்புக்குரியது.

இயக்கவாதிகளும் விமர்சன ஆர்வலர்களும் வரலாற்று மாணவர்களும் இஸ்லாமியப் பேச்சாளர்களும் வாசிக்க வேண்டிய நூல்.

– ரியாஜி


**கர்கரேயை கொலை செய்தது யார்?**

**தமிழ் புத்தகம் வெளியீடு**

30.5.2010 ஞாயிறு மாலை 5 மணிக்கு

K.M. மஹால் மோதிலால் தெரு

கும்பகோணத்தில் இந்நிகழ்ச்சி நடைபெறும் இன்ஷா அல்லாஹ்

கும்பகோணம் மக்கள் இந்த அரியவாய்ப்பினை பயன்படுத்திக் கொள்ள

அன்புடன் அழைக்கின்றோம்.

த்லைமை ஹாஜி, பிஸ்மி ஷம்சுதீன்

தி.க. மாவட்ட செயலாளர் குருசாமி

கு. கௌதமன், M.A. நகரத்தலைவர்

தி.க. ஆசையன், கீதாலயன்

வழக்கறிஞர்

T.M. உமர் ஃபாரூக் நிறுவனர் தலைவர்

தலித் நீலப்புலிகள் இயக்கம்

மு. குலாம் முஹம்மத் M.A., M.Com


தாருல் இஸ்லாம் ஃபவுண்டேஷன் டிரஸ்ட்

**ஆகியோர் கலந்து கொள்வார்கள்**

# கர்கரேயை கொலை செய்தது யார்?

**தொடர்-4**

இப்படியொரு நாடகத்தை அஃது நடத்தியதற்குக் காரணம், பிரதான் குழுவின் அறிக்கையின் எந்தப் பகுதியும் வெளியில் யாரிடமுமில்லை என்பதை உறுதி செய்வதே!




அறிக்கை யாரிடமுமில்லை என்பதை முடிவு செய்தபின் அறிக்கையின் தங்களுக்குப் பாதகமான ஆனால் முக்கிய பகுதிகளை மறைத்து விட்டு, முற்றிலும் திரிக்கப்பட்ட ஓர் அறிக்கையை மக்கள் மன்றத்தில் வைத்தார்கள்.

3. நமது நூலுக்கு பின் நடந்த மூன்றாவது நிகழ்வு: கர்கரேயுடன் கொலை செய்யப்பட்டவர்களுள் ஒருவர் அஷோக் காம்தி. அவருடைய மனைவி வினிதா காம்ந்தி. இந்த சகோதரி, “என் கணவர் ஏன் கொலை செய்யப்பட்டார்?” என்பதை விளக்கத் தொடங்கிவிட்டார். அந்த முயற்சியில் அவர் ஒரு நூலை வெளியிட்டுள்ளார். அதன் பெயர் “To the Last Bullet” (கடைசி புல்லட் வரை) என்பதாகும். அவர் தன் கணவரின் கொலையில் என்ன நடந்தது என்பதை தெளிவு படுத்தியுள்ளார். அதே போல் 26/11/2008 இரவில் காமா ஆஸ்பத்திரியை (இந்த மருத்துவமனைக்குப் பின்னால் உள்ள ரங்கபவன் வீதியில் வைத்துத்தான் கொலை நடந்தது) சுற்றி என்னென்ன நடந்தது என்பதையும் தெளிவுபடுத்தியுள்ளார். இந்நூல் அவரது கணவரின் வீரவாழ்வு, மரணம் ஆகியவற்றை விளக்கி சொல்கிறது. மேலும், மேலே நாம் கோடிட்டு காட்டிய நிகழ்வுகள் 2 மற்றும் 3 ஆகியவற்றை பொருத்தவரை நான் (இந்த பதிப்பில்) ஒரு விளக்கமான கட்டுரையை “பின்னால் நடந்த நிகழ்வுகள் நான் சொன்னவற்றை உண்மைபடுத்துகின்றன” என்ற தலைப்பில் நான்காவது அத்தியாயத்தில் இடம் பெற செய்துள்ளேன். இஃதன்னியல் மும்பை தாக்குதல்களின் போது அன்றிரவு காவல்துறையினரிடையே நடந்த பல உரையாடல்கள் பல அரிய தகவல்களைத் தருவன. (26.11.2008) இவற்றை வினிதா காம்தி கைவர சேகரித்திருந்தார். நான் அந்த தகவல்களையும் இந்த விரிவாக்கப்பட்டப் பதிப்பில் இடம் பெறச் செய்துள்ளேன்.

பார்ப்பணீயர்களால் அரங்கேற்றப்பட்ட கோவா குண்டுவெடிப்புகளைப் பற்றிய தகவல்களை நான் இந்த நூலின் இதர பகுதிகளில் சொல்லிடவில்லை என்பதால் அதனை இந்த அறிமுகத்திலேயே இடம் பெற செய்து விடுகின்றேன்.

**கோவா குண்டு வெடிப்பு**

2008ல் நடந்த மாலிகோன் குண்டுவெடிப்பில் பல பிராமணர்கள் கைது செய்யப்பட்டார்கள். இந்த கைதுகளுக்குப் பின் நாட்டில் நடந்த குண்டுவெடிப்புகள் முற்றாக முடிவுக்கு வந்துவிட்டன. இதன் மூலம் இந்த நூலின் முதல் பதிப்பிலும் இரண்டாவது பதிப்பிலும் கூறியவை உண்மைகள் என்பது நிருபனமாயின.

நாம் முந்தைய இரண்டு பதிப்புகளிலும் எடுத்து சொன்ன உண்மை இதுதான்.

பிராமண தீவிரவாதிகள் ஐ.பி என்ற மத்திய உளவுத்துறையிலுள்ள தங்களுக்கு வேண்டியவர்களின் தயவுகளுடன் நாடு முழுவதும் குண்டு வெடிப்புகளை நிகழ்த்தினார்கள். பின்னர் இந்த குண்டு வெடிப்புகளுக்கு முஸ்லிம்களே காரணம் என பழியை முஸ்லிம்கள் மீது போட்டார்கள். இதன் மூலம் இந்துக்களின் மனங்களில் முஸ்லிம்களைப் பற்றிய வெறுப்பை விதைத்ததார்கள். இதன் மூலம் பிராமணர்கள் தாங்கள் இந்த நாட்டிற்கெதிராக அரங்கேற்றிவரும் சதியிலிருந்து மக்களின் கவனத்தை திசை திருப்பினார்கள்.

இதில் மாலிகோன் குண்டு வெடிப்பிற்கு பின் எந்த குண்டுவெடிப்பும் நடக்காமல் போனது அவர்களுக்கு மெத்த வருத்தத்தைத் தந்தது. நாட்டில் நிலவிய அமைதி அவர்களை உறுத்திக்கொண்டே இருந்தது. உறுத்தலுக்கு காரணம் நாட்பட நாட்பட மக்கள் கடந்த ஐந்து

ஆண்டுகளாக நடந்த குண்டுவெடிப்புகள் பிராமண கும்பலின் கைவண்ணம் தான் என்பதை தெரிந்திட தொடங்கினார்கள். ஆகவே பிராமணர்கள் மக்கள் கவனத்தை கர்கரே காலத்திற்கு முன்னால் உள்ள காலத்திற்கு திருப்பிட முனைந்தார்கள். கோவா குண்டு வெடிப்புகளுக்கு ஏற்பாடு செய்தார்கள்.

மக்களின் கவனம் 26/11/2008 மும்பை தாக்குதல்களை சுற்றி வந்து கொண்டிருந்த போது 16 அக்டோபர் 2009ல் தீபாவளி நாளில் குண்டு வெடிப்புகளை நிகழ்த்திட முயற்சிகளை மேற்கொண்டார்கள்.

இதற்கு பிராமண தீவிரவாத அமைப்பாகிய "சனாதன் சாஸ்தா" என்ற அமைப்பை பயன்படுத்தினார்கள். ஆனால் அவர்களுக்கு கெட்ட காலம் குண்டை வைத்திடும் போது வெடித்துவிட்டது. அதில் "சனாதன் சாஸ்தாவை" சேர்ந்த இரண்டு பேர் இறந்து போனார்கள். அதன்பின்னர் வெடிக்க துடிதுடித்த இரண்டு குண்டுகளை காவல் துறையினர் செயலிழக்க செய்தார்கள். (இந்தியன் எக்ஸ்பிரஸ், புனே 18, சாக்கல் 18/10/2009)

இந்த குண்டுகள் அவர்கள் விரும்பும் விதத்தில் வெடித்து அதில் தீபாவளிக்காக குழுமிய இந்துக்கள் இறந்தால், பழி முஸ்லிம்களின் மேல் வீழ்ந்திட வேண்டும். அதற்காக அந்த இடத்திற்கு பக்கத்தில் ஒரு பையை வைத்தார்கள். அந்த பையில் "கான் மார்க்கெட்" என்று உருது மொழியில் எழுதி இருந்தது. பைக்குள் ஒரு சென்ட் (அத்தர்) இருந்தது. (சண்டே இந்தியன் எக்ஸ்பிரஸ், புனே, 8/11/2009)

இங்கே குண்டு வைத்தவர்களின் நோக்கம் மிகவும் தெளிவாகத் தெரிகின்றது. அது குண்டுகள் வைத்தவுடன் முஸ்லீம்களைப் பழிக்க வேண்டும். அந்த குண்டுகள் வெடித்து பலநூறு இந்துக்கள் இறந்திருந்தால் என்ன நடந்திருக்கும் என்பதை எல்லோரும் எளிதில் அறிந்திடலாம்.

நாடு முழுவதும் நூற்றுக்கணக்கான முஸ்லிம் இளைஞர்கள் கைது செய்யப்பட்டிருப்பார்கள். அவர்களின் உறவினர்கள் கெடுபிடிகளுக்கும் விசாரணைகளுக்கும் உட்படுத்தப் பட்டிருப்பார்கள்.

இப்படி கைது செய்யப்படும் அப்பாவி முஸ்லிம்களுக்கெதிராக சாட்சியம் எதுவும் கிடைக்காது. உடனேயே நமது ஐ.பி மத்திய உளவுத்துறை களத்தில் குதிக்கும். தேவையான சாட்சிகளை கொண்டு வந்து சேர்க்கும். முஸ்லிம் தீவிரவாதம் என்ற பேய் மீண்டும் கட்டவிழ்த்து விடப்பட்டிருக்கும்.

கோவா குண்டு வெடிப்புகளை புலனாய்வு செய்த கோவா காவல்துறை கோவா குண்டுவெடிப்புகளை நிகழ்த்திய "சனாதன் சாஸ்தா" என்ற அமைப்பிற்கும் மாலிகோன் குண்டு வெடிப்பில் குற்றம் சுமத்தப்பட்ட "அபிநவ் பாரத்" என்ற அமைப்பை சேர்ந்த இராணுவ அதிகாரி புரோகித், பிரக்யா சிங்தாகூர் ஆகியோருக்கும் தொடர்பிருப்பதை கண்டுபிடித்தது. (தி இந்தியன் எக்ஸ்பிரஸ், புனே, 21 டிசம்பர் 2009)

இந்த நிகழ்ச்சி இந்த புத்தகத்தில் சொல்லப்பட்ட உண்மைகளை மீண்டும் ஊர்ஜிதம் செய்கின்றது. அந்த உண்மைகள் இந்த நாட்டில் நடக்கும் குண்டு வெடிப்புகளை பிராமணர்களே நடத்துகின்றார்கள், பழியை முஸ்லிம்கள் மீது போடுகின்றார்கள் இதற்கு பிராமணர்களின் கைகளில் இருக்கும் ஊடகங்களின் உதவியை இஷ்டம் போல் பெறுகின்றார்கள், இதன் மூலம் பாமர இந்துக்களை முஸ்லிம்களுக்கெதிராக திருப்பு கின்றார்கள் என்ற உண்மைகளைத் தெளிவுபடுத்துகிறது.

**அத்தியாயம் - 1**

**ஹிந்து - முஸ்லிம் கலவரங்கள்**

**பொதுவான இந்துக்களை (பஹூஜன்களை) வெற்றி கொள்ள பிராமணர்களின் புதிய கால தந்திரம்.**

ஒருவர் இதனை ஒத்துக் கொள்ளவில்லையென்றாலும் நாட்டின் மதரீதியான பார்வையின் அடிப்படையில் இந்தியாவில் வாழும் முஸ்லிம்கள் பொதுவாக தேசப்பற்றுடன் இருப்பதில்லை. அவர்கள் பாகிஸ்தானுக்கு சாதகமானவர்கள், அவர்கள் முஸ்லிம் தீவிரவாதிகளிடம் கருணை கொண்டவர்கள். இந்த காரணங்களுக்காகவே

இந்த நாட்டிலுள்ள தேசியவாத, தேசப்பற்றுள்ள பிராமணர்கள் முஸ்லிம்களை தீவிரமாக எதிர்க்கிறார்கள். பொதுவான இந்துக்களை முஸ்லிம்களின் அபாயத்திற்கெதிராக தட்டி எழுப்புகிறார்கள். இதை அவர்கள் செய்ய காரணம் கடந்த 700 ஆண்டுகளாக முஸ்லிம் மன்னர்களிடம் அடிமைப்பட்டிருந்த போது இந்துக்களை அவர்கள் செய்த கொடுமை.

இந்த விஷயங்களைப் பற்றி அவற்றிலுள்ள உண்மைகளைப் பற்றி விவாதிப்பதற்கு முன்னால் இந்த நாட்டிற்கும் இந்து மதத்திற்கும் பாதுகாவலர்களாக தங்களைத் தாங்களே காட்டிக் கொள்ளும் இந்த பிராமணீயர்கள் யார் என்பதைப் பற்றி நாம் கண்டிப்பாக தெரிந்து கொள்ள வேண்டும். இந்த பிராமனிஸ்ட்கள் பிராமணர்களில் ஒரு சிறிய பகுதியினர். ஒரு குறிப்பிட்ட நம்பிக்கையைக் கொண்ட பிராமணரல்லாதோரை பொறுத்தவரை இவர்கள் நுண்ணோக்கியை வைத்து ஒப்பு நோக்கக் கூடிய அளவில் உள்ளவர்கள். இவர்கள் தங்கள் நம்பிக்கையால் பிறப்பின் அடிப்படையில் தங்களை உயர்ந்த சாதியினராகவும், தெய்வீகமாகவும் கருதுபவர்கள்.

ஆகவே தாங்கள் தலைமுறை தலைமுறையாக இந்திய சமூகத்தை ஆளப் பிறந்தவர்கள் என்ற எண்ணம் கொண்டவர்கள். இப்போது கோடி ரூபாய் பெறுமானதொரு கேள்வி. ***பிராமணர்கள் முஸ்லிம்களுக்கு உண்மையிலேயே எதிரிகளா? ஆம் என்றால் எப்போதிலிருந்து?***

வரலாறு சொல்வதென்னவென்றால் பிராமணர்கள் இதற்கு முன் முஸ்லிம்களுக்கு எதிரிகளாக இருந்ததில்லை? ஆனால் 1893-க்குப் பிறகு இந்த நிலை மாறியது. இது தான் வகுப்புவாத இந்தியாவின் அடையாள குறியீடு. இதனை நாம் மத்தியகால (அ) இடைக்கால வரலாற்றின் பின்னணியில் அலசுவோம்.

இந்தியாவை 700 வருடங்களாக முஸ்லிம்கள் ஆண்டார்கள் என்பது வரலாற்று உண்மை. யாரும் மறுக்கவியலாது. இந்த காலகட்டத்தில் இந்திய சமூகத்தின் மீது இந்த பிராமணர்களின் தாக்கம் மேலோங்கி இருந்தது என்பதும் ஓர் உண்மை. இக்கால கட்டத்தில் சாமான்ய இந்துக்கள் இவர்களால் ஒடுக்கப்பட்டு, பிராமணர்கள் நினைத்த படியெல்லாம் ஆட்டுவிக்கப்பட்டார்கள். இந்த பிராமணர்கள் முஸ்லிம் ஆட்சியாளர்களுக்கு எதிரானவர்களாக இருந்திருந்தால் முஸ்லிம்களை ஒரு வருடத்திற்கு கூட ஆட்சி செய்ய அனுமதித்திருக்க மாட்டார்கள்.

ஆனால் மத்திய வரலாற்றுக் காலத்தில் ஹிந்துக்களை முஸ்லிம் ஆட்சியாளர்களுக்கு எதிராக தட்டி எழுப்பும் ஒரு உதாரணத்தைக் கூட நாம் காண முடியவில்லை. அல்லது முஸ்லிம் ஆட்சியாளர்களுக்கெதிராக எந்த ஒரு இயக்கத்தையும் நடத்தியதற்கான ஆதாரத்தையும் காண முடியவில்லை. அதற்குப் பதிலாக முஸ்லிம் ஆட்சியாளர்கள் தங்கள் ஆட்சியை சுமூகமாக நடத்த அவர்கள் ஆட்சி விவகாரங்களில் ஆலோசனைகளை பிராமணர்கள் வழங்கி வந்த காட்சிகளை வரலாற்றில் மிகுதியாக காண முடிகிறது.

முகலாய பேரரசர்களில் அக்பரின் அரசில் அதிகமான பேர் பிராமணர்கள். திப்பு சுல்தானின் முக்கியமான ஆலோசகர் மற்றும் நிர்வாகிகள் பிராமணர்கள். இவ்வளவு ஏன் இன்றைய காலத்தில் அதிகமாக குற்றஞ்சாட்டப்படும் இந்துக்களை அதிகமாகக் கொடுமைப்படுத்திய ஔரங்கஜேபின் தர்பாரில் 50 சதவீதத்திற்கும் அதிகமானோர் பிராமணர்கள்.

உண்மை என்னவெனில் பிராமணர்களின் ஒத்துழைப்போடு தான் முஸ்லிம்கள் இந்தியாவை 700 ஆண்டு காலம் எவ்வித பிரச்சனையுமின்றி ஆள முடிந்தது. இதனால் தான் அக்பர் ஔரங்கஜேப் போன்றோர் தங்கள் ஆட்சிக்காலத்தை 50 வருடத்திற்கு நீட்டிக்க முடிந்தது.

மொத்தத்தில் மத்திய கால வரலாற்றில் முஸ்லிம்களுடன் பிராமணர்களின் உறவு சுமூகமாகவே இருந்தது. இந்த பின்னணியோடு உற்று நோக்கும்போது R.S.S.-ன் முன்னாள் தலைவர் கோல்வாக்கர், "We are our Nation Hood Defined" என்ற புத்தகத்தில் சொல்லியுள்ள படி என்றைக்கு முஸ்லிம்கள் இந்த தேசத்திற்குள் நுழைந்தார்களோ அன்றிலிருந்தே இவர்களுக்கு

எதிராக "இந்து தேசம்" போராடிக் கொண்டிருக்கிறது என்ற செய்தி கடைந்தெடுத்த பொய். இல்லையெனில் தங்களுடைய இந்து தேசம் என்பதிலிருந்து R.S.S. பிராமணர்களை நீக்கிவிட வேண்டும். ஏனெனில் 1893-க்கு முன்பு வரை பிராமணர்கள் முஸ்லிம்களுக்கு விசுவாசிகளாகவே இருந்து வந்தனர்.

பிராமண பேஷ்வாக்களின் ஆட்சியின் போது புனேயில் முஸ்லிம்களின் மக்கட்தொகை 30 சதவீதமாக இருந்தபோதும் அங்கேயும் இந்து-முஸ்லிம் தகராறு எதையும் வரலாறு பதிவு செய்யவில்லை. அந்நேரத்தில் தலித்கள் தங்களின் கழுத்தில் மண் பாண்டங்களை மாட்டிக் கொண்டு தங்களின் எச்சிலை அதில் துப்பும் படியும், தங்கள் கைகளிலே எப்போதும் ஒரு துடைப்பத்தை வைத்துக் கொண்டு தாங்கள் வந்த பாதையின் அடிச்சுவடிகளை அழிக்கும்படியும் பணிக்கப்பட்டபோது முஸ்லிம்கள் அவர்களை கண்ணியத்துடன் நடத்தினர்.

இவை எல்லாவற்றிற்கும் மேலாக 1857-ல் பொதுவான ஹிந்துக்களும், பிராமணர்களும் முஸ்லிம்களும் ஒன்று சேர்ந்து முகலாய பேரரசர் பகதூர் ஷா ஆட்சியை மீண்டும் கொண்டுவர போராடினார்கள். சுருக்கமாக 19-வது நூற்றாண்டின் பாதி வரையிலும் அதற்குப் பின்னும் முஸ்லிம்களுக்கும் பிராம்மணிஸ்டுகளுக்கும் இடையிலான உறவு சீராகவே இருந்தது. எனில், ஏன் பிராம்மணிஸ்ட்கள் 19-ம் நூற்றாண்டின் இறுதியில் முஸ்லிம்களுக்கு எதிரான நிலையை எடுத்தார்கள்? ஏன் தொடர்ச்சியான கலவரங்களை கட்டமைத்து அதன் மூலம் தேசப்பிரிவினைக்கு வித்திட்டு அதை இன்றுவரை தொடர வேண்டும்?

இதற்கு நாம் 19-ம் நூற்றாண்டின் பிற்பகுதியில் நாட்டின் பிராமணர்களினால் இச்சமுதாயத்தில் ஏற்பட்டுவிட்டிருந்த சமூக நிலையை மாற்ற குறிப்பாக மஹாராஷ்டிராவிலும், தெற்கு மாநிலங்களிலும் ஏற்படுத்தப்பட்ட சீர்திருத்த இயக்கங்களின் வரலாற்றை கண்டிப்பாக தெரிந்து கொள்ள வேண்டும்.

-தொடரும்


**ஆர்.எஸ்.டி நிறுவனம் வழங்குகிறது**

**இல்யாஸ் ரியாஜீ – யின் தப்சீர் தமிழன் தொலைக் காட்சியில் ஒளிபரப்பாகிறது.**

**காயல் தர்வேஷ் அவர்களின் ஆர்.எஸ்.டி நிறுவனம் தமிழன் தொலைக்காட்சியில் இஸ்லாமிய நிகழ்ச்சிகளை பல ஆண்டுகளாக வெற்றி தரமாக நடத்தி வருகிறது.**

**இந்நிறுவனம் வாரந்தோறும் தமிழன் தொலைக்காட்சியில் செவ்வாய் கிழமை இரவு 10.00 மணிக்கு வைகறை வெளிச்சம் துணை ஆசிரியர் மௌலவி இல்யாஸ் ரியாஜி –யின் திருக்குர்ஆன் விரிவுரை தப்சீர் உரையை ஒளிபரப்புகிறது.**

**வாசகர்கள் இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்ளுங்கள் நிகழ்ச்சியைக் காணத்தவறாதீர்கள்.**

**நிகழ்ச்சி பற்றிய தொர்புகளுக்கு காயல் தர்வேஷ் : 9841898044**

# காஷ்மீர் :

# புதைக்கப்பட்ட பள்ளத்தாக்கு

அ. முத்துக்கிருஷ்ணன்

இந்தியாவின் சுவிட்சர்லாந்து என வர்ணிக்கப்பட்ட காஷ்மீர், இயற்கை எழில் பட்டியலில் முதன்மையாகத் திகழ்ந்தது. ஆனால் இன்று, காஷ்மீர் பள்ளத்தாக்கு காணும் இடமெல்லாம் மரணப் புதைகுழிகளால் நிரம்பியுள்ளது. ஈழத்தில் நடைபெறும் இலங்கை அரசின் இனப்படுகொலைக்கு மவுனசாட்சியாக இந்திய அரசு இருப்பதன் காரணம், அது தன்னளவில் அதே இனப்படுகொலையை தன் நாட்டு மக்கள் மீதே நடத்திக் கொண்டிருப்பதுதான் என்பது வெட்ட வெளிச்சமாகியுள்ளது. உலகின் மிகக் கொடூரமான ராணுவ அடக்கு முறையின் மூலம், காஷ்மீரில் ஓர் இனப்படுகொலையை இந்திய ராணுவம் நிகழ்த்தி வருகிறது. இவற்றையெல்லாம் அரசு மூடி மறைத்து வந்தாலும், அங்கு புதைக்கப்பட்டுள்ள ஒவ்வொரு சடலமும் தன் கதையை இந்த உலகுக்கு அறிவிக்க துடித்துக் கொண்டிருக்கிறது.

தாயின் முன்பு மகளை வன்புணர்வுக்கு உட்படுத்த வேண்டும் இதுதான் அந்த ராணுவ வீரனின் ஆசை. வேண்டாம் எங்கள் இருவரையும் விட்டுவிடுங்கள் என அந்தத் தாய் ராணுவ வீரனின் மிதியடிகளைப் பிடித்து மன்றாடுகிறார், கதறுகிறார். என்னால் இதை நிச்சயம் காண இயலாது என்னை வேறு அறைக்கு அழைத்துச் செல்லுங்கள் அல்லது கொன்று விடுங்கள் என்கிறார். அவர் அந்த ராணுவ வீரன் வன்புணர்வுக்கு ஆயத்தம் ஆகும் வகையில் தன் உடைகளைக் களைந்து கொண்டே, உன் ஆசைப்படியே நடக்கட்டும் என அவருடைய நெற்றியில் தானியங்கி துப்பாக்கியை வைத்து சில சுற்றுகள் தோட்டாக்களை செலுத்துகிறான். தன் காரியத்தை தொடர்கிறான்.

இது போன்ற ஓராயிரம் கதைகளை, காஷ்மீர் சென்று வந்துள்ள மனித உரிமைக் குழுக்கள் பதிவு செய்துள்ளன. இந்த சம்பவம் கொடுங்கோல் ஆட்சி நடக்கின்ற தேசத்திலோ, ராணுவ சர்வாதிகார ஆட்சி நடக்கின்ற நாட்டிலோ நடைபெறவில்லை. மாறாக, வளர்ந்து வரும் வல்லரசு, உலகின் மிகப்பெரிய ஜனநாயக நாடு என செல்லமாய் உலக ஊடகங்களால் வர்ணிக்கப்படும் இந்தியாவில் நடைபெற்ற ஒரு நிகழ்வே இந்திய ராணுவமும் அதன் துணைப் படைகளும் நாள்தோறும் காஷ்மீரிலும் வட கிழக்கிலும் வாடிக்கையாக நடத்தும் அட்டூழியங்களில் ஒன்றே 1989–2009 வரையிலான காலப்பகுதியில் மட்டும் காஷ்மீரில் 8,000 பேரை காணவில்லை. 70 ஆயிரம் பேர் போலி மோதல் சாவுகளிலும் அரசின் பாதுகாவலிலும் கொல்லப்பட்டுள்ளனர். இவர்களைப் பற்றிய தகவல்களை அறிய 1990 முதல் மட்டும் 15,000 மனுக்களை வழக்குரைஞர்கள் நீதிமன்றங்களில் பதிவு செய்துள்ளனர். இந்த மரண எண்ணிக்கை கூட, மிகக் குறைந்த அளவில்தான் கணக்கிடப்பட்டுள்ளது.

இவ்வாறு சட்ட விரோதமாகக் கொல்லப்படுபவர்களை – ராணுவம், துணை ராணுவப் படைகள், ஜம்மு காஷ்மீர் காவல் துறை என அனைவரும் ஒரே முறையில்தான் அப்புறப்படுத்தி வருகிறார்கள். இவ்வாறு கொல்லப்படுபவர்களின் சடலங்களை ஏதேனும் ஒரு கிராமத்தில் அல்லது சிறு நகரத்தில் உடனே புதைத்து விடுவது என்பதை வழக்கமாக

மாற்றிவிட்டிருக்கின்றனர். அண்மையில் காஷ்மீரில் (இந்தியா நிர்வகித்து வரும் காஷ்மீர் பகுதியில்) பல கும்பல் புதைகுழிகளை உலக மனித உரிமைகள் மற்றும் நீதிக்கான தீர்ப்பாயம் கண்டுபிடித்துள்ளது. இந்த அமைப்பைச் சேர்ந்த அங்கனா சாட்டர்ஜி, பர்வேல் ஆகியோர் மேற்கொண்ட மிகத் தீவிரமான ஆய்வுப் பணிகளின் விளைவாக – புதையுண்ட சாட்சியம் என்று தலைப்பிடப்பட்ட அறிக்கை நவம்பர் 2009 இல் வெளியிடப்பட்டது. உலக மனித உரிமைகள் மற்றும் நீதிக்கான தீர்ப்பாயத்தைச் சேர்ந்த மனித உரிமை ஆர்வலர்களுடன், காணாமல் போனவர்களின் பெற்றோர் அமைப்பும் இந்த ஆய்வை மேற்கொள்வதில் உறுதுணையாக இருந்தது. பாந்திபூரா. பாராமுல்லா, குப்வாரா பகுதி மக்களும் இந்த ஆய்வறிக்கை முழுவடிவம் பெற ஊக்கமளித்தனர்.

காஷ்மீரின் குப்வாரா, பாராமுல்லா, பாந்திபூரா மாவட்டங்களில் மட்டும் 2,700 கும்பல் புதைகுழிகள் அடையாளம் காணப்பட்டுள்ளன. இவை எல்லாம் எங்கோ ரகசியமாக உள்ள புதை குழிகள் அல்ல. பள்ளிக் கூடங்கள் நகர சதுக்கங்கள் வழிபாட்டு மைதானங்கள். காடுகள், வயல்வெளிகள் என மக்களின் வாழ்விடங்களளெங்கும் இது போன்ற திடீர் புதை குழிகள் அரும்பியுள்ளன. அலங்கரிக்கப்படாத, பெயரிடப்படாத, குறிக்கப்படாத மயானங்களாக இவை அங்கே முளைத்துள்ளன. இவற்றை மக்கள் தங்களின் அன்றாட பணிகளின் ஊடாக கவனித்து வருகின்றனர். அவர்களின் நினைவுகளில் இந்தப் புதை குழிகள் அசைக்க முடியாத இடத்தை ஆக்கிரமித்துள்ளன. ஆனால், இதைப் பற்றி அங்கு யாரும் அடுத்தவர்களிடமோ, தங்கள் குடும்பத்தாரிடமோ கூட பகிர்ந்து கொள்வதில்லை உள்ளி ருந்தே கொதிக்கும் நினைவுகளாக, அடக்குமுறையின் உறைந்த படிமங்களாக அவை உள்ளன.

அடையாளம் காணப்பட்ட 2,700 புதைகுழிகளில் 2,943 சடலங்கள் இருந்தன. இதில் பெரும் பகுதியானவை ஆண் சடலங்கள். 154 புதைகுழிகளில் இரண்டுக்கும் மேற்பட்ட சடலங்கள் இருந்தன. இந்த சடலங்கள் எல்லாம் பெரும் பாலும் இரவு நேரங்களில் கொண்டு வரப்பட்டு புதைக்கப்பட்டுள்ளன. பொதுவாக, இங்குள்ள கிராமப் பெரியவர்களுக்கு மாலையில் பிணங்கள் வருகின்றனஎன்ற தகவல் மட்டுமே ராணுவத்தினரிடமிருந்து வரும். இந்த சட்ட விரோதமான காரியத்தை செய்ய மறுத்தால், அடுத்த நாளே நீங்கள் எங்காவது அருகில் உள்ள மாவட்டத்தில் புதைக்கப்படும் பிணங்களின் குவியலில் இடம் பெறக்கூடும்.

பிறகு ஊர் பெரியவர்கள் ஆட்களை தயார் செய்து, குழிகளை வெட்டிவிட்டு கடும் குளிரில் காத்திருக்க வேண்டும். ராணுவ வாகனம் இரவில் மரண ஊர்தியாக வந்து சேரும் பெரும் பகுதியான சடலங்களில் வன்கொடுமைக்கான தடயங்கள் தீக்காயங்கள், தோட்டாக்கள் துளைத்த அடையாளங்கள் தான் இருக்கும் என புதைத்தவர்கள் தெரிவிக்கின்றனர். இந்த வேலைகளில் ஈடுபடும்



எவருக்கும் எந்த ஊதியமும் வழங்கப்படுவிதல்லை. பொதுவாக, புதைக்கப்படுவர்களைப் பற்றிய தகவல்களை ஆவணப்படுத்தும் நடைமுறைகள் எதுவும் பின்பற்றப்படுவதில்லை.

இருப்பினும் ராணுவத்தின் வாய்மொழியான அல்லது எழுதப்படாத ஒரே விளக்கம் இதுவே. இவர்கள் அனைவரும் வெளிநாட்டுத் தீவிரவாதிகள். இவர்கள் நம் நாட்டு எல்லைக்குள் நுழைய முயன்றனர் அல்லது வெளியே தப்பிக்க முயன்றனர்.

இத்தனை அடக்கு முறை களையும் கடந்து மக்களிடையே இந்த சடலங்களைப் பற்றி துல்லியமான விவரணைகள் நாட்டார் வழக்காறு போல, இந்த கிராமங்களில் இருளில் மிதக்கும் இரவு பனி மீது ஏறி தன் பயணத்தைத் தொடங்கும். இந்த அடையாளங்களை பெண்கள், ஆண்கள் தங்கள் சங்கேதக் குறியீடுகளின் மூலம் பகிர்ந்து கொள்வர். பல நேரங்களில் மாவட்டங்களை கடந்தும் கூட தொலைவிலிருந்து முதியவர்கள், பெண்கள் இங்கு வந்து இன்னும் தெளிவாகக் குறிப்புகளை கேட்டுக் செல்வார்கள். சில நேரங்களில் அவர்கள் தங்களின் பிள்ளையை கணவரை மீட்டும் சென்றுள்ளனர், மீண்டும் தோண்டி எடுத்து அடையாள த்தை தக்க சான்றுகள் மூலம் நிரூபித்து, தங்களின் சொந்த கிராமத்திற்கு எடுத்துச் சென்று அடக்கம் செய்துள்ளனர்.

**காஷ்மீரில் உள்ள ஒரே ஒரு மனநல மருத்துவமனையில் மட்டும் இதுவரை 68 ஆயிரம் பேர் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர், சமூக பொருளாதார நிலையின் சீர்குலைவு பதற்றம் தரும் மன அழுத்தம் என அன்றாட வாழ்வே பெரும் துன்பம்தான்,**

பாராமுல்லா மாவட்டத்தில் மட்டும் 1,122 புதைகுழிகள் காணப்பட்டுள்ளன. குப்வாரா மாவட்டத்தில் 1,453 புதைகுழிகளும், பாந்திபோரா மாவட்டத்தில் 125 புதைகுழிகளும் இருக்கின்றன. மூன்று மாவட்டங்களில் மட்டும் 2,943 சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன. உலக மனித உரிமைகள் மற்றும் நீதிக்கான தீர்ப்பாயத்தின் ஒருங்கிணைப்பாளரான டாக்டர் அங்கனா சாட்டர்ஜி, இத்தகை யமரணக் குழிகள் இனப்படுகொலை அல்லது போர்க் குற்றங்கள் மற்றும் மனித நேயத்திற்கு எதிரான குற்றங்களிலிருந்து அரசு தப்பிக்க முடியாது. இந்திய ராணுவத்தினரும் துணை ராணுவத்தினரும் தண்டனை மற்றும் விசாரணையிலிருந்து தப்பித்துக் கொள்ளவே. இத்தகைய மரணக் குழிகளை உருவாக்கி இருக்கலாம் என்கிறார்.

பாராமுல்லா மாவட்டத்தில் உள்ள கிச்சாமா கிராமத்தில் இரு மரணப் புதைகுழிகள் வெவ்வேறு இடங்களில் காணப்பட்டன. முதல் பகுதியில் 105 மரணக் குழிகள் இருந்தன. அதன் அருகில் 60 மரணக் குழிகள் இருந்தன. அந்த கிராமத்தில் உள்ள சமூகப் பெரியவர், நாங்கள் இது வரை 230 சடலங்களை அடக்கம் செய்ததாகத் தெரிவிக்கிறார். கட்டுப்பாட்டு எல்லைப் பகுதிக்குள் நுழைய முயன்ற வெளிநாட்டுத் தீவிர வாதிகள் தான் இவர்கள் என ராணுவத்தினர் தெரிவித்துள்ளனர். சில மரணக் குழிகளின் மீது மண்ணை குவியலாக குவித்தும், கற்களை குவித்தும் அடையாளப் படுத்தியிருக்கிறார்கள்.

அந்த கிராமத்தைச் சேர்ந்த ஒருவர் கூறும் பொழுது ஒரு முறை மூன்று பேருடைய எலும்புகள் மட்டுமே இங்கு கொண்டு வரப்பட்டன. தீவிரவாதிகளாகக் கருதப்பட்ட இந்த மூவரின் உடல்களும் முற்றாக எரிக்கப்பட்டிருந்தன. பாராமுல்லாவில் நடந்த தாக்குதல்களில் ஒரு வீட்டில் வைத்து இவர்கள் கொல்லப்பட்டதாக அவர்கள் தெரிவித்தார்கள். நாங்கள் ஒரே புதைகுழியில் அந்த மூவரின் எலும்புகளையும் புதைத்தோம். அவர்களின் உடைகளை அருகில் இருந்த மரத்தில் கட்டினோம். அந்த உடைகளில் இருந்த லேபிள்கள் அகற்றப்பட்டிருந்தன. அவர்களின் உடைமைகளிலிருந்த தாயத்துகளையும் மரத்தில் கட்டிவிட்டோம் என்கிறார்.

அதே கிராமத்தைச் சேர்ந்த

வேறு ஒருவர் திடுக்கிடும் மற்றொரு செய்தியை தெரிவிக்கிறார் பல சமயங்களில் இந்தியா ராணுவம் என்னை கைது செய்து சித்திரவதை செய்துள்ளது. நான் தீவிரவாதத்திற்கு உடன்படுவதாக அவர்கள் குற்றம் சாட்டினர். இங்குள்ள பல மரணப் புதைகுழிகளை நான் பாகிஸ்தானியர்களிடம் பணம் பெற்றுக் கொண்டு புதைத்ததாக அவர்கள் கூறினார்கள். அதுவும் சடலத்திற்கு 35,000 ரூபாயை நான் பெற்றதாகக் குற்றம் சாட்டினர். என்னைத் தொடர்ந்து எங்கள் கிராமத்தில் பலரையும் ராணுவத்தினர் அழைத்துச் சென்று சித்திரவதை செய்தனர். அதன் பிறகு எங்கள் கிராமமே கூட இனி. இது போல் பெயரிடப்படாத அடையாளமற்ற பிரேதங்களைப் புதைப்பதில்லை என முடிவெடுத்தோம். ஏறக்குறைய 2002 முதல் எங்கள் கிராமத்தில் யார் இறந்தாலும் இங்கு புதைக்காமல் அருகில் இருக்கும் சேஹால் கிராமத்தில்தான் புதைத்து வருகிறோம் என்கிறார்.

உலக மனித உரிமைகள் மற்றும் நீதிக்கான தீர்ப்பாயம் தனது அறிக்கையில் பட்டியலிட்டுள்ள 2,943 பிரேதங்களும் தங்களுள் ஒரு மிகப்பெரிய வரலாற்றை சுமக்கின்றன. அந்த சடலங்களின் பின்புலத்தில் தாய்மார்கள் மாரடித்து அழும் ஓலக் குரல் கேட்கும் எவர் மனதையும் கனக்கச் செய்யும். கடந்த 30 ஆண்டுகளாக இம்மக்கள் சந்தித்து வரும் அலைக்கழிப்பான வாழ்க்கை – பெரும் சலிப்பையும், வாழ்வின் மீது பற்றற்ற நிலையையும் ஏற்படுத்தியுள்ளது. எல்லா குடும்பங்களிலும் யாரேனும் ஒருவர் – இருவர் இல்லாத ஊனம் பெரும் மவுனமாய் உலவுகிறது. காஷ்மீரில் உள்ள ஒரே ஒரு மனநல மருத்துவமனையில் மட்டும் இதுவரை 68 ஆயிரம் பேர் சிகிச்சைக்காக அனுமதிக்கப் பட்டுள்ளனர். சமூக, பொருளாதார, நிலைகளின் சீர் குலைவு, பதற்றம் தரும் மன அழுத்தம் என அன்றாட வாழ்வே பெரும் துன்பம்தான். அரசுகளின் தோல்விக்கு மக்கள் மிகப் பெரும் விலையை கொடுத்து வருகின்றனர். ஒடுக்குமுறை, பலாத்காரம், சித்திர வதை, சுயநிர்ணய உரிமைக்கான போராட்டங்களை ஒடுக்குதல், சர்வதேச அழுத்தங்களை மதிக்காத போக்கு என காஷ்மீரில் துயரத்தின் புதிய அத்தியாயத்தை நடைமுறைப்படுத்துவதில் – ராணுவமும் அரசும் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றன.

இவர்களுக்கு வலு சேர்க்கும் வகையில் எல்.கே அத்வானி இங்கு அடிப்படைவாத சூத்திரத்தை மீண்டும் மீண்டும் ஒப்பித்து வருகிறார். அத்வானியின் புனைவுப்படி ஜம்முவை சேர்ந்த பண்டிதர்கள் தேச பக்தர்கள் என்றும், காஷ்மீர் முஸ்லிம்கள் தேச விரோதிகள் என்றும் தொடர்ந்து கூறிவருகிறார். அமர்நாத் யாத்திரைக்கு மெல்ல மெல்ல காவிச் சாயம் பூசிவிட்டது இந்த கும்பல் 1989 இல் 20 ஆயிரம் பேர் மட்டுமே அமர்நாத் யாத்திரையில் பங்குபெற்றனர். கடந்த ஆண்டு அது 5 லட்சத்தை எட்டி நிற்கிறது. இந்தப் பணத்தை அண்மைக் கால இந்தியாவின் பெரும் தொழில் நிறுவனங்கள் வழங்கியது கவனத்துடன் பார்க்கப்பட வேண்டிய ஒரு செய்தி. 100 ஏக்கர் நிலத்தை அமர்நாத் வாரியத்திற்கு வழங்கி அரசாங்கம் மீண்டும் அந்தப் பள்ளத்தாக்கு சந்தித்திராத சூழலை உருவாக்கி மேலும் பதற்றத்தை அதிகரித்து இத்தனை பெரும் எண்ணிக்கையில் ஆட்கள் கூடினாலே அந்த லிங்கம் கரைந்து விடும் என திணையியல் அறிஞர்கள் கூறி வருவது குறிப்பிடத்தக்கது.

அய்ந்து லட்சம் பயணிகளுக்கு அனைத்து வசதிகளையும் முஸ்லிம்கள் தான் செய்து வருகின்றனர். அங்கு சென்று வந்த அனைவரும் அந்த உபசரிப்பில்லயித்து வந்த தங்கள் பயண அனுபவங்களை கூறி வருவதை, பல செய்திகளின் வாயிலாகவும் தெரிந்து கொள்ள முடியும் ஆனால் இந்தப் பயணிகளின் எண்ணிக்கை அண்மைக்காலமாக அதிகரித்து வருவதற்குப் பின்னால் பல ரகசிய திட்டங்கள் இருப்பதை நம்மால் உறுதியாகக் கூற முடியும் இந்த 100 ஏக்கர் நிலம் அமர்நாத் வாரியத்திற்கு சுமூகமாக

கைமாற்றப்பட்டு எந்த சர்ச்சையும் ஏற்படாமல் அமைதி நிலவியிருந்தால் மெல்ல மெல்ல அங்கு இஸ்ரேல் பாணியிலான குடியிருப்புகளை நிறுவும் மறைமுகத் திட்டம் ஒன்று இந்த வலதுசாரிகள் வசம் இருந்தது.

இத்தகைய விஷமமான திட்டங்கள் அனைத்தும் அந்தப் பள்ளத்ததாக்கின் அமைதியை மேலும் சீரழிக்கவே உறுதுணை புரியும். இந்த யாத்திரைகளைப் பின்புலமாக வைத்து அங்கு அமைதி நிலவி வருவதாக அரசு உலக நாடுகளுக்கு அறிவித்து வருகிறது. அண்மைக்கால அறிக்கைகளில் காஷ்மீரை விவரிக்கும் பொழுது, அதனை கலவரம் நடந்து முடிந்த பகுதியாக (Post - Conflict Zone) அழைத்து வருகிறது. இது உலக சுற்றுலா பயணிகளை கவருவதற்கான திட்டமே. இருப்பினும் உலகின் பல முக்கிய நாடுகள் தங்கள் குடிமக்களை காஷ்மீருக்கு செல்ல வேண்டாம் என அறிவுறுத்துகின்றன.

கலவரம் நடந்து முடிந்த பகுதி என அரசு அழைக்க விரும்பினால், முதலில் அந்த சமூகத்துடன் உரையாடலைத் தொடங்கி, பதற்றங்களைத் தனித்து, மக்களின் பங்களிப்பை அதிகரித்து அமைதியை சென்றடையும் வழிமுறைகளை அவர்கள் கண்டறிய வேண்டும்!

காஷ்மீர் பிரச்சனையை புரிந்து கொள்வதற்கு அதன் வரலாற்றை அறிந்து கொள்வதுதான் தீர்வை அடைவதற்கான முதல் நடவடிக்கை. காஷ்மீர், வடகிழக்கு ஆகிய இந்தியாவின் இரு மாநிலங்களிலும் கடந்த 40 ஆண்டுகளாக பெரும் பதற்றமும் வன் முறையும் நிலவி வருகிறது 1947 இல் இந்தியா சுதந்திரம் பெற்று தனி நாடாக உருவானது முதல் இன்று வரை, அடுத்தடுத்து ஆட்சியில் உள்ளஅரசுகளின் குளறுபடியான முடிவுகள் ஆட்சியாளர்களின் குறுகிய நலன்களின் அடிப்படையிலான செயல் திட்டங்கள் மத்திய அரசின் வெளியுறவுக் கொள்கைகள் என எல்லாம் ஒருங்கிணைந்து அந்தப் பகுதிகளின் நிரந்தர சீர்குலைவிற்கு வழிவகுத்துள்ளன. பிரிவினையை மூலதன மாகக் கொண்டு செயல்படும் மதவாத சக்திகளும் தங்களின் தீவிர பிரச்சாரத்தால் ஒட்டு மொத்த சூழலை மேலும் இறுக்கமாக்கியுள்ளன. இது அங்கு ஓர் உரையாடலுக்கான சாத்தியத்தை நிராகரித்து மேலும் தவறான புரிதல்களுக்கே வழிவகுத்துள்ளது.

காஷ்மீர் பற்றி அரசும் ஊடகங்களும் இடையறாது செய்து வரும் அவதூறான பரப்புரையால் காஷ்மீரை தவிர்த்த இந்தியாவிற்கு இவர்களின் புனைவு சார்ந்த சித்திரம் தான் மனதில் தங்கியுள்ளது. இது ஏதோ அப்பாவி காஷ்மீர் பண்டிதர்களுக்கும் எந்நேரமும் ஆயுதம் ஏந்தி நிற்கும் காஷ்மீர் முஸ்லிம்களுக்குமான பகையாகவே சித்தரிக்கப்படுகிறது. இதில் மெய் எது பொய் எது என்பதை எடுத்துக் கூற வேண்டிய ஊடகங்களும் அறிவுஜீவிகளும் தோல்வியை தழுவி நிற்கின்றனர்.

அன்றைய பிரதமர் ஜவகர்லால் நேரு முதல் பின்னர் அங்கு ஆளுநராகப் பதவி வகித்த ஜக்மோகன் வரை தாங்கள் ஏதோ ராஜதந்திரத்தின் மூலம் ஒரு பெரிய சாதனையை செய்யப் போவதாக கற்பனை செய்து கொண்டு மென்மேலும் காஷ்மீர் மக்களின் வாழ்வை சீர்குலைத்துததான் மிச்சம் புவி அரசியலில் ஈடுபட்டு அந்தப் பகுதியின் பெரிய அண்ணனாக உருவெடுக்க முயன்ற இந்தியாவுக்கு இன்று நிரந்தர தலைவலியான காஷ்மீர் பிரச்சனை அந்தப் பகுதி மக்களின் வாழ்வை மட்டும் சீர்குலைக்கவில்லை. இந்திய அரசின் நிதி நிலையையும் அது ஆண்டுதோறும் கடுமையாக பாதிக்கிறது இத்தனை லட்சம் கோடிகள் வீணாக்கப்பட்ட பிறகும் கூட இந்தியா வசம் உள்ள காஷ்மீரின் வரை படத்தை வெளியிட அரசு இன்று வரை தயாராக இல்லை காஷ்மீர் வரைபடம் என நாம் நம்பும் ஒரு வரைபடம் முற்றிலும் கற்பனை யானது. அதனை கல்விக் கூடங்கள் ஊடகங்களின் வாயிலாக மக்களின் மனங்களில் பதிய வைத்து மொத்த சமூகத்தையும் மூளைச் சலவை செய்கிறது.

காஷ்மீர் பண்டிதர்களை அரசு பள்ளத்தாக்கிலிருந்து வெளியேற்றியது பெரும் முட்டாள்தனம் என்பதை பல்வேறு நிகழ்வுகள் எடுத்துரைக்கின்றன. ஜனநாயக வரியிலான எந்த செயல்பாட்டுக்கும் அங்கு சாத்தியம் இல்லை என உணர்ந்த பிறகுதான் இளைஞர்கள் வேறு வழிகளை நோக்கிச் சென்றனர். சகோதரர்களாக வரலாறு நெடுகிலும் வாழ்ந்து வந்த பண்டிதர்களையும் – முஸ்லிம்களையும் எதிர் – எதிராக நிறுத்த முடிவு செய்த இந்திய அரசின் நிலைப்பாடு கண்டனத்திற்குரியது. பண்டிதர்களை அவர்களின் விருப்பத்திற்கு மாறாகவே அரசு வெளியேற்றியது. காஷ்மீர் பண்டிதர்களின் வீடுகள் முகாம்களாகவும் மாற்றிக் கொண்டன அங்கிருந்து வெளியேற்றப்பட்ட காஷ்மீர் பண்டிதர்களின் குடும்பங்களுக்கு அதன் உறுப்பினர்களின் எண்ணிக்கையைப் பொறுத்து நிவாரணமும் அவர்களின் வீடுகளுக்கு பெரும் தொகையை வாடகையாகவும் மத்திய அரசு வழங்கி வருகிறது. இவர்களைப் போல் இந்திய அரசு வேறு எந்த இனக்குழுவிற்கோ பாதிக்கப்பட்டவர் களுக்கோ நிவாரணம் வழங்கியதில்லை பார்ப்பன அதிகார வார்க்கம்தான் நம்மை ஆண்டு வருகிறது என்பதற்கு வேறு சான்றுகள் வேண்டுமா?

உலகின் மிகக் கொடூரமான மனித உரிமை மீறலை அமெரிக்கா ஈராக்கிலும் ஆப்கானிஸ்தானிலும் நிகழ்த்தி வருவது நம் காலத்து வரலாறு. பிற நாடுகளை ஆக்கிரமித்துள்ள அமெரிக்கா – ஈராக்கில் ஒரு லட்சத்து 65 ஆயிரம் படையினரையும் ஆப்கானிஸ்தானில் 67 ஆயிரம் அமெரிக்க படையினரையும் நிறுத்தியுள்ளது. ஆனால், கடந்த 30 ஆண்டுகளின் தனது படைபலத்தை காஷ்மீர் பள்ளத்தாக்கில் பெருக்கியுள்ள இந்திய அரசு இன்றைய தேதியில் மட்டும் 6 லட்சத்து 67 ஆயிரம் ராணுவ வீரர்களை அங்கு நிறுத்தியுள்ளது. இது நமக்கு பல உண்மைகளை எடுத்துரைக்கிறது உலக அளவில் ஒரு நிலப்பரப்பில் மட்டும் இத்தனை அடர்த்தியான ராணுவ இருப்பு எப்பொழுதும் இருந்ததில்லை.

காஷ்மீர் மக்களின் விருப்பமெல்லாம் அவர்களின் இனக்குழு தன்மையைப் பாதுகாப்பதும் இந்திய தன்மையைப் பாதுகாப்பதும் இந்திய அரசின் இணைப்பு ஒப்பந்தப்படி காஷ்மீரின் தற்சார்பைப் பேணுவதும் தான். 2000 இல் அவுட்லுக் ஆங்கில ஏடு நடத்திய கருத்துக் கணிப்பை இங்கே நினைவுபடுத்துவது பொருத்தமானது. அது இவ்வாறு கூறுகிறது 74 சதவிகித மக்கள் தங்களின் காஷ்மீரில் அடையாளத்துடனேயே வாழ விரும்புகின்றனர். 16 சதவிகித மக்கள் காஷ்மீருக்கு கூடுதல் அதிகாரங்களுடன் கூடிய தற்சார்பு வேண்டும் என்கின்றனர் 2 சதவிகிதத்தினர் பாகிஸ்தானுடன் இணைய விரும்புகின்றனர். 37 சதவிகிதத்தினர் இந்திய அரசியல் அமைப்புக்கு உட்பட்டுத் தீர்வு காணவே விரும்புகின்றனர் காஷ்மீரிகளின் உண்மை மன நிலையை மிகத் துல்லியமாக வெளிக்கொணர்ந்த கருத்துக் கணிப்பு இது. ஆனால் இந்த 2 சதவிகித பிரிவினை மன நிலை உள்ளவர்களுக்காக இந்திய அரசு மொத்த பள்ளத்தாக்கையே ஆயுதக் கிடங்காக மாற்றி, மக்களை சித்திவரதை செய்வது எப்படி நியாயமாகும்?

அரசமைப்புச் சட்டத்திற்கு உட்பட்டு தீர்வு காண்பதைத் தவிர்த்து காஷ்மீர் மக்களை போருக்கு மத்தியில் வாழ நிர்பந்தித்து வருகிறது இந்திய அரசு. காஷ்மீர் இந்தியாவின் ராணுவ சோதனைக்கூடமாகவே உள்ளது என்றால் அது மிகையல்ல அங்கே நீங்கள் யாரை வேண்டுமானாலும் வீடு புகுந்து கைது செய்யலாம். பள்ளிக்குச் செல்லும் மாணவியை வீதியில் வைத்து சுடலாம். பேருந்து நிலையத்தில் காந்திருப்பவரை கைது செய்து என்ன குற்றச்சாட்டை வேண்டுமானாலும் சுமத்தலாம். பெண்களை பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்தலாம் ஆயுதத்தை சோதித்துப் பார்க்க சிலரை கொல்லலாம். இன்னும்,

இன்னும் எது வேண்டுமானாலும் செய்யலாம் ஆயுதப்படைகள் சிறப்பு அதிகாரச் சட்டம் 1958, பதற்றப் பகுதிச் சட்டம் 1976, ஜம்மு காஷ்மீர் பொது மக்கள் பாதுகாப்பு சட்டம் 1978, தீவிரவாத மற்றும் சீர்குலைவு நடவடிக்கைச் சட்டம் 1985, பொடா 2002.... இந்தப் படை போதுமா இன்னும் கொஞ்சம் வேண்டுமா என தேசபக்தர்களின் முழக்கங்கள் காதில் கேட்கின்றன.

உங்களுக்கு தேவையானது எல்லாம் நீங்கள் இந்திய ராணுவத்தின் உடையை அணிந்திருக்க வேண்டும். இப்படி நீங்கள் செய்யப்போகும் தேசபக்த காரியங்களுக்கு ஏற்ப இந்திய அரசியல் சாசனத்தை வளைத்து, நிமிர்த்தி, திருத்தி நாள்தோறும் ஒரு சட்டத்தை உருவாக்கி தேச பக்தராக அறிவித்துக் கொண்டேயிருக்கும் தேசத்தின் பெயரால் அரசு வன்முறையை நியாயப்படுத்தும் ராணுவத்தினருக்கு ஒவ்வொரு குடியரசு நாள் விழாவிலும் பதக்கங்கள் வழங்கிப் போற்றும் சிந்தனையில் மாற்றம் ஏற்படாதவரை காஷ்மீரில் மாற்றம் என்பதற்கு சாத்தியமில்லை.

காஷ்மீரில் மட்டும் கடந்த 20 ஆண்டுகளில் ஒரு லட்சம் பேர் ராணுவத்தால் அனாதைகளாக ஆக்கப்பட்டுள்ளனர். காணாமல் போனவர்களின் மனைவிகளுக்கு விதவை ஓய்வூதியத்தை தர மறுக்கிறது அரசு. இவர்கள் அரை விதவைகள் இவர்களின் கணவர்கள் இறந்து விட்டதற்கான ஆதாரம் இருந்தால் மட்டுமே ஓய்வூதியம் வழங்க முடியும் என்கிறது அரசு. மறுபுறம் ராணுவ வீரர்களின் தற்கொலை விகிதம் ஏறுமுகத்தில் உள்ளது 2002 – 2009 க்குள் மட்டுமே 169 ராணுவத்தினர் தற்கொலை செய்து கொண்டுள்ளனர்.

கடந்த 50 ஆண்டுகளாக காஷ்மீரில் நடைபெற்று வரும் சூழலை கூர்ந்து கவனித்தால் ஒன்று மட்டும் தெளிவாகப் புரிகிறது. இந்தியா, பாகிஸ்தான் ஆகிய இருநாட்டு மக்களும் இணக்கமான நல்லுறவையே விரும்புகின்றனர் இருநாட்டு எல்லைநெடுகிலும் உள்ள மக்களிடையே பண்பாட்டு ரீதியிலான ஒத்திசைவும் பரிமாற்றமும் இன்றளவும் நிலவுகின்றன. ஆனால் இரு நாட்டு அரசுகளும் இருபுறமும் பதற்றம் நிலைப்பெறவே விரும்புகின்றனர். மக்களின் கோரிக்கைகள் முன்னிலை பெறும்போதும் மக்களுக்கு எதிரான சட்டங்கள் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்படும் பொழுதும் – காஷ்மீர் பிரச்சனை செய்தியாக இடம்பெறுவது திட்டமிட்ட ஒன்றாகவே தோன்றுகிறது.

இந்த மரணப் புதைகுழிகளை சடலங்களை மேலும் சிதைக்காமல் பாதுகாத்து வெளிப்படையான ஒரு விசாரணைக்கு அரசு உத்தவிட்டு குற்றம் நிரூபணமாகும் தருணத்தில் கடும் நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் கொடூரமான இந்த சட்டங்களை அரசு திரும்பப் பெற்றால் தான் அங்கு மக்கள் ஜனநாயக வழியிலான தங்கள் உரிமைகளை முன்வைத்துப் போராடி தங்கள் சுயநிர்ணய உரிமையைப் பெற இயலும். இல்லை எனில் பாராமுல்லாவில் ஒரு கிராமப் பெரியவர் கூறியது போல்தான் எதிர்காலத்தில் நடக்கும்.

குழந்தைகள் எங்களிடம் இந்த புதை குழிகளைப் பற்றி கேட்கிறார்கள் ஏன் இங்கே இத்தனை ராணுவத்தினர் உள்ளனர் என்பதைப் பற்றியும் மீண்டும் மீண்டும் கேட்கிறார்கள் வன்முறையில் இறப்பது இயற்கையானது தான் என்கிற புரிதலை அவர்கள் வளரும் போதே ஏற்படுத்திக் கொள்கிறார்கள் – இந்தப் பெரியவரின்வரிகளுக்கு பதில் சொல்ல முடியாமல் மொத்த சேதமும் இந்த கணத்தில் தலைகுனிந்துதான் நின்றாக வேண்டும்.

# இஸ்லாத்தின் பக்கம் மக்களை அழைக்கும் இலட்சிய ஓட்டத்தில் தங்களைத் தந்த மழவர்கள்





**சென்ற இதழ் தொடர்ச்சி....**

அரசுப் பணியில் இருப்பவர் களுக்கு குறிப்பாக முஸ்லீம் களுக்கு அடிப்படை உரிமைகள் எதுமில்லை என்ற ஒரு புது விதியை உளவுத்துறை செயல் படுத்தி கொண்டிருந்தார்கள்.

ஆமாம்! ஆசிரியர் அவர்கள் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்ட தோடு, இஸ்லாத்தை பிரச்சாரம் செய்தார்கள். இதை தடுக்கவே பணி நீக்கம் செய்ய எல்லா முயற்சிகளையும் மேற் கொண்டது உளவுத் துறை.

அதிலிருந்து விடுபடவே தன்னார்வ ஒய்வு. இல்லையேல் வெறுங்கையோடு தான் இல்லம் திரும்பியிருப்பார் ஆசிரியர்.

ஆனால் என்ன பயன் இயக்கவாதியைப் போல வேஷம் போட்ட ஒருவர் அந்த பணத்தை ஆசை வார்த்தை காட்டி பிடுங்கிக் கொண்டார்.

அந்த பணத்தை சின்ன பின்னாபடுத்திவிட்டார். 25 ஆண்டுகளாக கடுமையான உழைப்பில் கிடைத்திட பணம் பாழ்பட்டது.

ஆசிரியர் பின்நாளில் என்னிடம் வந்து பணம் பெற்றவரிடம் பணம் பெற்றுக் கொண்டதற்கு ரசீது வாங்கி தாருங்கள் எனக் கேட்டார்கள்.

இயக்கத்தைக் காட்டி பணத்தைப் பறித்தவரிடம் எழுதி வாங்கிக் கொடுத்தேன். இப்போது ஆசிரியரிடம் மிகவும் தெளிவாகச் சொன்னேன். எழுதி வாங்கிடும் இந்தக் காகிதம் எந்தப் பலனுமற்றது. உங்கள் பணத்தைக் கொடுக்குமுன் எல்லா விவகாரத்தையும் என் பார்வைக்கும் கொண்டு வந்திருக்க வேண்டும் என்றேன்.

ஆசிரியர் வருத்தப்பட்டார். இந்த இயக்கவாதியைப் போல் நடித்த நடிகரின் நாடகங்களைச் சொன்னார்.

நான் அந்தப் போலியைக் கண்டித்தேன்.

ஆனாலும் பணம் பாழ்பட்டது பட்டதுதான் ஆசிரியரைத் தேற்றினே். இஸ்லாமிய இலட்சிய ஓட்டத்தில் சிலர் நடித்து விட முடிகின்றது. இவர்கள் பச்சையாக தெரியும் பக்கங்களில் சாய்பவர்கள் இலட்சியவாதிகள் இவற்றைப் பற்றிக் கவலைப்படக் கூடாது என்றேன். அதையும் தாங்கிக் கொண்டு ஹிதாயத்துல்லாஹ் அவர்கள் தாவா களத்தில் உறுதியாக நின்றார்கள்.

இங்கே ஓர் அதிசய நிகழ்வு, இஸ்லாத்தை ஏற்றுக் கொண்ட ஆசிரியர் ஹிதாயத்துல்லாஹ் அவர்களை முஸ்லிம்களைப் போல் அதிலும் இயக்கவாதியைப் போல் நடித்த ஒருவர் ஏமாற்றி விடுகின்றனர். ஆனாலும் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்ட ஆசிரியர் அவர்கள் இஸ்லாமியப் பிரச்சாரத்தில் சளைக்காமல் நின்றார்.

இதை ஒரு பெரிய தியாகம் எனலாம் நிலை குலையாமல் நின்றார்கள் என நாம் ஆசிரி யரைப் பற்றிச் சொல்லும் போதெல்லாம், இவற்றை யெல்லாம் நினைவு கூரிட வேண்டும்.

வேறுயாராக இருந்தாலும், என்னே இந்த இயக்கவாதிகள் எனக்கூறி, நீங்களாவது உங்கள் இயக்கமாவது எனக் கூறி இலட்சியப் பயணத்தைப் பாதியி லேயே நிறுத்தி இருப்பார்கள்.

பணவிஷயத்தில்

ஆசிரியருக்கு நடந்த துரோகம் இத்தோடு நிற்கவில்லை.

இதே பிரகஸ்பதி ஆசிரியரின் மகனை வேலைக்கு வைத்துக் கொள்வதாக கூறிக் கொண்டார். ஆசிரியர் போட்ட பணத்திற்கு அதாவது அலைக்கழிக்கப்பட்ட மூன்று லட்சம் ரூபாய்க்கு இலாபத்தில் பங்கு தரப்படும் என்றும். மகனுக்கு அவனுடைய உழைப்பிற்கேற்ற ஊதியம் தரப்படும் எனவும் பேசிக் கொண்டார். அந்த வகையில் சில காலம் ஊதியங்களையும் வழங்கினார்.

பின்னாளில் இந்த ஊதியத்தையே ஆசிரியரிடம் எடுத்துக் கொண்ட பணம் எனக் கணக்கும் காட்டினார்.

எந்த மனிதனும் இதில் ஆதங்கப்படுவான். அதுபோல் ஆசிரியரும் ஆதங்கப் பட்டார். ஆசிரியரின் சாது மிரண்டால் எதுவும் நடக்கும்.

நான் ஆசிரியரைச் சமானதாப்படுத்தினேன். அந்த ஈனச் செயலுக்குப் பின்னர் எவரும் இஸ்லாமியப் பிரச்சாரக் களத்தில் நிற்க மாட்டார்கள்.

ஆனால், தன் மக்களின் இன இழிவு ஒழிய வேண்டும் என்றால் இஸ்லாம்தான் ஒரே வழி என்பதில் உறுதியாக இருந்ததால் இந்தப் பதர்களின் பாதகங்களை அவை பெரியவையே ஆனாலும் அதைக் கண்டு கொள்ள வில்லை. இலட்சியப் பயணத்தில் இரண்டற கலந்து நின்றார். இறுதிவரைப் பயணித்தார்.

ஆசிரியர் அவர்கள் தாவா களத்தில் மட்டுந்தான் நிலைகுலையாமல் நின்றார்கள். வேகத்தோடு செயல்பட்டார்கள் என்றில்லை. நான் எனக்கென தொடங்கி பின்னர் தாரை வார்த்துத் தந்த விடியல் வெள்ளி பத்திரிக்கையிலும் அதிக ஆர்வங் காட்டினார்கள்.

விடியலில் வரும் கட்டுரைகள் ஆழமானவையாக இருந்தாலும், எழுத்துப் பிழைகளின்றி வந்திட வேண்டும் என விரும்பினார். அதற்காக, விடியல் வெள்ளி முடிவாகும் நாள்களில் சென்னை வந்து பிழை திருத்தங்களில் தன்னை ஈடுபடுத்திக் கொள்வார். அந்த மூன்று அல்லது நான்கு நாள்களிலும் என் வீட்டு விருந்தினர். நான் அறிவகம் செல்லும் நாள்களில் அவர் வீட்டு விருந்தாளி. இப்படி இஸ்லாமியச் சகோதரத்துவம் எங்களை இறுகக் கட்டிப் பிடித்துக் கொண்டிருந்தது.

விடியலும் பிழைகளின்றி வெளி வந்தது. விடியலில் தன்னுடைய ஈடுபாட்டை பிழை திருத்தத்தோடு நிறுத்திட வில்லை.

அதனை வீடு வீடாக வீதி, வீதியாக கொண்டு விற்பனை செய்வதிலும் அதிக ஈடுபாட்டைக் காட்டினார்கள். ஆசிரியர் ஹிதாயத்துல்லா காட்டிய ஆர்வம் அலாதியானது. வெறும் ஐம்பது பிரதிகள் விற்றுக் கொண்டிருந்த விடியல் வெள்ளியை அந்தப் பகுதியில் ஆயிரம் வரைக் கொண்டு சென்றதில் அலாதியான பங்களிப்பு ஆசிரியருக்கும் சொந்தம். இந்த வகையில் அவரது ஆசிரியர் பதவிப் பறிபோனது ஒரு நல்ல வாய்ப்பு என்றேபட்டது.

விடியல் வெள்ளி, பத்திரிக்கையின் வளர்ச்சியே பின்னர் மனித நீதிப் பாசறை என்ற அமைப்பின் வளர்ச்சியாக வும் அமைந்தது. இதனால் ஆசிரியரின் விடியல் வெள்ளி ஈடுபாடு இயக்க வளர்ச்சியின் ஈடுபாடு என்றால் அது மிகையல்ல ... தொடரும் (இன்ஷா அல்லாஹ்)


**ஹலால் இந்தியா நிறுவனத்தின் சார்பில்**

இன்ஷா அல்லாஹ் வருகின்ற 22.5.2010 அன்று ஹலால் உணவு அனைவருக் கும் என்ற தலைப்பில் ஒரு கருத்தரங்கம்

இடம்

ராஜ் பேலஸ் டி.டி.கே. ரோடு, சென்னை.

நேரம்

காலை 10 மணி முதல் மதியம் 1 மணி வரை நடைபெற உள்ளது.

இதில் ஜனாப். முஃப்தி உமர் ஷெரீப் காஸிமி, ஜனாப். முஹம்மது ஜின்னா போன்றோர் உரையாற்ற உள்ளனர். கலந்து பயனடை யவும்.

தொடர்புக்கு

9884243402

தொடர் 11


புதைக்கப்பட்ட மக்கள்

மறைக்கப்பட்ட வரலாறுகள்

# பெய்ருத்திலிருந்து ஜெரூசலம் வரை

டாக்டர் அங் சுவீ

தமிழ் வடிவம் : மு.குலாம் முஹம்மத்




காஸா மருத்துவமனை நோக்கி விரைந்த தீவிரவாதக் குழுக்களிடம், அவர்களின் எஜமானர்களான இஸ்வேலர்கள் தெளிவான பல உத்தரவுகளைப் பிறப்பித்திருந்தார்கள் அவை:–

காஸா மருத்துவ மனைதான் நாம் செத்தாகி விட வேண்டும் என விரும்பும் பாலஸ்தீன முஸ்லீம்களைக் காப்பாற்றிக் கொண்டி ருக்கின்றது. ஆகவே அதற்கு முற்றுப்புள்ளி வைத்தாக வேண்டும்.

காஸா மருத்துவமனைக்கு மருந்துகள் கிடைத்துக் கொண்டி ருக்கும் போதெல்லாம் அங்கே காயம்பட்டு வருபவர்களை யெல்லாம் காப்பாற்றிக் கொண்டே இருப்பார்கள். இந்தக் காப்பாற்றும் முயற்சிகளுக்கு முற்றுப்புள்ளி வைத்திட வேண்டும்.

ஆகவே மருந்துகளைக் கொண்டு வருபவர்கள் யாராக இருந்தாலும் அவர்களைத் தாக்கிடவோ தகர்த்திடவோ தயங்கிடக் கூடாது.

அனைத்திற்கும் மேலாக அஜீரா ஹாலித் என்ற பெண்ணால்தான் காஸா மருத்துவமனை இயங்கிக் கொண்டிருக்கின்றது. அவளை சந்ததி இல்லாமல் அழித்திட வேண்டும்.

இந்த உத்திரவுகள் உறுதி யாகச் செயல்படுத்தப்பட வேண்டும் என்ற உறுதியுடன் யூதர்களின் ஏவலர்கள் வந்து கொண்டிருந்தார்கள்.

இந்தப் பின்னணியில்தான், அஜீசா மருந்துகளையும் உணவுப் பொருள்களையும் பெறுவதற்கான அடிப்படை ஏற்பாடுகளைச் செய்து விட்டு வேக வேகமாக காஸா மருத்துவ மனை நோக்கி விரைந்து கொண்டிருந்தார்.

அவள் பின்னே அவளைக் கொலை செய்வதை இலட்சிய மாகக் கொண்டவர்களும் விரைந்து கொண்டிருந்தார்கள்.

காஸா மருத்துமனைக்குள் ஆள் புகுந்தபோது. அங்கே ஓலங்களும் ஒப்பாரிகளும் சற்றும் குறைவின்றிக் கேட்டுக் கொண்டிருந்தன.

யூதர்களின் குரூர தாக்கு தலுக்கு உள்ளானவர்கள் நொந் தும் பிய்ந்தும் கிடந்தார்கள்.

ஆஜிசா வந்தவுடன் அவளைப் பாது காப்பான இடங்களுக்கு அனுப்பிட வேண்டும் என முடிவு செய்திருந்தோம்.

ஆஜிசா மாலை 04.30க்கு வந்திருந்தாள். அவளை தொடர்ந்து செம்பிறைச் சங்கத்தைச் சார்ந்தவர்களும் செஞ்சிலுவைச் சங்கத்தைச் சார்ந்தவர்களும் வந்தார்கள்.

செம்பிறை சங்கத்தைச் சார்ந்தவர்களும், செஞ்சிலுவைச் சங்கத்தைச் சார்ந்தவர்களும் நிறைய மருந்துகளையும். உணவுப் பொருள்களையும் கொண்டு வந்தார்கள்.

அத்தோடு இன்னொரு தகவலையும் கொண்டு வந்தார்கள்.

அது யூதர்களின் கைக்கூலிகள் ஏற்கனவே காஸா மருத்துவமனைக்குள் ஊடுருவி விட்டார்கள். அவர்கள் காஸா மருத்துவமனையை முற்றாக வேவு பார்த்தவுடன். முழு அளவு தாக்குதலில் நடத்த இருக்கின்றார்கள் என்பதுமே அந்தச் செய்தி.

செய்தி என் காதுகளில் வீழ்ந்ததும் நான் அஜிசா இருக்குமிடம் விரைந்தேன். ஆஜீசாவிடம் உடளே இங்கிருந்து சென்றாக வேண்டும் எனச் சொல்லியாக வேண்டும். அவளே விடாப்பிடியாய் இங்கேதான் இருப்பேன் என்றால் என்ன செய்வது,

அன்றொரு நாள் அவள் நான் மருத்துவமனையைக் காப்பாற்றிட யூதர்களோடு போர் புரியப் போகின்றேன் என சொன்ன போது நான் மிகவும் வேகமாகத் தடுத்தேன்.

ஆனால் இப்போது நானே அவளைப் பாதுகாப்பான இடத்திற்கு அனுப்பி வைத்திட தயாரானேன். நான் நன்றாக அறிவேன், அவள் நிச்சயமாக ஒத்துக் கொள்ள மாட்டாள் என்பதை. எனினும் நிலைமையைப் புரிய வைத்திட முயற்சி செய்வது என முடிவு செய்தேன்.

அதேபோல் அஜீஸா வந்ததும், ஒடோடிச் சென்றேன். அவளிடம். நீ இங்கிருந்து போய்விடு! உன்னைக் காப்பாற்றிட வேண்டியது காலத்தின் கட்டாயம். ஆகவே விரைந்து சென்று செம்பிறை சங்கத்திடம் சேர்ந்து விடு என்றேன்.

அங்கே நின்று கொண்டிருந்த செம்பிறைச் சங்கத்தினர் தங்கள் வாகனத்தில் அழைத்துச் சென்றிட தயாராகி இருப்பதாக் கூறினார்கள்.

அஜீஸா சொன்னாள், ஆமாம் நான் போகத்தான் போகின்றேன். நான் இல்லாமல் இருப்பது காஸா மருத்துமனைக் காப்பாற்றுமேயானால் நான் போகின்றேன். ஆனால் நான் எனக்கென ஒர் பாதுகாப்பு இடத்தைத் தேடிப் போக விரும்பவில்லை. மாறாக நான் இஸ்ரேலின் இராணுவ தளபதிகளிடம் போகின்றேன், அவர்களிடம். காஸா மருத்துவமனையில் பணி செய்யும் தன்னார்வ தொண்டர்களையும் மருத்துவர்களையும், தாதிப் பெண்களையும் காப்பற்றுங்கள் எனக் கேட்கப் போகிறேன். இதிலிருந்து போர் தொடங்கும் என்றார்.

அத்தோடு அஜீசா நான் காஸா மருத்துவமனையை விட்டுப் போகுமுன், காஸா மருத்துவமனையை நம்பி அடைக்கலம் புகுந்திருப்பவர்களிடம் காஸா மருத்துவமனை எந்த விதத்திலேயும் பாதுகாப்பான இடமில்லை என்பதை அனைவருக்கும் சொல்லி



விட்டுத்தான் போவேன் என்றும் கூறினாள்.

நாங்களும் அப்படியே தான் நினைத்தோம். ஆகவே நாங்களே அந்த அறிவிப்பைச் செய்து விடுவோம் எனக் கூறினோம். அத்தோடு சற்றும் தாமதமில்லாமல் அறிவிப்பைச் செய்யத் தொடங்கினோம்.

மக்கள் சற்றும் அசையவில்லை. உண்மையில் அவர்கள் செய்வதற்கென அவர்களுக்கொரு இடமிருக்கவில்லை அவர்கள் எல்லா நம்பிக்கையும் இழந்தவர்களாக எங்களையே ஏறிட்டுப் பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

இரத்த வெள்ளத்தில் மிதந்த அந்த மக்களை மழலைகளை கட்டிப் பிடித்து அழுதார்கள். எங்களுக்கோர் இடம் சொல்லுங்கள் என்றார்கள்.

திரும்பிப் பார்த்தேன். அஜீசாவைப் பற்றிப் பிடித்துப் பல பெண்கள் அழுது கொண்டிருந்தார்கள்.

# வேர்கள் பதிப்பகம்

| | | |
|---|---|---|
| 1. | சாதி ஒழிந்தது -தலித் இலக்கியத்தின் ஓர் முன்னோடி<br>மூன்றாம் பதிப்பு டிஎம் மணி | விலை 40.00 |
| 2. | ஆப்கானிஸ்தான் முஜாஹித்களின் தியாக வரலாறு -<br>மூன்றாம் பதிப்பு - மு குலாம் முஹம்மது | விலை 60.00 |
| 3. | செந்தமிழ் நாட்டுச் சேரிகள் -<br>டிஎம் மணி | விலை 40.00 |
| 4. | சிறையில் எனது நாட்கள் - ஜைனப் அல் கஸ்ஸாலி (மிஸ்ரி)<br>தமிழில் மு குலாம் முஹம்மது | விலை 90.00 |
| 5. | அஹ்மதாபாத் குண்டு வெடிப்பு உண்மைகள் -<br>மு. குலாம் முஹம்மது | விலை 10.00 |
| 6. | டெல்லி குண்டுவெடிப்பும் பாட்லா ஹவுஸ் படுகொலையும் -<br>மு. குலாம் முஹம்மது | விலை 10.00 |
| 7. | நாடாளுமன்றத் தாக்குதல் வெளிச்சத்திற்கு வந் த உண்மைகள் -<br>மு. குலாம் முஹம்மது | விலை 15.00 |
| 8. | மால்கம் எக்ஸ் (விரிவாக்கப்பட்ட நான்காம் பதிப்பு)<br>மு. குலாம் முஹம்மது | விலை 80.00 |
| 9. | கர்கரேயை கொன்றது யார்? ( இரண்டாம் பதிப்பு - தமிழ் ) | விலை 150.00 |
| 10. | கர்கரேயை கொன்றது யார்? (மூன்றாம் பதிப்பு - ஆங்கிலம், உருது ) | விலை 300.00 |
| 11. | கர்கரேயை கொன்றது யார்? (உருது ) | விலை 200.00 |
| 12. | சாதி ஒழிந்தது - ஆங்கிலம் (முதல் பதிப்பு ) | விலை 40.00 |

விரைவில்

1. பாலஸ்தீன் முஸ்லிம்கள் அகதிகளான வரலாறு (விரிவாக்கப்பட்ட பதிப்பு)
2. தாலிபன்களின் பிடியில்... யுவான் ரிட்லி (தமிழில்)
3. நாம் பிரிந்து விட வேண்டாம் - யூசுப் அல் கர்ளாவி
4. நான் ஏன் முஸ்லிமானேன்?

# வைகறை விஷன்

## <u>வீடியோ - சிடி, டிவிடி</u>

1. நாளைய முஸ்லிம் பெண்கள் ( கா.மு. இல்யாஸ் ரியாஜி)
2. இஸ்லாம் தாக்கப்படுவது ஏன்? (மு. குலாம் முஹம்மது)
3. இஸ்லாமிய நாகரிகம் (மு. குலாம் முஹம்மது)
4. முஸ்லிம்கள் பலமும் பலவீனமும் (கா.மு. இல்யாஸ் ரியாஜி)
5. இஸ்லாம் - சோதனைகள், சவால்கள், சாதனைகள் (எம்.ஜி.எம்)
6. எதிர்காலம் இஸ்லாத்திற்கே (கா.மு.இல்யாஸ் ரியாஜி)
7. கர்கரேயை கொன்றது யார்? புத்தக வெளியீட்டு விழா (சென்னை, மதுரை, திருச்சி)